www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ஜூன். 12-18, 1994

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY. முரசு 54


அதிரடி அயலாத்துரையாருக்கு கொச்சிக்காய் பொடியார் மடல்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கிழக்கு மாகாணத்தில் குறிவைக்கும் தமிழ்க் கட்சிகள்!

## வடக்கு-கிழக்குக்கு உடனடித் தேவை அரசியல் தீர்வு

அரசியல் அலசல்





உயரமான காதல்

சினிவிசிட்

கிரைம் செய்தி

ஆளுநரைக் கொன்ற காரிகை

## ஒட்டியபடி வாழும் இரட்டையர்



ஆச்சரியப்படங்கள்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பாவம்

ஆதாமின் வாயிலாகவே பாவம் இவ்வுலகத்தில் நுழைந்தது. ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. பாவம் என்பது தேவனுடைய கட்டளைகளை மீறுதலேயாகும்.


ஒவ்வொரு மனிதனும் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டுதான் சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கின்றது.

பாவமில்லாத மனிதன் இல்லை. "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்." (ரோமர் 3:23) இந்த பாவத்திலிருந்து விடுபட வேண்டுமானால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாக விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தாலே பாவங்கள் கழுவப்பட வேண்டும்.

இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) சொல்லுகின்றார். ஒருவன் பாவத்தினின்று தன்னைக் கழுவிச் சுத்திகரித்துக்கொள்ள முடியாது. பாவத்தினை போக்கும் நன்மருந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வாயிலாக வருகிற பாவ மன்னிப்பாக இருக்கிறது.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி 28:13) ஆகையினால் எங்கள் பாவங்களை நாம் அறிக்கையிடுவோம். சின்ன சின்ன பாவங்கள்தான் பெரிதாக நம்முடைய வாழ்க்கையை நாசப்படுத்திவிடும்.

## ஆன்மீகம்



எங்கள் பாவங்கள் எங்களை தொடர்ந்து பிடிக்கும். மனிதனுடைய ஆத்துமாவை மீட்கவே இயேசு சிலுவையில் மரித்தார். இன்றே நம் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடுவோம். "கர்த்தரில் அன்பு கூருகிறவர்களே! தீமையை வெறுத்து விடுங்கள்" (சங்-97:10)

ஜெயமணி போல்-கொழும்பு-14.

## இறையச்சம் (அலி (றழி) அறிவுரை)

இறையச்சத்திற்கு உன் இதய பரப்பில் முழுமையான இடத்தைக் கொடு. அது உன் இதயத்துக்குப் பெருமை கொடுக்கும். இறையச்சம் இல்லாதவர்கள் எந்தத் தீமையையும் துணிந்து செய்வர்.

இறைபணியில் என்றைக்கும் குறை வைக்காதே. இறைவனைப் பற்றிய எண்ணம் எப்போதும் உன் மனதில் இருக்கட்டும். இறைவனைப் பற்றிய சிந்தனை புனிதமானது- சிறப்பு மிக்கது. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள மகத்தான தொடர்பு இது. அதைவிட மேலானது எங்கும் கிடையாது.

இந்த வழியில் நடந்து பார். அப்போதுதான் என் வார்த்தையிலுள்ள உண்மை உனக்குத் தெரியும்.

நல்ல அறிவுரைகளைக் கேட்டு அமுல் நடத்த முற்படு. அதற்காக அறிவுரை என்ற பெயரில் கூறப்படுவதையெல்லாம் ஏற்றுக்கொண்டுவிடாதே. இம்மையைப் பற்றியுணர்ந்து செயலாற்று. இவை உன் உள்ளத்தின் ஆற்றல்களுக்குப் புத்துயிர் அளிக்கும் திறமை வாய்ந்தவை.

மனிதனது முன்னேற்றங்கள் அத்தனைக்கும் நம்பிக்கையே அடிப்படை. மனிதன் செய்யும் அரும் செயல்கள் அத்தனையும் ஆழமான நம்பிக்கையிலிருந்தே உருவாகின்றன. நம்பிக்கை இழந்தவர்கள் உலக வரலாற்றில் என்றைக்கும் முன்னேறியது கிடையாது.

எனவே நீ என்றைக்கும் நம்பிக்கையை இழந்துவிடாதே. உன் உள்ளத்தில் அசையாத நம்பிக்கைக்கும் 'ஆழமான அறிவுக்கும் இடம் கொடு. இவை உன் நெஞ்சத்தில் ஒளியைத் திணிக்கும் ஆற்றல் பெற்றவை.

ஜொஹறா ஹுஸைன்-தியத்தலாவ.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஓராண்டு மலரின் பின்
மேலும் உயர்ந்திருக்கிறது உற்சாகம்!
இனிய வாழ்த்துக்களை
மடலில் அனுப்பிய-செவியில் சொல்லிய
அனைத்து அன்புள்ளங்களுக்கும்
இதய நன்றி!

ஆண்டு நிறைவோடு வந்த முரசு
காலையில் தம் கரம் வந்து சேர்ந்தவுடனேயே
அக மகிழ்ந்து-
அந்த மகிழ்வை உடனே தெரிவித்த
வாசக உள்ளங்களை நினைக்கையில்
நெஞ்சம் நெகிழ்ந்து போனது!

வாசக நெஞ்சங்கள் பலர்
ஆலோசனைகள் பலவற்றை
அன்புரிமையோடு தந்துள்ளீர்கள்.
முரசு கவனத்தில் கொள்ளும்.

இந்த முரசில்-நமது
ராஜதந்திரியார் அலசியுள்ளதை
படித்துப்பாருங்கள்.
எங்கும் போரின் குணம்
ஒரே விதமாகவும்
போரினை வெறுத்து
சமாதானப் பொலிவுள்ள வாழ்வினை
எதிர்பார்க்கும்
மக்களின் மனோபாவமும்
ஒரே விதமாகவும்
இருப்பதை அறிய முடிகிறது.

பூமியின் புன்னகையைப் பறித்து
பூட்ஸ் கால்களுக்குள்

போட்டு மிதித்திடும்
போரின் அசுரத்தனத்தை
வாழும் தலைமுறை வெறுக்கிறது.
வளரும் தலைமுறையும் எதிர்க்கிறது.

சின்னம் சிறு கரங்கள்
எழுதியுள்ள கவிதைகள்
போரின் சினத் தீ
போதும் - இனிப் போதும்
என்னும் மனநிலையை
படம் பிடித்துக்காட்டி நிற்கிறது.

இளைய உயிர்கள் உதிர்வதும்
உதிரம் சிந்தல்கள் தொடர்வதும்
பிரச்சனைகள் தொடர்ந்து எரிவதும்
வாழ்க்கையின் வசீகரத்தை பொசுக்கிவிடுகின்றன.

பொறுப்போடு சிந்தித்து-
செயலாற்ற வேண்டியவர்கள்
பொறுமையாக இருந்து
வேடிக்கை பார்க்கிறார்கள்.

அடுத்த தேர்தலுக்காக
கட்சிகளை புனரமைக்கிறார்கள்.
அடுத்த தலைமுறைக்காக
போர்க் காட்சியை முடிவுக்கு கொண்டுவர
முயல்கிறார்கள் இல்லையே?
அதுதான் துரதிஷ்டம்.

ஏற்கனவே எழுதியதுதான்-
வெளிநாடுகளில் நம்மவர்களின்
வெறுப்பேற்றும் நடவடிக்கைகள்
தினம் தோறும் வளர்ந்து வருகின்றன.

விளைவுகள் பற்றிய விபரம் தெரிந்தும்
விபரீதங்களில் ஈடுபடுவதை
என்னவென்று சொல்வது?

அறியாமல் செய்கிறார்கள்
என்றால்-
அறிவுரை பெற்று திருந்தலாம்.
அறிந்தே செய்கிறார்கள்
தொடர்ந்தும் திருந்தவே மறுக்கிறார்கள்.
என்ன செய்யலாம்?

'போ வெளியே என்று'
ஐரோப்பிய நாடுகளில்
அந்நிய எதிர்ப்பு வளரும்போது
"போகத் தயார் நாங்கள்-
பொல்லை நாங்களே தருகிறோம்;
வாங்கி நம்மீது அடித்து
விரைவில் வெளியேற்றுங்கள்"
என்பது போல
அத்துமீறல்களை அரங்கேற்றுகிறார்கள்.

நம்மை நாமே
தாழ்த்திக்கொள்வதில் இருந்து
எப்போது மீளப் போகிறோம்?
மறுமடலில் வந்து கலக்கும்வரை,

என்றென்றும் அன்புடன்,
—ஆசிரியர்—

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-51

களம்தேடி வந்து விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**போகுதே ஏக்கமெல்லாம்**

கண்ணீரும் கம்பலையும்,
செந்நீரால் சிவந்த மண்ணும்,
கண்ணெதிரில் பட்டு
கலங்கித் தவிக்கையிலே,
புண்ணியமே உனை அணைத்தால்,
போகுதே ஏக்கமெல்லாம்....

ஜி. ஸ்ரீநேசன்
இந்துக்கல்லூரி-மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

**யார் இவன்?**

போர்மாதாவுக்கு
தத்துக் கொடுக்க-நீ
பெற்று எடுத்த
பெருமகனோ இவன்.

ஆசிர்வாதம் வின்சன்-கல்முனை-02.

**சமாதானம்**

அகமகிழ்ந்து புன்னகைத்தாள்
அகதிக்கு வருவதென்றால்
சமாதானக் கொடி ஆங்கு
சமர்க்களத்தே பறந்திடுதோ?

ச. மகாலிங்கம்-வெலிமடை.

**வந்திடுமா வசந்தம்**

கண்களில் என்ன சோகமோ
கலகம் வந்த நேரமோ
கரங்களில் இவன் பாரமோ
காலம்தான் பதில் சொல்லுமோ.

தெ. லோஜனா-கொழும்பு-15.



**மகிழ்ச்சி**

அடிமை விலங்கொடித்து
ஆனந்தக் கூத்தாடும்
தென்னாபிரிக்கா
தெரிகிறது உன்முகப் பூரிப்பில்

அ. தருஷாந்த்-திருமலை.

## கவிதைப் போட்டி இல-54



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 18.06.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 54
தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772, கொழும்பு.

**தீர்வு கிடைக்குமா?**

அகதிகளாய் இந்நாட்டில்,
அலைந்து திரிந்து விட்டோம்.
கண்மணியே! தேர்தலுக்கு
முன்னே
தீர்வு கிடைத்திடுமா?

எஸ். பி. டீன்-கற்பிட்டி.

**மண்டேலா தேவை**

உங்களூரில் இனவாதம் தொலைந்ததால்
இதயம் நிறைந்த இன்முகம்.
எங்களூரில் இதயம் தொலைந்ததால்
இருள் நிறைந்த எதிர்காலம்?

எஸ். கீதா-வரக்காப்பொல.

**இறக்கிவிடாதே!**

மடிமீது சுமந்தவளே-என்
மனங்கவர் அன்னையே
இடியாய்ப் போர் நடக்கும்-இத்
தரையில் என்னை
இறக்கிடாதே ஒருபோதும்!

செல்வி. பி. சுபத்திரா-பசறை.

**தாய்ப்பாச ஆழம்**

பேயுள்ளம் கொண்டவர்கள்
அறிவாரோ? பூமிதனில்
சேய்ப்பாசம் கொண்டுள்ள
தாய்ப்பாச ஆழமதை!

தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

சமாதானச் சூரியனின்
தலையைக் கண்டதும்
அல்லியின் இதழ்கள்
அவிழ்ந்து கொள்கின்றது.

ஏ. எல். ஜுனைடீன்-அக்கரைப்பற்று-06.

**என்றோ ஒரு நாள்**

நிலாச் சோறு ஊட்டி
பிரியமுடன் வளர்த்தாலும்
நில் என்று சொல்லிவிட்டு
பிரியாவிடை தந்திடுவான் ஒருநாள்

திருமதி. மணிமேகலை வரதராஜன்
கல்குடா.

பசியெடுத்த சேயொன்று
பால் குடிக்கிறது விரல்களிலே
விதிப்பினி தொடுத்த தாய் மனமொன்று
விதிர்கின்றது சோகச் சிரிப்பினிலே

திருமதி. பாலகிருஷ்ணன்-நமுனுகுல.

**காந்தீயம்**

தொலைத்தவர்கள்-இங்கே
சிரித்து நிற்கையில்
நீங்கள் மட்டும்
ஏங்குவது எதற்காக?

வை. தி. குமரன்-டிக்கோயா.

## வாசகசாலை

**இன்று...**

1994.05.30..அட அதற்குள் ஒரு வருடம் ஓடிவிட்டதா...? இவ் ஒருவருட காலத்துக்குள் தினமுரசால் புரிய வைக்கப்பட்ட உண்மைகளும், அரசியல் போலித்தனங்களும்தான் எத்தனை? இலங்கையிலேயே ஒரு வருடத்திற்குள் இந்தளவு வாசகர் அலையைக் கொண்ட பத்திரிகையாக வெளிவருவது தினமுரசுதான். இது ஐயமற்ற வாழ்த்து.

பக்கச் சார்பற்ற கருத்துக்களும், உண்மை ஒன்றிக்கு தவிர வேறு எதற்குமே அடிபணியாத அர்த்தமுள்ள வீரமும், அழகும் கொண்ட பத்திரிகையின் முதலாவது வருட நிறைவில் நானும் கலந்து என்னையும் தினமுரசாக உருவகப்படுத்தி குதூகலிக்கின்றேன். அருமையான உணர்வு..இது.

அ. றஜீசன்-தெஹிவளை.

□□

வாழ்க தினமுரசு வளர்க என் முரசு
தித்திக்கும் 'தினமுரசே'!
திகைக்க வைக்கும் என் முரசே!
தினந்தோறும் நீயும் வந்தாள்
திகட்டாமல் பார்த்திடுவேன்.

செல்வி. எப். சாந்தி-இரத்தினபுரி.

□□

வாரம் ஒருமுறை வலம் வரும் இனிய முரசே,

மரத்தில் பூத்திருந்தால் பறித்தவுடன் வாடி இருப்பாய். ஆனால் நீ பூத்தது எங்கள் மனதில். அதனால் வாடவே மாட்டாய்!

செல்வி. லூ. சாந்தமேரி-தியுல; பத்தனை.

□□

**மகிழும் மனம்**

தினமுரசு! தனிமுரசு!! கதைகள் பலரகம். அதில் துப்பறியும் கதைகள் ஒருவிதம். அதை எழுதும் விதம் தனிவிதம். ஆம்: கொலை விழும் நேரம் தொடரை ரசிகன் இரசிக்கவும் ருசிக்கவும் தருவது கனிரசம். மீண்டும் மயங்கி அதே அபிமானத்துடன் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் மிக மகிழ்கிறது நம் மனம்.

வாஹிட் ஏ. குத்தூஸ்-கோட்டைமுனை.

□□



**பொறுப்பு**

ஒருபுறம் கொலை விழும் நேரத்திலோ அப்பப்பா விறுவிறுப்பு...

மறுபுறம் இலக்கிய நயத்திலோ கிளுகிளுப்பு...

இரண்டையும் சிறப்பாக தருவதே ரசிகனின் தனிச் சிறப்பு.

இவைகளை வாசகர்கள் கவரும் விதத்தில் தருவதுதான் தினமுரசின் தலையாய பொறுப்பு.

ஆர். சுரேஷ்-கலஹா.

□□

**தாங்காது மனம்**

கொஞ்சி தவளும் தினமுரசே, உலகெங்கும் மறைந்திருக்கும் செய்திகளை சுமந்து வரும் தேன் முரசே, உன் முகம் பார்க்கும்மட்டும் என்மனம் தாங்காது. உன் சேவை ஆண்டாண்டு வாழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஜெயகுமாரி முனியாண்டி-இரத்தினபுரி.

□□

**பணி தொடர..,**

அன்பு முரசே!

வாரந்தோறும் விதவிதமான அம்சங்களோடு காட்சி தருகின்றாய். அதிலும் தகவல் பெட்டி, தேன் கிண்ணம், மருத்துவ விந்தைகள், ரசிகனின் தொடர் கதை- 'அற்புதன்' அளித்து வரும் 'சிந்திக்கலாம் இங்கே...!' இப்படி பல சிறப்பான உனது பணி தொடர என்றும் என் நல்வாழ்த்துக்கள்.

எம். எஸ். ஜெஸீலா-மூதூர்-04.

□□

முக்கனிபோல் இனிக்கும் முரசே!

நீ இல்லையேல் நான் ஏது? அண்மையில் உதித்த அற்புதனின் அறிவுரைகள் அனைத்தும் அற்புதம், அற்புதம். வாரம் தோறும் ஸ்போர்ட்ஸ் பகுதியில் வெளியாகும் கிரிக்கெட் நியூஸ் வொண்டபுல். உன் சேவையே இவளின் தேவை.

செல்வி சரவனேஸ் டெய்சி-கலவானை.

□□

தித்திக்கும் தினமுரசே, வாரந்தோறும் வளர்பிறைபோல் உதயமாகும் வாரமலரே, உன் வருகை எங்கள் குடும்பத்தினர்களை கொள்ளைக் கொண்டுள்ளன. நீ தரும் தொடர்கதைகளும், சிறுகதைகளும், மற்றும் பல அம்சங்களும் மெய்மரக்கச் செய்கின்றன. இன்னும் புதிய தகவல்களை என் போன்ற பலருக்கு அளிக்க உன்னை வாழ்த்தும் எங்கள் குடும்ப சின்னஞ்சிட்டுக்கள்.

பாத்திமா, கெமிலஸ், குளோரினா, பிறெஜட், அலோசியஸ், மார்க் சென்ஜோன் டிலரி.

□□

**பாப்பா முரசுக்கு...**

அன்புடன் என் இனிய முரசிற்கு,

எனது பலகோடி வந்தனங்கள். வாராவாரம் நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களுமே மிகவும் பிரமாதம். லேடீஸ் ஸ்பெசல், மகாபாரதம், சிறுகதைகள் இதுபோன்று என்னைப் போன்ற மாணவ மாணவிகளுக்கு தெரியாத எத்தனையோ விடயங்களை பாப்பா முரசு அன்புடன் அள்ளித் தருகின்றது. இன்னும் நீ சிறப்புற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

செல்வி. கெ. திலகராணி-இந்தகல மேற்பிரிவு.

□□

சினிவிசிட் பார்க்கப் பார்க்க மிக மகிழ்ச்சி அடைகிறேன். என் அன்பான தினமுரசிற்கு என் வாழ்த்துக்கள்.

எஸ். சந்தனராஜ்-அப்புத்தளை.

□□

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# 'திரைப்படக் கவர்ச்சியைக் காட்டி அகதிகளிடம் கொள்ளை'!

## ரஜனிகாந்துக்கு புலிகள் ஆதரவு அமைப்பு கண்டனம்!!

தமிழ் திரையுலகின் பிரபல நடிகரான ரஜனிகாந்த் தற்போது தனது மனைவி லதாவுடனும், 42 கலைஞர்களுடனும் ஐரோப்பிய நாடுகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்த சென்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் ரஜனிகாந்த் நடத்திய கலை நிகழ்ச்சிக்கு இலங்கைத் தமிழர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்தும், ஈழப்படை என்னும் பெயரில் மிரட்டியிருந்ததும் கடந்தவார முரசில் வெளியாகியிருந்தது.

அதன் பின்னர் ஜெர்மனிக்கு கலை நிகழ்ச்சி நடத்தச் சென்ற ரஜனிகாந்துக்கு அங்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அவரது நிகழ்ச்சியை நடத்த விடாமல் கூச்சல் போட்டவர்கள் அவரைத் தாக்கவும் முற்பட்டனர். ஆனால் ஜெர்மன் பொலிசார் தலையிட்டு ரஜனிகாந்த் தாக்கப்படாமல் தடுத்துவிட்டனர்.

ஏற்கனவே தமிழ்நாட்டில் இருந்து பல நடிக, நடிகையர் ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று நட்சத்திர நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர்.

அப்போதெல்லாம் அவற்றை தடுக்கவோ, கண்டிக்கவோ முற்படாதவர்கள் ரஜனிகாந்தை மட்டும் எதற்காக எதிர்க்கவேண்டும் என்று ஜெர்மனியில் இருக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெளிநாடுகளில் நட்சத்திர நிகழ்ச்சிகளை நடத்துவதில் இலங்கைத் தமிழ் வர்த்தக அமைப்புக்களுக்கிடையே நடைபெறும் போட்டியே பூசல்களுக்கு காரணம் என்று பரவலாகக் கூறப்படுகிறது.

"சுவிஸ் தமிழ் அகதிகள் அமைப்பு" என்ற பெயரில் ரஜனிகாந்திடம் கடிதம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

*அன்புள்ள திரு ரஜனிகாந்த் அவர்களே! வணக்கம்-*

தாங்கள் ஒரு நல்ல நடிகர். மனித நேயம் மிக்கவர். வாழ்க்கையில் நடிக்காதவர். உதவும் மனமும் கரமும் கொண்டவர் என்றெல்லாம் கேள்விப்பட்டுள்ளோம். மகிழ்ச்சி.

அனாதை இல்லக் கட்டட வளர்ப்பு நிதிக்காக தாங்களும் தங்கள் பாரியார், மேலும் 42 கலைஞர்களுடன் ஐரோப்பிய நாடுகளுக்கு வரவிருப்பதாக நீங்கள் கொடுத்த பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அறிகிறோம். தங்களை வரவேற்கவும், தங்களை சந்திக்கவும் அவாவுடையவர்களாயுள்ளோம். ஆனால்...

1. தங்களைச் சந்திக்க விரும்பும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களில் 99 விழுக்காடு இரசிகர்கள் ஈழத் தமிழ் அகதிகள்தான் என்பதையும், அவர்களுக்கு ஒரு நாடில்லை, அரசில்லை என்ற நிலையில் உலகின் பல பாகங்களில் அகதிகளாய் வாழ்கிறார்கள் என்பதையும், அவர்கள் உற்றார் உறவினர்கள் தாங்கள் பிறந்த தமிழ் ஈழத்திலேயே வாழ ஒரு வீடுகூட இல்லாமல் அலைகிறார்கள் என்பதையும் தமிழ் ஈழத்திலேயே பல்லாயிரம் பச்சிளம் பாலகர்கள் அனாதைகளாக வாழ்கிறார்கள் என்பதையும், தினம் தினம் நூற்றுக்கணக்கான மழலைகள் உணவு, போசாக்கு, மருந்து வசதி போன்றவை இல்லாமல் முளையிலேயே கருகி மடிகிறார்கள் என்பதையும் தாங்கள் அறியாமலிருக்கமுடியாது.
2. உங்களுக்கு ஒரு நாடுண்டு, அரசுகள் உண்டு. தாயகம், எம்மைக் காப்பாற்றும்-கைவிடாது என்ற நம்பிக்கையில் அகதிகளாக வந்த ஈழத் தமிழர்களை உங்கள் நாடும் அரசும் எப்படி நடத்துகிறது? அகதி முகாம்களிலேயே சிறைக் கைதிகளாக வைத்து மிருகங்களை விடக் கேவலமாக எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதையும் நீங்கள் அறியாமல் இருக்க முடியாது. உங்கள் நாடும் அரசும் கவனிக்காத அனாதைக் குழந்தைகள் பிரச்சனைக்காக நீங்கள் சேவை செய்ய முன் வந்து பாராட்டுக்குரியது. ஆனால்-அவர்களுக்கு உதவுவதற்காக ஈழத் தமிழ் அகதிகளிடமா நீங்கள் கையேந்தி வரவேண்டும்? உங்களிடம் இல்லாத பணமா? இங்கே வந்து இந்த அகதிகளிடம் கையேந்தும் காலத்தில் அங்கேயே ஒரு படத்தில் நடித்தால் அந்தப் பணம் இங்கே கிடைப்பதை விடக்கூடுதலாக இருக்காதா? தாங்கள் தங்கள் பாரியார், குழந்தைகள், 42 பேர்கொண்ட குழுவினரின் பயணச் செலவு, தங்குமிட வசதிகள் போன்றவற்றிற்கான செலவு எவ்வளவாகும்? இந்தத் தொகையும் நீங்கள் உங்கள் முயற்சிக்காக எடுத்துச் செல்லப்போகும் பணமும் தவிர, உங்கள் திரைத்துறைக் கவர்ச்சியைக் காட்டிப் பணம் சம்பாதித்துக் கொழுக்கப் போகும் தரகர்கள் (நிகழ்ச்சி அமைப்பாளர்கள் எனப்படும் மனிதாபிமானமற்ற வர்த்தக நோக்குள்ளோர்) பெறும் பணம் எல்லாம் இந்த ஈழத் தமிழர் தலையில்தான் விழும் என்பதையும் நீங்கள் அறியாமலிருக்க முடியாது.
3. இப்படி ஈழத் தமிழ் அகதிகளை உங்கள் திரைப்படக் கவர்ச்சியை காட்டி நீங்களும் உங்களை இங்கே அழைத்து நிகழ்ச்சி ஒழுங்கு செய்யும் மனிதாபிமானமற்ற தரகர்களும் கொள்ளையடிப்பதைவிட-அங்கே தமிழ்நாடு என்ற பெயர் கொண்ட நாட்டில், குஷ்புவுக்கு கோவில் கட்டுபவர்களிடமும் உங்கள் மலை உயர வைக்கப்படும் கட் அவுட்டுகளுக்கு பாலாபிஷேகமும், மலர் மாரியும் பொழியும் பணத்தையும் பெற்று உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றலாமே?
4. வேட்டி சட்டை கேட்காதீங்க, வேலை கேளுங்கப்பா என்று உபதேசம் செய்த நீங்கள் தயவு செய்து மனிதாபிமானத்துடனும் மனித நேயத்துடனும் சிந்தித்து செயல்படுங்கள்.
5. இங்கு வந்து ஈழத்தமிழ் அகதிகள் பணத்தைச் சுரண்டி கொள்ளையடிக்க நான் விரும்பவில்லை. இப்பணத்தை உங்கள் நாட்டில் ஏதிலிகளாக வாழும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு நீங்கள் கொடுத்து உதவிடுங்கள் என்று ஓர் அறிக்கை விடுங்கள். வரவேற்போம்! வாழ்த்துவோம்!! அப்புறம் உங்கள் இஷ்டம்.

இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்கு புலிகள் அமைப்பின் மறைமுக ஆதரவு உண்டு என்றும் கூறப்படுகிறது.

# புலிகள் பேச்சுக்கு வரும் சூழ்நிலை இல்லை!

## தரை-கடல் போருக்கு பலம் திரட்டுகிறார்கள்!!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பிரசாரங்களில் மாற்றங்கள் தெரிகின்றன.

தமிழீழமே முடிந்த முடிவு என்று மீண்டும் வலியுறுத்தி வருகிறார்கள்.

தமிழீழமே இறுதித் தீர்வு என்பதை வலியுறுத்தாமல் சமஷ்டி முறையிலான தீர்வையும் பரிசீலிக்கத் தயார் என்பதுபோல புலிகளது முக்கியஸ்தர்கள் சிலர் கூறி வந்தனர்.

இனப்பிரச்சனையே இல்லை என்று ஜனாதிபதி டி.பி. அறிவித்தபோது அதனை புலிகள் அரசியல் விவேகத்துடன் கையாண்டார்கள் என்றும், தாம் பேசுவதற்கு தயார் ஆனால் அரசாங்கம்தான் பிரச்சனையே இல்லை என்று பேசிக்கொண்டிருக்கிறது என்பது போன்ற மனோபாவத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலிகள் ஏற்படுத்திவிட்டார்கள் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் போருக்கு எதிரான கருத்துக் கொண்டிருந்தபோது புலிகளும் சற்று அடக்கி வாசித்தார்கள். போர் நிறுத்தம் செய்ய தயார் என்று கூறினார்கள்.

தென்னிலங்கைத் தூதுக்குழுக்கள், மற்றும் வடக்கு-கிழக்குக்கு விஜயம் செய்த உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மூலம் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாராக இருப்பதாக புலிகள் வெளிப்படுத்தினார்கள்.

ஜனாதிபதி இனப்பிரச்சனை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும், புலிகள் பேசத் தயார் என்று தெரிவித்த கருத்துக்களும் மக்கள் மத்தியில், அரசாங்கம்தான் தீர்வுக்கு தயாராக இல்லை என்னும் கருத்தை ஏற்படுத்தியுள்ளன. இது புலிகளுக்கு அரசியல் ரீதியில் கிடைத்த வெற்றியாகும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

இனப்பிரச்சனையே இல்லை என்று கூறும் அரசாங்கத்தோடு எப்படிப் பேச முடியும் என்று புலிகள் கேட்பதில் நியாயமிருப்பதாகவே தென்னிலங்கை புத்திஜீவிகளும் கூறுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் புலிகள் மீண்டும் தமிழீழமே ஒரே தீர்வு என்னும் கருத்தை வட பகுதியில் நடைபெறும் கூட்டங்களில் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

வைபகம் திறக்கப்பட்டதும், "தமிழீழத்தை உலகம் விரைவில் அங்கீகரிக்கும்" என்று புலிகளது அரசியல் ஆலோசகர் தெரிவித்துள்ளதும் குறைந்தபட்சத் தீர்வுகளுக்கு புலிகள் தயாராக இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளன.

தரையில் மட்டுமல்லாமல் கடலிலும் தமது பலத்தை அதிகரிப்பதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடற்புலிகள் அமைப்பினர் நவீன போர் படகுகளுக்கு சமமான போர் படகுகளை உருவாக்கி வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட உதிரிப்பாகங்கள் மூலம் அவை உருவாக்கப்படுவதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரையில் நேரடி மோதலுக்கு தயாராகும் வகையில் படையினரிடம் கைப்பற்றிய டாங்கியை பயன்படுத்தவும் புலிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

அது தவிர, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் கைப்பற்றிய கவச வாகனமொன்றையும் டாங்கிபோல் தயார்படுத்தியுள்ளனர்.

புதிய உறுப்பினர்கள் பெருந்தொகையாக திரட்டப்பட்டு வருகின்றனர்.

ஒரு பகுதியினர் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகவும் இயக்கத்தில் போய் இணைந்து கொள்கிறார்கள்.

ஆயுதங்கள் போதுமான அளவுக்கு இருக்கின்றன. ஆட்கள்தான் தேவை என்று புலிகளின் கருத்தரங்குகளில் கூறப்படுகிறது.

போரினை சித்தரிக்கும் திரைப்படங்கள். தாக்குதல் காட்சிகளை பதிவு செய்து காட்டும் வீடியோப் படங்கள், உணர்ச்சிகரமான பாடல்கள் போன்ற இடையறாத பிரசாரங்கள் இயக்க ஆள் திரட்டலுக்கு ஊக்கமளிக்கின்றன.

சொந்த விருப்பத்தின் பேரிலேயே பாடசாலை மாணவ மாணவிகள் இயக்கத்தில் சேரும் மனநிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அரசியல்-இராணுவ ரீதியில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உறுதியான அடித்தளத்தை புலிகள் பெற்று வருகின்றனர்.

சமீபத்தில் ஜூன் 5ல் மாணவர் எழுச்சிவாரம் புலிகளால் நடத்தப்பட்டுள்ளது. போராட்டத்தில் மாணவர்கள் இணைந்து கொள்ளவேண்டும். அதுவே மாணவர்களது முதற் கடமை என்று புலிகளது மாணவர் அமைப்பின் அறிக்கையும் வெளியிடப்பட்டது.

தமது பலத்தை அதிகரிக்க அரசின் மீதான அதிருப்தியையே புலிகள் சாதகமாக்கி வருகிறார்கள்.

ஆகவே, அந்த அதிருப்தியை இல்லாமல் செய்துவிடக்கூடிய ஒரு பேச்சுவார்த்தைக்கு புலிகள் தற்போது முன்வரமாட்டார்கள்.

பேச்சுவார்த்தைக்கு எதிராக பகிரங்கமாக கருத்து தெரிவிக்காவிட்டாலும்கூட அரசாங்கம் பிரச்சனையை தீர்க்கக்கூடும் என்ற மனோபாவம் தமிழ் மக்களிடம் ஏற்படுவதை புலிகள் விரும்பமாட்டார்கள். அவ்வாறு ஏற்பட்டால் தமது தரப்புக்கு தற்போதைய சாதகங்களாக இருக்கும் காரணிகள் பாதகமாக மாறும் என்று புலிகளுக்குத் தெரியும். எனவே உடனடியான ஒரு சமரசத் தீர்வுக்கோ அல்லது சில அரசியல் வாதிகள் தமது சொந்த விளம்பரத்திற்காக கூறுவதுபோன்று இரகசிய பேச்சு முயற்சிகளுக்கோ புலிகள் முன்வரமாட்டார்கள் என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

## இடையிலே நின்றுபோன இடம்பெயர் கண்காட்சி!

### திருமலை நகர விஞ்ஞான மாணவர் அதிருப்தி!!

(திருமலை நிருபர்)

'இடம்பெயர் விஞ்ஞானக் கண்காட்சிப் புகையிரதம் திருகோணமலைக்குக் கொண்டு வரப்படாமல் கந்தளாய் புகையிரத நிலையத்துடன் நிறுத்தப்பட்டது ஏன்?' இவ்வாறு மாணவர்களும் கல்வி சார்ந்த அறிஞர்களும் கேட்கிறார்கள்.

மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையுடைய விஞ்ஞான மாணவர்களையும் மூன்று தேசியப் பாடசாலைகளையும் பல பிரபல கல்லூரிகளையும் கொண்டுள்ள திருகோணமலை நகருக்கு கண்காட்சி கொண்டு வரப்படாமற்போனமைக்கு கல்வித் திணைக்களத்தின் செயற்பாடின்மை காரணமா? எனப் பரவலாகக் கேட்கப்படுகிறது.

இக்கண்காட்சி திருகோணமலை நகருக்குக் கொண்டு வரப்படாமற் போனதால், நகர மாணவர்கள் 25 மைல் பயணம் செய்து கண்காட்சியைப் பார்வையிட வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், மூதூர், குச்சவெளி போன்ற கல்வி கோட்ட மாணவர்களும், திருகோணமலை வந்து அங்கிருந்து கந்தளாய் செல்லவேண்டிய அவதிநிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர் கண்காட்சியின் நோக்கம் விஞ்ஞானப் பயன்பாடு மாணவர்களைத் தேடிச் சென்றடைய வேண்டும் என்றிருக்கையில், யாரோ எங்கோ விட்ட தவறினால் மாணாக்கர் சிரமத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் நேர விரயத்துக்குள்ளாகியதுடன், பெற்றோர்களும் வேண்டாத போக்குவரத்துச் செலவுகளைச் சுமக்கவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இம்முறையற்ற செயலைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைத் தலைவர் உயர்கல்வி அமைச்சருக்கும் ஃபாக்ஸ் மூலம் செய்தி அனுப்பியுள்ளார்.

## பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்க முயற்சி!

### இருபத்தேழாவது ஆண்டுமலர் பிரசவம்!!

(ஹேவாஹெட்ட நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலரான 'இளங்கதிர்' இருபத்தேழாவது ஆண்டு மலராக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.


பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியரும், தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமான பேராசிரியர்.சி. தில்லைநாதனின் தலைமைத்துவத்தின்கீழ் இந்த இளங்கதிர் ஆண்டு மலர் பல்சுவை அம்சங்களுடன் வெளியாகியுள்ளது.

இவ்விதழில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி.க. அருணாசலம், கலாநிதி துரை மனோகரன், மெய்யியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அம்பலவாணர் சிவராசா, புவியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர்களான, மா.செ.மூக்கையா, திரு.வை. நந்தகுமார், கலாநிதி வேல்முருகு, மருத்துவபீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி இரா.சிவகணேசன், உட்பட கலாகீர்த்தி பொ.பூலோகசிங்கம், பேராசிரியர் சி.தில்லைநாதன், ஆகியோரின் ஆக்கங்கள் பலவும் குறிப்பிடத்தக்க அம்சங்களாக இடம் பெற்றுள்ளன.

பள்ளிக்கூடம், பல்கலைக்கழகம் உட்பட பல துறைகளிலும் பயிலும் பலரும் பயன்படும் வகையில் பல சிறந்த ஆக்கங்களைக் கொண்டமைந்ததாக 'இளங்கதிர்' அமைந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களது கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், கார்ட்டூன்கள் பலவும் இதழை அலங்கரித்துள்ளன.

## கோபால்சாமி தோல்வி புலிகள் கவலை!



சமீபத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற பெருந்துறை மற்றும் மைலாப்பூர் சட்டமன்றத் தேர்தல்களில் வை.கோபால்சாமியைத் தலைவராகக் கொண்ட மறுமலர்ச்சி தி.மு.க. தோல்வியை தழுவியுள்ளது. எனினும் பெருந்துறையில் கணிசமான வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தில் வந்தது.

வை.கோபால்சாமி அணியின் தோல்வி குறித்து யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பத்திரிகையில் கருத்துத் தெரிவித்துள்ள புலிகள், தோல்வி ஏற்பட்டாலும்கூட ம.தி.மு.க தொடர்ந்து முயற்சி செய்து தன்னை நிலைப் படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

வை.கோபால்சாமி அணிக்கு ஏற்பட்ட தோல்வி வெற்றியாக மாறும் என்று கருத்துப்படும் கட்டுரை ஒன்றும் ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளையில், தான் புலிகளை ஆதரிக்கவில்லை என்றும், இலங்கைத் தமிழர்களது துயரங்களுக்கு எதிராகவே குரல் கொடுத்து வருவதாகவும் வை.கோ தமிழ்நாட்டில் கூறிவருகிறார்.

## இது-குண்டு வெடிப்பிற்குப் பின்!

(காரைதீவு நிருபர்)

அம்பாறை பஸ் நிலையத்தினுள் 1990 இலிருந்து இன்று வரை தமிழ் பிரதேசங்களுக்கு செல்லும் பஸ் வண்டிகள் அனுமதிக்கப்படுவதில்லை. ஏனென்று விபரம் கேட்டால், 90ல் நடைபெற்ற குண்டு வெடிப்பு என்கிறார்கள்.

ஆதலால் இன்றுகூட கல்முனை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளுக்கு செல்லும் பஸ் வண்டிகள் பஸ் நிலையத்திற்கு வெளியில் நின்றுதான் பயணிகளை ஏற்றிச் செல்வதைக் காணமுடிகிறது.

## சிவகுமாரன் நினைவு தினம்!

1974ம் ஆண்டு ஜூன் 5ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாய் பகுதியில் சயனைட் விழுங்கி மரணமானவர் பொன்னுத்துரை சிவகுமாரன்.

பொலிசாரால் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக தேடப்பட்ட சிவகுமாரன் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதாகும் சந்தர்ப்பத்தில் சயனைட் உட்கொண்டு பலியானார்.

சிவகுமாரனின் 20வது நினைவுதினம் இம்மாதம் 5ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சொந்த ஊரான உரும்பிராயில் அனுஷ்டிக்கப்பட்டது.

புலிகள் அமைப்பினரால் நினைவு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. கலை நிகழ்ச்சிகள், நடனம், நாடகம் என்பவையும் நடைபெற்றன.

## வன்னியில் வயிற்றோட்டம்

வன்னிப் பகுதியில் வயிற்றோட்ட நோயின் தாக்கத்தினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 7பேர் பலியானதாக அறியப்படுகிறது. நீர் நிலைகளில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகள், மாசுபடுதல் என்பவற்றினால் வயிற்றோட்ட நோயின் பரவல் ஏற்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் மாசுபடுவதை தடுக்கவும், மாசுகளை நீரை அருந்தவேண்டாமென்றும் சுகாதாரப் பகுதியினர் கூறியுள்ளனர்.

## இரு நேரப்பாடசாலை முறை நிறுத்தம்!

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் இருநேரப் பாடசாலை முறை கைவிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் இருநேரப் பாடசாலை முறையைக் கண்டித்து வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்.

இதனையடுத்து இரு நேரப் பாடசாலை முறை கைவிடப்பட்டதாகவும், கல்லூரிகள் தாம் விரும்பியபடி இயங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகமாகிவரும் நிறை குறைந்த குழந்தைகள்!

யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கும் வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1989ம் ஆண்டில் 2.5 கிலோவுக்கு குறைந்தளவில் பிறந்த குழந்தைகள் 19 வீதம் என்றும், 1993ல் 25 வீதம் என்றும், 1994ல் 25 வீதம் என்றும் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது.

தொடரும் போரினாலும், போசாக்கின்மையாலும் சிறுவர்கள், குழந்தைகள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களில் 19,022பேர் சிறுவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலானோர் போஷாக்கின்மையாலும், உள நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.



கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகா விகாரை, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

***வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.***

**தலைமைப்பீடம்**

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: *052-2508, 052-3093*

கொழும்பில்- இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: *078-71592, 078-71243*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

### முகவர்கள் தேவை

அகலவத்த, புளத்சிங்கள, அக்குரஸ்ஸ, திககொட, கிரிந்த, தெனகம, கம்புறுப்பிட்டிய, தெனிப்பிட்டிய, மித்தெனிய.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு—
விநியோக மேலாளர்
இல. 88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு--05.

CIRCULATION MANAGER
NO: 88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 820265

## கல்முனை பிரதேச சபை கவனிக்குமா?

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவீதி ஒரு முக்கிய பிரதான வீதியாகும். கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல், கல்முனைக்குடி அல்-பஹ்றியா வித்தியாலயம், கடற்கரைப் பள்ளி உபதபால் நிலையம் போன்ற முக்கிய இடங்கள் அமைந்திருப்பதைக் கொண்டே இவ்வீதியின் முக்கியத்துவத்தை உணரலாம்.

இவ்வாறு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இவ்வீதியானது தற்போது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பல இடங்கள் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்க சில இடங்கள் மணல் நிரம்பிய நிலையில் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது.

இவ்வீதியைப் பொறுத்தவரை மிகவும் வேடிக்கையான விடயம் என்னவென்றால் பொதுவாக வீதிகள் கிறவல் வீதியாக இருந்தால் அவற்றுக்கு கற்கள் போடப்பட்டு தார் வீதியாக மாற்றுவதுதான் வழமை.

ஆனால் இவ்வீதியே முன்பு தார் வீதியாக இருந்து இப்போது படிப்படியாக கிறவல் வீதியாக மாற்றப்பட்டுக்கொண்டு வருகின்றது. போதாக்குறைக்கு இடையிடையே மணல் மேடுகள் வேறு. அத்தோடு இரவில் போதிய மின்சார வெளிச்சம் கூட போதியளவு இல்லை.

எனவே தயவு செய்து இவ்வீதியை புனரமைப்புச் செய்து மீண்டும் தார்வீதியாக மாற்றியமைப்பதுடன் போதிய மின் விளக்குகளைப் பொருத்தவும் கல்முனைப் பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இவ்வீதியைப் பயன்படுத்துவோர் கோரிக்கையாகும்.

**எஸ்.ரி.எம்.பஸ்வாக்-கல்முனை-05.**

## கண்டியில் கண்ட குறை

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் தலைநகராம் கண்டி. மாநகர் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள 'குட்செட் என்றழைக்கப்படும் பிரதான பஸ் நிலையம் தற்போது புதுப் பொலிவுடன் காட்சியளித்தபோதிலும் அவ்விடத்தில் குறையொன்றும் தென்படுகிறது. அதாவது பஸ் நிலையத்தில் குன்றும் குழிகளும் அதிகம் காணப்படுகிறது.

இதனால் மழைக்காலங்களின் போது அங்கு காணப்படுகின்ற குழிகளில் நீர் தேங்கி நிற்பதனால், அங்கு வருகின்ற பஸ் பிரயாணிகளுக்கு இடையூராகவுள்ளது.

எனவே மேற்படி 'குட்செட்' பஸ் நிலையத்தில் காணப்படும் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரயாணிகள் சார்பில் தினமுரசு வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

இனிகலை முஜீப்-கண்டி.

## பிரதேச அபிவிருத்தியே பிரதான கொள்கை!

(திருமலை நிருபர்)

"பள்ளிவாசலில் நான் ஒரு முஸ்லிம். சமூகத்தில் நான் தமிழன்" என்கிறார் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபையின் புதிய தலைவர் ஜனாப் அ.ஐ.மு.முஜீப். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தேர்தலில் நின்று கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தலைவராகியிருக்கும் 23 வயதான இந்த இளைஞர் வெள்ளை மணல் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையார் ஒரு வியாபாரி.



தனது எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து 'தினமுரசு'க்குத் தெரிவிக்கையில் தான் ஐ.தே. கட்சியைச் சார்ந்திருந்த போதிலும் பிரதேச அபிவிருத்தியே தனது பிரதான கொள்கை என்று கூறுகிறார். திங்கட்கிழமைகளில் உப்பு வெளியிலும் புதன் கிழமைகளில் சாம்பல்தீவிலும் வெள்ளிக் கிழமைகளில் குடாக்கரையிலும் மக்கள் தம்மைச் சந்தித்து பிரதேச அபிவிருத்திகள் பற்றி ஆலோசனைகள் வழங்குவதற்கு தமது குறைபாடுகளையும் தெரிவிக்கலாம் என்று கூறுகிறார்.

உடனடியாகப் பாதை சீரமைப்பு, மின்சாரம், நீர் வழங்கல் என்பவற்றில் கவனம் செலுத்தப் போவதாகக் கூறும் முஜீப் வடக்கு-கிழக்கின் ஆட்சி மொழி தமிழாக இருப்பதால் தனது பிரதேச சபையின் உத்தியோகப் பதிவுகள் யாவும் தமிழிலேயே பேணப்படும் என உறுதியாகத் தெரிவிப்பதுடன், சிங்கள மக்கள் தங்கள் கருமங்களைச் சிங்களத்தில் செய்துகொள்ள வழி செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கின்றார்.

இன மத மொழி வேறுபாடுகள் இல்லாத வகையில் நல்ல சேவையை வழங்குவேன் என முரசு வாயிலாக எல்லோருக்கும் தெரிவிக்கும் இந்த இளைஞர், தனது நேர்மையான வளர்ச்சிக்கு முரசு ஆதரவு தர வேண்டும் என்றும் பவ்வியமாகக் கேட்டுக்கொள்கின்றார்.

## வேடிக்கையான களவும் விசித்திரமான கண்டுபிடிப்பும்

(அக்குறணை நிருபர்)

அக்குறணையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் வியாபாரிக்குச் சொந்தமான TATA 1210 எனும் ரக லொறி சில தினங்களுக்கு முன் காணாமல் போயிருந்தது. பின்னர் அது சிரமமான தேடுதல் முயற்சிகளின் பின் எரிபொருள் முழுவதும் தீர்ந்துபோன நிலையில் 'தம்புள்ள' எனும் இடத்தைச் சேர்ந்த காட்டுப் பாதையில் பிரதான வீதி ஓரமாக இறக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பின்னர் கடந்த வாரம் அக்குறணை துனுவில எனும் இடத்தைச் சேர்ந்த சிங்கள வியாபாரி ஒருவருக்குச் சொந்தமான ELF ரக சிறிய லொறி ஒன்றும் காணாமல் போயிருந்தது. பின்னர் மேற்படி லொறி ஹப்புத்தளைப் பகுதி வீதிப் பொலிசாரினால் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் எதுவுமற்ற நிலையில் ஓட்டிச் சென்ற உபாலி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவனுடன் தடுத்து வைக்கப்பட்டது.

முன்னர் சாரதியாகக் கடமையாற்றிய உபாலி என்பவன் 'தான் தற்பொழுது மன நோயாளியாகி இருக்கிறேன்' என்று பொலிஸ் வாக்கு மூலங்களில் தெரிவித்திருக்கிறான்.

ஆனால் மேற்படி இரண்டு லொறிகளையும் கள்ளச் சாவியால் இவனே களவாக ஓட்டிச்சென்றிருக்கிறான்.

இவ் வாகனக் கடத்தலின் பின்னணியில் ஏதாவது சதிகாரக் கும்பல் ஒன்று இயங்குகின்றதா எனும் விடயத்தினைக் கண்டறிவதற்கான பொலிஸ் புலன் விசாரணைகள் தொடர்கின்றன.


## உயர் கல்விக் கூடத்திற்கு மனித எலும்புக்கூடு அன்பளிப்பு!

(நித்தவூர் நிருபர்)

சம்மாந்துறை பட்டப்படிப்பாளர் சங்கம், சம்மாந்துறையின் உயர் கல்வி பீடமான, சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு (தேசிய பாடசாலை) மனித எலும்புக்கூடு (வன்கூடு) ஒன்றை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

கல்லூரி விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு பெரும் பயன்பாடாக மிளிரும் இந்த மனித எலும்புக் கூட்டின் கையளிப்பு வைபவம் சம்மாந்துறை பட்டப்படிப்பாளர் சங்கத் தலைவர் ஜனாப்.றமீஸ் அப்துல்லா தலைமையில், கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை தேசியப் பாடசாலை அதிபர் ஜனாப்.எம்.ஏ. தம்பிக்கண்டு அவர்களிடம், சங்கம் சார்பில் டாக்டர் ஜனாப்.எம்.பஷீர் வன்கூட்டுத் தொகுதியைக் கையளிப்பதைப் படத்தில் காண்க.



கையளிப்பு வைபவத்தில் கலந்து கொண்ட திகாமடுள்ள மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஜனாப்.யூ.எல்.எம். முகைஉன், பிரதேச சபை உறுப்பினர் ஜனாப்.ஏ.ஆர். முகம்மட் அலி(ஐ.தே.க) உட்பட பிரமுகர்கள் பலரும் படத்தில் காணப்படுகின்றனர்.

பட்டப்படிப்பாளர் சங்கத்தின் இந்த நற்சேவையைப் பலரும் வெகுவாகப் பாராட்டினர்.

## மகளிர் இல்லம் நிர்மாணம்
### மட்டக்களப்பு மேயர் குத்துவிளக்கேற்றினார்

(நிந்தவூர் நிருபர்)



ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையினரால் காரைதீவில் 40 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பெற்றுள்ள சாரதா அனாதைகள் மகளிர் இல்லத்தை அகில உலக ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பொதுக் காரியதரிசி ஸ்ரீமத்சுவாமி ஆத்மஸ்த்தானந்தஜீ மகராஜ் அவர்கள் வைபவரீதியாகத் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் கலந்துகொண்ட கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவரும், மட்டக்களப்பு, மேயருமான திரு.செழியன் ஜே.பேரின்பநாயகம் குத்துவிளக்கு ஏற்றி வைப்பதைப் படத்தில் காண்க. சுவாமி ஆத்மஸ்தானந்தஜீ, சுவாமி ஜீவானானந்தஜீ (மட்டக்களப்பு) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## அடித்தார் ஆசிரியர்! மாணவன் ஆஸ்பத்திரியில்!!

(திருகோணமலை நிருபர்)

பாடசாலை ஆசிரியர் அடித்ததால் மாணவர் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குச்சவெளியில் உள்ள முஸ்லிம் பாடசாலை ஒன்றில் நடைபெற்றுள்ளது.

வீட்டுப் பாடங்களைச் சரியாகச் செய்யவில்லை என்பதற்காக ஒன்பதாம் ஆண்டு மாணவனான அன்வர் சதாத் என்பவரே அவரது வகுப்பாசிரியரால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவன் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், நிலமை மோசமாக இருப்பதால் கண்டி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றிப் பெற்றோர் குச்சவெளிப் பொலிஸில் முறைப்பாடு செய்ததோடு கல்வித் திணைக்களத்துக்கும் அறிவித்துள்ளனர்.

# புகார் பெட்டி

## பாலத்தின் பரிதாபநிலை

மூதூர் பிரதேசத்தில் தோப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள சின்னக் கல்வான் பாலம் இரண்டு தரம் கண்ணிவெடிக்கு பாதிப்புற்று அரைப் பகுதி மிக மோசமான முறையில் தகர்ந்து காணப்படுகிறது. இதன் கீழ் இருபது அடி ஆழத்தில் நீர் செல்வதால் பாலத்தின் மேல் பகுதியில் உள்ள கைப்பிடி அனைத்தும் அழிந்துவிட்டது. மரம் போடப்பட்டாலும் பாதுகாப்பில்லாத காரணத்தினால் பலவித கஷ்டங்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

தோப்பூரில் இது பிரதான பாதை என்பதாலும் பல இன மக்கள் இதனால் பிரயாணம் செய்வதாலும் இதை தகுந்த முறையில் திருத்தி அமைக்குமாறு பொறுப்பானவர்களை பணிவுடன் வேண்டுகிறேன்.

எம். சுஜாஸ் பேகம்-தோப்பூர்-02.

## நிதி சேகரிப்பு ஏன்?

திருகோணமலை அநுராதபுரம் சந்தியில் அமைந்துள்ள விபுலானந்தா வித்தியாலயத்தில் மாணவர்களிடம் குறிப்பாக கீழ் வகுப்பு மாணவர்களிடம் வகுப்பாசிரியர்கள் தும்புத்தடி, விளக்குமாறு, மேசைவிரிப்பு, பூச்சாடிகளுக்கென்றும், வகுப்பறை அலங்காரப் பொருள், உபகரணங்களுக்கென்றும் விளையாட்டுப் போட்டி, இல்ல வளர்ச்சி, மத வழிபாடுகளுக்கென்றும் அநாதைப் பிள்ளைகள், குருடர் செவிடர்களுக்கென்றும், மேலும் காரணம் கூறாத விடயங்களுக்கென்றும் மாணவர்களிடம் நித்தமும் பணம் கேட்டு நச்சரித்து பெற்று வருவதாகவும், இவைகளுக்கு பணம் கொடுக்கத் தவறும் மாணவர்களை குற்றவாளிகளைப்போல் மாணவர்கள் முன்னிலையில் விசாரித்து அவமானப்படுத்தப்படுவதாகவும், இந்நிலைகளுக்கு ஆளாகும் மாணவர்கள் பாடசாலை செல்வதற்கே தயக்கம்காட்டி வருவதாக பல பெற்றோர்கள் கவலையடைந்த நிலையிலுள்ளனர்.

வை. பாலச்சந்திரன்-திருகோணமலை.

## கொழும்பு-நிட்டம்புவ பஸ் சேவை சீர்கேடு

(கம்பஹா நிருபர்)

கொழும்பு பீபள்ஸ் பார்க்-தனியார் பஸ் நிலையத்தில் இருந்து நிட்டம்புவ வரையில் சேவையில் ஈடுபடும் தனியார் வான்கள் இரவு 7.30 மணிக்குப் பின்பு ஓடுவதில்லை. இதனால் நிட்டம்புவ-திஹாரிய-யக்கல, ஆகிய பிரதேசங்களில் இருந்து கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தின் பிரதான நகரங்களுள் ஒன்றான நிட்டம்புவையில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்திலிருந்து நாளாந்தம் சுமார் 60 பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. எனினும் இரவு நேரங்களில் இவை சேவையில் ஈடுபடுவதில்லையாதலால் கொழும்பில் தொழில் புரியும் இப்பிரதேச வாசிகள் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாமல் அன்றாடம் திண்டாட வேண்டிய அவல நிலை குறித்து அங்கலாய்க்கின்றனர். எனவே கொழும்பு-நிட்டம்புவ தனியார் பஸ் சேவையை இரவு 7.30 மணிமுதல் 10.00மணிவரை தொடர்ந்து நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கிழக்கு மாகாணத்தில் குறிவைத்துள்ள தமிழ்க் கட்சிகள்!

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றை குறிவைத்து தென் இலங்கை அரசியல் கட்சிகள் தமது அணிகளைத் தயார் படுத்தத் தொடங்கிவிட்டன.

சகல பாதைகளும் ரோமாபுரிக்கே சென்றடைகின்றன என்பதுபோல சகல முயற்சிகளும் எதிர்வரும் தேர்தல்களுக்காகவே.

ஒரு புன்னகையைக்கூட அரசியல் வாதிகள் வாக்குப் பெறும் நோக்கத்திற் கேயல்லாமல் வேறு எதற்கும் விரயமாக்கத் தயாராக இல்லை.

அரசியல் கட்சிகள் வரப்போகும் தேர்தலுக்கான வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்க, படையினர் வடக்குமீது எப்படி வெற்றிகரமாகத் தாக்குதல் தொடுப்பது என்று மூளையைக் கசக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தேர்தலுக்கு முன் படையினர் பாரிய வெற்றியைப் பெறுவதை எதிரணி விரும்பவில்லை.

அதனால் 'போரை நிறுத்து' என்று ஓங்கிக் குரல் கொடுக்கிறார்கள்.

தாம் வெற்றிபெற்று பதவிக்கு வந்தபின்னர் போரைத் தொடரலாம். அப்போது வெற்றி கிடைத்தால் தமது சாதனைப் பட்டியலில் அதனையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

தேர்தல் பிரசார மேடைகளில் வெளியிடும் சாதனைப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வடபகுதித் தாக்குதலில் உடனடி வெற்றிச் செய்தியை ஆளும் கட்சி விரும்பி நிற்கிறது.

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமது வெற்றிக்கு தமிழ் பேசும் வாக்காளர்களையும் குறிவைத்திருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளும் களத்தில் குதிக்க கச்சை கட்டிக்கொண்டிருக்கின்றன.

தமிழ் கட்சிகள் களத்தில் குதிப்பது என்னும்போது வேறு யாருடனோ மோதுவதற்குத்தான் என்று நினைத்துவிடக்கூடாது.

அப்படியான பரந்த நோக்கத்தையெல்லாம் நம்மவர்களிடம் எதிர்பார்க்கக்கூடாது.

முன் ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும்தான் தமிழர்களது வாக்குகளைப் பெறுவதற்கு பிரதான போட்டியாளர்களாக களத்தில் நின்றன.

பின்னர் அக்கட்சிகள் இரண்டும் ஒன்றுசேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகி "இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் காணீர்" என்று சொல்லிக் கொண்டன.

அதனைக் கண்டு தமிழ் பேசும் மக்களும் இப்போதாவது புத்தி வந்ததே என்று திருப்திப்பட்டுக்கொண்டனர்.

எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான்.

இப்போது மீண்டும் பழைய இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டோம்.

முன்பைவிட மோசமான ஒரு தளத்தில் நமது அரசியல் நின்று கொண்டிருக்கிறது.

ஒரு கட்சி இரு கட்சியல்ல. பல கட்சிகள். இக் கட்சிகளால் வளர்த்து விடப்பட்டு குட்டித் தலைவர்களாக மாறி பின்னர் பிரிந்து போனவர்கள். அப்படிப் பிரிந்துபோய் சுய இச்சைகளாக பல குழுக்கள்.

இவையெல்லாம் குறிப்பாக குறி வைத்துள்ள இடம் கிழக்கு மாகாணம்.

'போர் வேண்டாம்' என்று சொல்லும் தமிழ் கட்சிகளும் படையினர் புலிகளோடு நடத்திய போரில் கிடைத்த பகுதிகளுக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன.

"போரை நிறுத்தினால்" இக்கட்சிகள் தேர்தலில் நிற்பதற்கு ஒரு துண்டு நிலம்கூட கிடைக்காமல் போய்விடும்.

ஆயினும் மக்களைக் கவர "போர் வேண்டாம். பேசுங்கள்" என்று நம் தமிழ் கட்சிகள் குரல் கொடுத்தபடி இருக்கின்றன.



கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடபகுதியில் இருந்து பாராளுமன்றத்திற்கு சென்றுள்ளவர்களில் பலருக்கு எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறும் சாத்தியம் கிடையாது.

அவர்களுக்கே தாம் கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற காரணம் என்னவென்று தெரியும். எப்படியெல்லாம் முயற்சி செய்து கதிரைகளை கைப்பற்றினார்கள் என்பதை அவர்களே நன்கு அறிவர்.

அதிலே ஒரு சிலர் இதுவரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததே பெரிய அதிஷ்டம். இத்தோடு ஒதுங்கிவிடுவதே புத்திசாலித்தனம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வேறு சிலருக்கு இன்னமும் ஆசை இருக்கிறது.

அதனால் கிழக்கில் கண் போட்டிருக்கிறார்கள். கடந்த பொதுத் தேர்தலில் அமரர் அமிர்தலிங்கத்தார் கிழக்கில் போட்டியிட்டார்.

வடக்கில் போட்டியிட பயந்து கிழக்கே ஓடிப்போய் நிற்கிறார் என்று கூறியவர்கள் இப்போது தாமும் கிழக்கில் போட்டியிட திட்டம் போடுகிறார்கள்.

தற்போது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் ஒருவர் கிழக்கில் கண் வைத்து, தான தருமங்கள் செய்து வருவதாகத் தெரிகிறது.

யாழ் மாவட்டத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட

**நாரதர்**

நிதியை கிழக்கு மாகாணத்துக்கு கொடுப்பதற்கு அவர் முன்வந்திருந்தார்.

அதனை அரசாங்கம் தடுத்துவிட்டது. யாழ் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை உரிய முறையில் பயன்படுத்த முடியாத நிலையில் கிழக்குக்கு கொடுக்க முன்வந்ததை பாராட்டலாம்.

ஆனால், இறால் போட்டு சுறாப் பிடிக்கும் நோக்கம் அதில் இருக்கும்போது பாராட்ட முடியாமல் போய்விடுகிறது.

ஒரு ரூபாய் போட்டால் அது இரு மடங்காக திரும்பக் கிடைக்கவேண்டும் என்று நினைப்பதுதான் வியாபாரம்.

அரசியலில் உள்ளவர்களும் அப்படித்தான் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

பாடசாலைக்கு புத்தகம் கொப்பிகள் வாங்கிக்கொடுத்துவிட்டு, உடனே அதனை கண்டிப்பாகப் போடவும் என்ற அடிக்குறிப்போடு பத்திரிகைகளுக்குச் செய்தியாகத் தெரிவித்து விடுகிறார்கள்.

ஒரு அமைப்பு கோவில் திருவிழா ஒன்றை கோலாகலமாக நடத்தியிருக்கிறது.

பக்தி அம்மன் மீதா? அல்லது அம்மன் பக்தர்களது வாக்குகள் மீதா? என்பதுதான் சந்தேகம்.

தமிழ்நாட்டில் அகதிமுகாமில் கஞ்சிக்கும் வழியில்லாமல் கஷ்ரப்பட்டுக்கொண்டிருந்த முன்னாள் 'போராளிகள்' மீது கட்சிகளுக்கு கரிசனை வந்திருக்கிறது.

தேர்தல் திருவிழாவுக்கு ஓடியாடி வேலை செய்ய ஆட்கள் தேவை. அதனால் அகதி முகாம்களில் இருந்தவர்களுக்கு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண மக்களின் முதுகில் சவாரிவிட்ட நபர்களும் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்த திருப்தியோடு திரும்பி வந்திருக்கிறார்கள். அதிலே சிலர் லேபிள்களை மாற்றிக் கொண்டும் வருகிறார்கள்.



முன்னர் எந்த கட்சியை வசைபாடிக் கொண்டிருந்தார்களோ இப்போது அதே கட்சியின் உறுப்பினர்களாக அதுவும் முக்கிய பிரதிநிதிகளாக வந்து தங்கள் கறைபட்ட முகம் காட்டுகிறவர்கள் தொகை இம்முறை அதிகமாக இருக்கும்.

கிழக்கில் சிவில் நிர்வாகத்துக்கு புலிகள் மட்டும் எதிரிகள் என்று அரச படைகள் நினைத்துக்கொண்டிருக்கின்றன.

ஆனால்-புலிகள் இல்லாத துணிவில் மீண்டும் களம் புகுவதற்கு வந்திருக்கும் நரிகளால் மக்களுக்குத் தொல்லைகள் காத்திருக்கின்றன.

ஊரிலே ஒரு சண்டியன் இருந்தால் ஓரளவு அவனை திருப்தி செய்து தப்பிக் கொள்ளலாம். ஒன்பது சண்டியன்கள் இருந்தால் ஊரில் ஒன்றுமே மிஞ்சாது. ஆளாளுக்கு மிரட்டுவார்கள். இருப்பதைப் பறிப்பார்கள்.

தமிழ் கட்சிகளது ஜனநாயக நீரோட்டம் ஒதுக்கப்பட்டுக் கிடந்த குப்பைகளை மீண்டும் கொண்டுவந்து மக்களிடம் சேர்த்த 'பெருமையை' பெற்றுக்கொண்டிருக்கிறது.

ஜனநாயக நீரோட்டத்தால் தமது கடந்தகால தவறுகளை சுத்தம் செய்து கழுவிக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்தது தவறாகிவிட்டது.

தலைகீழாக நின்றாவது எம்.பி பதவி பெற்றுவிட்டால்போதும் என்று நினைக்கிறார்கள்.

புளொட், ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். துண்டு துண்டாக ஈரோஸ், இவற்றோடு நாமும் தயார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி, நானும் கேட்டுப் பார்த்தால் ஏதாவது கிடைக்காதோ என்ற நப்பாசையோடு குமார் பொன்னம்பலம்.

இவர்கள் எல்லோரும் கிழக்கு மாகாணத்தை காக்கப்போவதாகக் கூறி களம் காணத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்.

ஈ.என்.டி.எல்.எவ் என்றொரு அமைப்பு முன்பு இருந்தது. அந்த அமைப்பின் பெயர் நினைவில் இருக்கிறதோ இல்லையோ அதில் இருந்து "ஆடும்வரை ஆட்டம், அடிக்கும் வரை இலாபம்" என்று அடிவிட்டு ஓடியவர்களை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்த அமைப்புக்கு இங்கு தற்போது நிற்க ஒரு நிலம் இல்லை என்பதால் அதில் இருந்தவர்களுக்கு 'கொள்கை முரண்பாடு'(?!) ஏற்பட்டுவிட்டது. அதனால் வேறு அமைப்புக்களில் நுழைந்து 'நல்ல பிள்ளைகளாக' ஓடி வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஈரோஸ் என்று தம்மை சொல்லிக் கொள்ளும் பல குழுக்களில் ஒரு குழுவைச் சேர்ந்த ரட்ணராஜா என்பவர் இலண்டன் வாசத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார்.

இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். புலிகள் ஏதாவது செய்துவிடுவார்களோ என்று பயந்து தனது பதவியைத் 'தியாகம்' (?!) செய்துவிட்டு இலண்டன் பறந்தவர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புலிகள் எதுவும் செய்யவில்லை என்பதால் இலண்டனில் இருந்த ரட்ணராஜாவுக்கு ஒரு ஆசை.

நானும் போய் அரசியலில் குதித்தால் என்ன? ஆசை பிடித்துத் தள்ளிவிட, விமானத்தில் ஏறி ஓடிவந்து, திருமலைக்கு பறந்து போய் நாடிபிடித்து பார்த்திருக்கிறார். இரகசிய குசு-குசுப்புக் கூட்டங்களும் நடத்தியிருக்கிறார்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்து, அக்கோரிக்கைக்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பாக அறிவித்து தேர்தலில் போட்டியிட்டது தமிழர் விடுதலைக் கூட்டணி.

அப்போது கூட்டணியிடம் ஒரு தொகுதி தனக்குத் தருமாறு கேட்டவர் திரு.ஜூனியர் பொன்னம்பலம் (குமார்). கூட்டணி கொடுக்கவில்லை. அதனால் கோபித்துக்கொண்டு போய் தனியாக, தமிழ் காங்கிரஸ் என்ற பெயரில் யாழ் தொகுதியில் தேர்தலில் நின்றவர் குமார்.

தமிழ் ஈழக் கோரிக்கையை அவர் கேலி செய்து பேசிய குரல் இப்போதும் செவிகளில் கேட்கிறது.

மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் தமிழர்களது ஒற்றுமைக்கு கரும்புள்ளி வைப்பதுபோல தேர்தலில் போட்டியிட்டவர், இப்போது ஏனைய தமிழ் அமைப்புக்களை கேலி செய்கிறார்.

திரு.குமார் தேர்தலில் போட்டியிட்ட நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த 'தீப்பொறி' என்னும் பத்திரிகை ஒரு செய்தி வெளியிட்டது. அதன் தலைப்பு இப்படியிருந்தது.

"அப்பனுக்கு கொள்ளிவைக்க வந்தவர் தமிழனுக்கு கொள்ளி வைப்பதா?"

சற்று காரமான வாசகம்தான் இது. ஆயினும் திரு.குமார் தற்போது ஏனைய தமிழ் கட்சிகளை விமர்சிக்கும் வார்த்தைகளோடு ஒப்பிடும்போது அது பரவாயில்லையோ என்று தோன்றுகிறது.

திரு.குமார் பொன்னம்பலமும் திருமலைக்கு போய் கருத்தரங்கு ஒன்று நடத்திவிட்டு, எதிர்பார்த்தளவு கூட்டம் சேராமையால் கவலையோடு திரும்பியிருக்கிறார்.

அரசாங்கத்தோடு சேர்ந்து நின்ற கட்சிகள் என்று தமிழ் கட்சிகள் சில மீது குமார் கோபமாக வார்த்தைகளை வீசியிருக்கிறார்.


அவரது தந்தையார் திரு.ஜி.ஜி. பொன்னம்பலமும் ஒரு காலத்தில் ஐ.தே.க அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவர்.

(தொடர்ச்சி மறுபக்கம்)

> “தமிழ் கட்சிகளது ஜனநாயக நீரோட்டம் ஒதுக்கப்பட்ட குப்பைகளை மீண்டும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.”

> “தந்தை அமைச்சராக இருந்து பெற்றுக்கொடுத்த சலுகைகளை சொல்லி 77ல் வாக்கு கேட்டவர் திரு.குமார்.”

---



## அதிரடி அய்யாத்துரை

**உ**யர்ந்த இடத்தில் இருப்பவரின் திட்டமிடல் புதிய செயலாளர் உலகத் தொலைக் காட்சிகளின் செய்திகளில் நம்நாட்டு நிலவரம் வரும்போது சதுரப் பெட்டி போடும் விசயத்தை நிறுத்தச் சொல்லிப்போட்டாராம். மேலும் புதிய தனியார் தொலைக் காட்சிகளுக்கு அலைவரிசை கொடுக்கிற ஐடியா தற்போதைக்கு இல்லையாம்.

**கொ**ழும்பிலை கலை விழா நடத்தப்போறதாகச் சொல்லி காசு திரட்டின கும்பல் ஒண்டு, திரட்டினதையெல்லாம் கண்டபடி செலவழிச்சுப்போட்டுதாம். அதாலை காசை எல்லாம் அவை பறிச்சவை, இவை பறிச்சவை எண்டு கதை விட்டு காலத்தை கடத்துதாம். விழா ரிக்கற்றுகள் எடுக்கிறவை இனிமேல் ஆட்களைப் பார்த்து எடுக்க வேணும்.

**பா**ரிசிலை நடந்த 'சபா' கொலைக்கு தாங்கள் பொறுப்பில்லை எண்டு ரெண்டு எழுத்தார் மறுத்தவையல்லோ. ஆனால் பாருங்கோ யாழ்ப்பாணத்திலை உள்ள அவற்றை குடும்ப உறவுகளை பயங்கரமாய் கண்காணிக்கினமாம். நெருப்பில்லாமல் புகையுமோ? பாரிசிலை வைச்சு நெருப்பு ஊரிலை புகையாமல் பார்க்கினம் எண்டுதான் கதை. அதை விடுங்கோ எங்களுக்கேன் வம்பு.

**பு**த்திரிக்கு புகழ் சேரும் விசயம் அம்மாவுக்கு சந்தோசம்தான். எண்டாலும் பாருங்கோ பொறுத்த பதவிக்கு மகள் பெயர் அடிபடுற விசயத்தை அம்மா விரும்பேல்லையாம். பசி வந்தால் பத்தும் பறக்கும். பதவி விவகாரத்துக்கும் அது பொருந்துமோ எண்டு நீங்கள்தான் சொல்லவேணும்.

**உ**யர்ந்த இடத்தவரின் செயலரான அதிகாரிமீது கட்சி வட்டாரத்திலை பலத்த அதிருப்தி நிலவுதாம். இனப்பிரச்சனை எண்டால் எங்கை இருக்கு எண்டமாதிரி வந்த அறிக்கையளுக்கு அவர்தான் காரணமாம். இனி உரியவருக்கு விளக்கிச் சொல்லாமல் வெளியிலை அறிக்கை கொடுக்கக்கூடாது எண்டு சொல்லப்பட்டிருக்காம். முன்னாள் உயர்ந்த இடத்தவருக்கும் அவர்தானே செயலராய் இருந்தவர்.

**'பி**ரேம்' முதல்வர் ரெண்டு எழுத்தாரிலை முக்கிய புள்ளி வந்து தன்னைச் சந்திச்சதாக சொல்லுற விசயத்திலை உண்மையில்லை எண்டு தகவல். உண்மையோ பொய்யோ அவருக்கு விளம்பரம் கிடைக்கவும் ரெண்டு எழுத்தாரின் பெயர் உபயோகமாகியிருக்கு.

**நீ**லக் கட்சிக்கு ஒரே குழப்பம். தமிழ் கட்சியள் சிலது நான் முந்தி நீ முந்தி எண்டு போய் "எங்களுக்குத்தான் நல்ல பேர். எங்களோடை கூட்டு வையுங்கோ" எண்டு ஒரே நச்சரிப்பாம். உறவும் வேண்டாம் பகையும் வேண்டாம் எண்டு போட்டு, வரக்கூடிய தமிழ் கட்சிகள் எல்லாத்தையும் முதுகிலை தட்டிக்கொடுக்க நினைக்குதாம் நீலக்கட்சி.

**ர**ஜனிகாந்த்தோடையும் கவிசிலையும், ஜெர்மனியிலையும் எங்கடை ஆட்கள் சிலர் மல்லுக்கு போயிருக்கினம். ரஜனிக்கு ஏதாவது செய்து தொலைத்தா ராஜீவ் காந்தி விவகாரத்தைவிட பெரிய விவகாரமாகிவிடும் எண்டு சிலர் சொல்லிக் கவலைப்படுகினம். படவேண்டிய ஆட்கள் கவலைப் படேல்லையல்லோ?

**எ**ங்கடை தமிழ் அரசியல் நிலவரம் வரவர மோசமாகிக்கொண்டு போகுது பாருங்கோ. இந்த நேரத்திலை பட்டுக்கோட்டையார் மனம் வெறுத்துப்போய் எழுதின பாட்டொன்றுதான் நினைவுக்கு வந்து தொலைக்குது. நீங்களும் கேளுங்கோ.

"நல்ல வழியிலே வாழ நினைச்ச
நாயா அலையாதே-அது இந்த
நாளில் முடியாதே.
நரியைப் போல எலியைப் போல
நடக்கத் தெரிஞ்சுக்கணும்-தம்பி
உடம்பு அழுக்கு-உடலும் அழுக்கு
உள்ளம் அழுக்குங்க- அதுலேதான்
உலகம் கிடக்குங்க."

காலப் பொருத்தமான கச்சிதமான பாட்டெல்லோ இது.



போலிச் சாமியாரால் கண்கள் குருடாக்கப்பட்ட பத்துவயதுச் சிறுவன்.

# பெருகிவரும் போலிச் சாமியார்கள்

## சிறுவனை குருடாக்கி பிச்சை எடுக்க வைத்தவன்

தமிழ்நாட்டில் சிறுவனின் கண்களைக் குருடாக்கிப் பிச்சை எடுக்க வைத்த போலி சாமியாரைப் பொதுமக்கள் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர். போலிச் சாமியாரைப் பொலிசார் வெளியே விட்டு விட்டனர். 'உதவும் கரங்கள்' என்ற அமைப்பின் தலைவர் வித்யாகர், தற்போது அந்தச் சிறுவனைத் தனது பராமரிப்பில் வைத்துள்ளார்.

இதுபற்றி வித்யாகர் தெரிவித்திருப்பதாவது: கடந்த 16ம் திகதி போலிச் சாமியார் ஒருவரால் 10 வயது சிறுவன் கண்கள் குருடாக்கப்பட்டு பிச்சை எடுக்கக் கடத்தி வரப்பட்டதாக சென்னை வானொலி நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. இதை அடுத்து சென்று பார்த்தபோது கிடைத்த தகவல் அதிர்ச்சி அளித்தது.

இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்தில் உள்ள ஏலூர் என்னும் ஊரில் 'நவயுக நிர்மான்' பள்ளியில் 2ம் வகுப்பு பயிலும் மாணவன் கோபி. இவனது தாய் சாவித்திரி அம்மாள். அங்குள்ள இரயில் நிலையத்தில் வேர்கடலை விற்கிறார். கடந்த 10 நாட்களுக்கு முன் கோபி அந்த இரயில் நிலையத்தில் விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது தன் பெயர் பெண்டையா எனக் கூறிக்கொண்டு போலி சாமியார் ஒருவர் கோபியை அவனது அம்மா அழைப்பதாகக் கூறி சிறிது தூரம் அழைத்துச் சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்றபின் அம்மா எங்கே என்று கேட்ட கோபியைப் போலிச் சாமியார் தன் பையில் வைத்திருந்த ஸ்போக்ஸ் கம்பியால் கோபியின் கண்களைக் குத்த முயன்றான். உடனே கோபி, போலிச் சாமி யாரிடமிருந்து தப்பி ஓட முயற்சித்தான். ஆனால் கோபியை அமுக்கிப் பிடித்த சாமியார் ஒரு புதரின் மறைவில் வைத்து கோபியின் இரண்டு கண்களையும் கம்பியால் குத்தியுள்ளான்.

கண்களில் இரத்தம் வடிய வடிய கோபியை ஏலூரிலிருந்து போலிச் சாமியார் சென்னைக்குக் கடத்தி வந்துள்ளான். பின்னர் தினமும் இரயிலில் பிச்சை எடுக்கும்படி துன்புறுத்தியுள்ளான். இந்நிலையில் ஒருமுறை கோபி தப்ப முயன்று கண் தெரியாததால் கீழே விழுந்து காயப்பட்டுள்ளான்.

இந்நிலையில் கடந்த 15ம் திகதி திருவள்ளூர் தாலுகா வேப்பம்பட்டு கிராமத்தில் கோபியைப் பிச்சை எடுக்கச் சொல்லி போலிச் சாமியார் துன்புறுத்தினான். இதைப் பார்த்த மக்கள் போலிச் சாமியாரின் மீது சந்தேகமடைந்து விசாரித்தபோது கோபி கடத்தி வரப்பட்டு பிச்சை எடுக்க துன்புறுத்தப்பட்டு வருவதாகத் தெரிந்தது. இந்நிலையில் தன்னைக் காப்பாற்றும்படி கோபி அழுததால் பொதுமக்கள் போலிச் சாமியார் பெண்டையாவை பிடித்து செவ்வாய்பேட்டை பொலிசில் ஒப்படைத்தனர்.

ஆனால் போலிச் சாமியாரை பொலிசார் வெளியே அனுப்பி விட்டனர்.

பொலிசில் இருந்து விடுபட்ட போலிச் சாமியார் இன்னும் எத்தனை பிள்ளைகளைக் குருடாக்கப் போகிறார் எனத் தெரியவில்லை. இவ்வாறு வித்யாகர் தெரிவித்துள்ளார்.

# உலக ரவுண்டப்

## கண்டிக்கப்பட்ட உடை! விமர்சகர்களுக்கு கெட்ட கோபம்!!

பிரிட்டனைச் சேர்ந்த திரைத் தாரகை எலிசபத் ஹேர்லி தனது ஏழு வருட நண்பரான ஹியூ கிராண்டுடன் லண்டனில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்த போது பிடிக்கப்பட்ட படம் இது. தனது ஆடையினை ஊசிகளைக் கொண்டு பிணைத்து கவர்ச்சியாகத் தோன்றினார். செய்தியாளர்கள் இத்தோற்றத்தினைக் கண்டித்து விமர்சனம் செய்திருந்தனர். எலிஸபத் நடித்த 'பீமோண்ட் பேட்லம்' (மனநோயாளர் விடுதிக்கு அப்பால்) என்ற படம் விமர்சகர்களின் கண்டனக் கணைகளுக்கு இலக்காகியிருக்கிறது. ஒரு விமர்சகர், 'சுற்றுச்சூழல் மாசடைவதற்குக் காரணமாக அமைகிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விமர்சனம் நடிகைக்குரியதா அல்லது திரைப்படத்துக்குரியதா என்று தெரியவில்லை.



## அழகு ராணிக்கு ஒரு கோடியே 40 இலட்சம்!

சமீபத்தில் பிலிப்பைன்சில் நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில் இந்திய அழகுராணி சுஸ்மிதா சென் உலக அழகு ராணியாக முடிசூட்டப்பட்டார்.

18 வயதான 5 அடி 9அங்குலம் உயரமான சுஸ்மிதா சென் விமானப்படை அதிகாரியின் மகளாவர்.

1 கோடியே 40 இலட்சம் ரூபாய் பணமும், பரிசுகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

அழகுராணிப் போட்டியைக் கண்டித்து பிலிப்பைன்ஸில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் அரங்குக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தன.

குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது.

உலக அழகுராணியாக இந்தியப் பெண் ஒருவர் தெரிவானது இது இரண்டாவது தடவையாகும்.

எற்கனவே பம்பாய் அழகி ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



சுஸ்மிதா சென்

## இஸ்ரேலுக்கு தலைவலி



கைதுசெய்யப்பட்ட கிளர்ச்சியாளர்கள்

இஸ்ரேல் பாலஸ்தீனத்துடன் தனக்குள்ள பகைமை உணர்வுகளைத் தீர்த்துக்கொள்ள பிரயத்தனம் செய்துவரும் இக்காலகட்டத்தில் இஸ்ரேலில் பல உள்நாட்டுப் பிரச்சனைகள் அடிக்கடி ஏற்பட்டுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

1950ம் ஆண்டுகளில் யேமனிலிருந்து இஸ்ரேலுக்கு வந்து குடியேறிய யூதர்கள் நூற்றுக்கணக்கான சிறுவர்களை கடத்தி குழந்தையில்லாத ஐரோப்பியர்களுக்கு விற்றார்களாம். இதனை ஒரு பிரச்சனையாக்கி இப்பொழுது ராபி உஸி மெஷுலம் எனும் இயக்கம் கிளப்பியிருக்கிறது.

இந்த இயக்கத்துக்குச் சொந்தமான இருமாடிக் கட்டிடத்தில் இவ்வியக்க உறுப்பினர்கள் இருந்து, துப்பாக்கிகளைக் கொண்டு அயலிலுள்ளவர்களை அச்சுறுத்தத் தொடங்கினர். மேலும் சிக்கல்கள் ஏற்படாமலிருக்க கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டுவிட்டனர்.

## போதை பாவிப்பது தனிப்பட்ட உரிமை நீதிபதியின் விசித்திரத் தீர்ப்பு!



கொலம்பியா நாடு போதைப்பொருள் வர்த்தகத்தில் உச்சக் கட்டத்திலுள்ளது. கடத்தலும் இங்குதான் மிகவும் அதிகமாகும்.

அண்மையில் பொகொட்டா நகர நீதிமன்றத்தில் வழங்கப்பட்டதீர்ப்பு விசித்திரமான முறையில் அமைந்திருக்கிறது. போதை வஸ்து வைத்திருந்த ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை விசாரித்த நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார். 'ஒரு குறிப்பிட்ட அளவு போதைப் பொருளை ஒருவர் வைத்திருப்பது குற்றமாக முடியாது. ஒருவருடைய தனிப்பட்ட உரிமையைத் தடை செய்யலாகாது' இவ்வாறு தீர்ப்பளித்திருக்கிறார்.



# மட்டக்களப்பு புதினம்

## அதிரடி அய்யாத்துரையாருக்கு- கொச்சிக்காப் போடியார்

# எழுதும் மடல்

சீவன் கிடந்தா எழுதுவன் எண்டு சொன்ன நான். இந்தச் சீவன் இந்தக் கூட்டுக்குள்ள கிடக்குமட்டும் அய்யாத்துரை அண்ணன மறக்கமாட்டன். இண்டைக்கு நேற்று வைச்ச உறவா இது? யாழ்ப் பாணத்தில நாம ரெண்டுபேரும் ஒண்டடி மண்டடியா கிடந்து புளாவில கள்ளக்குடிச்சி கனகாலம். எல்லாமே இண்டைக்கு நேத்துப்போல இரிக்கி. எப்ப அண்ண இப்பிடி ஒருகாலம் வரப்போகுது?

மட்டக்களப்பில எண்டா கனக்க புதினம்! எல்லாத்தையும் அள்ளா கொள்ளயா எழுதமுடியாது. கனக்க வாத்திமாருக்கு மாத்தம் குடுத்திருக்காங்க. டவுனுக்குள்ள படிப்பிச்சிற்று கிடந்த ஐஞ்சாறு வாத்திப் பொண்டுகள கன்னங்குடா கன்னைக்கு மாத்தி பெரிய புதினம்.பி.டி.செய்த காரியம் இது. அவரும் மனுஷன்-இயினைக்க- அயலுக்குள்ளதானே எண்டு-மாத்தினாரு போல. இந்த வாத்திப் பொண்டுகளெல்லாம்- ராசகுமாரன் எம்.பிய புடிச்சி- கெவணரோட-குளலுக்கால கதைச்சி எல்லாத்தையும், கூட்டோட கேஞ்சல் பண்ணிப் போட்டாங்க; எண்டு கத. பொண் புரச எண்டா பேயும் இரங்கும் எண்டு கத்தாக்கு மரத்துக்குக் கீழ காத்துவாங்க கூடுற நாலைஞ்சி பேரு கதைக்காங்க. முதலெண்டா கோட்டமுனை பாலத்தில நிண்டு கதைப்பினம். இப்ப அந்தப் பக்கம் சென்றி இரிக்கிறதால மூச்சிப் பேச்சே இல்லாம போயித்து.

வாத்திப் பொண்டுகள மாத்தி எடுத்த வேலையில-பி.டியிர 'பவர்' இவ்வளவுதான் எண்டும் கத.

> "பிறின்சிப்பல் அம்மா சயன்ஸிக்கா, கொமேசிக்கா சப்போட் பண்ணுற எண்டு தெரியாம தலையில கைவச்சிட்டாவாம். பேப்பர் காரரையும் ஒண்டையும் எழுதிரவேணாம் எண்டு கும்பிட்டாவாம்... ஆள் அனுப்பி 'தேசியப் பள்ளியா வாற கட்டத்தில இப்படியொரு கயிட்டம் வரோணுமா எண்டு,' மத்தப் பள்ளி பிறின்சிபல்மார் கதைக்காங்களாம்."

'நான்தான் றாஞ்சிபர் பண்ணினநான்' எண்டு நெஞ்சில அடிச்சிச் சொன்ன மனுஷன் அடங்கிப் போய் கிடக்காராம் எண்டு கேள்வி.

ஈசுவரத்தாரையும் ஊரில காணல்ல. காட்டுக் கந்தோருக்குப் போயிட்டு வந்தபிறகு சத்தமும் இல்ல. சின்னப் புள்ளயளப்போல மனுஷன். என்ன செய்யிறது-எல்லோருக்கும் ஒரு பாடந்தான்.

நம்மட மிக்கேல் பள்ளியிலயும் பெரிய புதினமொண்டு நடந்து போச்சி. சயன்ஸ் வாத்தியாரு, கொமேஸ் படிக்கிற ஏலெவல் பொடியனுக்கு-அடிச்சதாம். சயன்ஸ் வாத்தி-கொமேஸ் பொடியனுக்கு என்ன துணிவல அடிக்கிற எண்டு-கொமேஸ் வாத்திக்கு கோபம் வந்திட்டாம். பொடியனுகள் எடிக்கேசன் ஒப்பீசுக்கு சாச்சி அனுப்பினதாம். என்னெண்டு கேட்டா, சயன்ஸ் வாத்திய மாத்தோணும் போல கதைச்சதாம். டி.ஈக்கு சயன்ஸ் வாத்தியாரு சாதி சந்தானத்தில உள்ளவரெண்டு இவையளுக்கு தெரியாம-ஏன் வாயப் போட்ட எண்டும் கத. பிறின்சிப்பல் அம்மா சயன்ஸிக்கா, கொமேசிக்கா சப்போட் பண்ணுற எண்டு தெரியாம தலையில கைவச்சிட்டாவாம். பேப்பர் காரரையும் ஒண்டையும் எழுதிரவேணாம் எண்டு கும்பிட்டாவாம்... ஆள் அனுப்பி 'தேசியப் பள்ளியா வாற கட்டத்தில இப்படியொரு கயிட்டம் வரோணுமா எண்டு,' மத்தப் பள்ளி பிறின்சிபல்மார் கதைக்காங்களாம். ஒடி, ஆடித்திரிஞ்சி மானம் பறந்திடுமெண்டு சரிப்படுத்திட்டாங்களாம், எண்டு மிக்கேல் பள்ளிப் பொடியனுகள் கதைக்கானுகள்.

சிசிலியா பள்ளிக்குள்ளயும், நல்லா சோதின பாஸ் பண்ணின புள்ளயலிட்ட, அப்பா, அம்மாவ வரட்டாம் எண்டு ஒருவியளம். ஏதோ புள்ளியளப்பத்தி நல்லா சொல்லப் போறாங்க எண்டு, தலதெறிக்க ஓடினதாம். அங்க போய்ப் பார்த்தா 'சைக்கிள் செட் கட்டப் போறம்-சீமேந்து தாறியளா? சீட் வாங்கித்தாறியளா?' எண்டு சகமுசப்படுத்திப் போட்டாங்களாம். தாய், தகப்பன் பேய் அறைஞ்ச மாதிரி விறைச்சி போனாங்களாம். புள்ளயள புதிசா சேக்கக்குள்ளதான் டொனேஷன் எண்டா, இப்ப ஓலெவல் பாஸ்பண்ணி ஏலெவலுக் குள்ள போகக்குள்ளேயும், டொனேசன் கட்ட வேணுமெண்டு கேக்கிற காலம் வந்திட்டெண்டு தாய், தகப்பன்மார் தலையில கை வச்சி இருக்காங்க. மத்தப் பள்ளியெல்லாம் இதப் பார்த்து சிரிச்சதாம். அய்யாத்துரை அண்ண உங்களுக்கும் புள்ளியள் இருந்தா இப்பிடியான பள்ளியில சேர்க்கப் போனெயெண்டா தொப்பி துப்பரவுதான். கனக்க எழுதிட்டன்.

வசதி கிடைச்சா இங்க வந்து போங்க. எப்படியோ நேச்சரப் பாத்து செய்யுங்க. சிக்கலுக்க மாட்டயும் எனக்கு விருப்பமில்ல. யாழ்ப்பாணப் புதினங்களும், ஒண்டுமா தெரியல்ல. நூந்துபோய் கிடக்கிறாப்போல. எதுக்கும் எழுத மறந்திராதீங்க.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

5ம் பக்கத் தொடர்ச்சி

ஜி.ஜி.பொன்னம்பலம் அமைச்சராக இருந்தபோது பெற்றுக்கொடுத்த சில சலுகைகளை சொல்லித்தான் 77ம் ஆண்டு தேர்தலில் யாழ் தொகுதி வாக்காளர்களிடம் திரு.குமார் வாக்குக் கேட்டார் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஆக, தனது தந்தையாரையும் "அண்டிப் பிழைப்பவர்கள்" என்று தன்னால் கூறப்படும் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவேண்டிய தர்ம சங்கட நிலைக்கு அவர் உள்ளாகிறார்.

மலையக மக்களது வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தந்தை செல்வாவின் குரல்தான் எதிர்ப்புக்காட்டி ஓங்கி ஒலித்தது.

ஆக, மொத்தத்தில் தனது தந்தையார் தமிழர்களில் ஒரு பகுதியினரை, சில இலாபங்களுக்காக விற்றுவிட நினைத்தார் என்று நாம் கருத அவர் இடமளித்துக் கொண்டிருக்கிறார்.

முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் கொடுக்கவும் தயார் என்பதுபோல் பேசியவர் திரு.குமார் பொன்னம்பலம்.

அவர் சொன்னதை நம்பி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பும் அவரை பாராட்டியிருந்தார்.

திடீரென்று குத்துக்கரணம் அடித்த திரு.குமார் தனது கருத்தை மாற்றிக் கொண்டார். அஷ்ரப்பும் அவரைப் பாராட்டுவதை நிறுத்திக்கொண்டார்.

இத்தனை அரசியல் வரலாற்று மரபோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தில் திரு.குமார் இருப்பதாக தெரிகிறது.

அதற்காகவே திருமலையில் ஒரு வெள்ளோட்டம் நடத்திப் பார்த்திருக்கிறார்.

கிழக்கு மாகாண மக்களுக்கு ஒரு வாய்ப்பு. தங்களை ஏமாற்ற நினைப்பவர்களை அவர்கள் ஏமாற்றியனுப்புவதில் தவறில்லை.

தமது பகுதிகளுக்கு தேவையான உதவிகளை உடனே தெரிவித்து தேர்தல் முடியுமுன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பயன்படுத்த நினைப்பவர்களை பயன்படுத்திக்கொள்வதில் ஒன்றும் தவறு கிடையாது.

தளபாடங்கள் இல்லாத பாடசாலைகள், தடுமாறி விழவைக்கும் குழியும், குண்டுமான வீதிகள்.

மின்சாரம் இருந்தும் மின்சார விளக்குகள் இல்லாத தெருக்கள்,

மீளக் குடியேறி போதிய வசதிகள் இன்றி அல்லல்படும் அகதிகள்.

இப்படி சகல குறைகளுக்கும் குறைந்த பட்சமான உதவிகளையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பத்தை ஏன் தவறவிடவேண்டும்? அவர்கள் ஒன்றும் தம் சொந்தப் பணத்தை செலவழிக்கப் போவதில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒரு பகுதிக்கு இத்தனை என்ற கணக்கில் சீமெந்து விநியோகத்திலும் ஒரு 'கட்சி ஈடுபட்டிருக்கிறது. செய்தி தெரியாத ஏனைய பகுதிகளில் உள்ள சமூக முன்னேற்ற அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட கட்சியோடு தொடர்பு கொண்டு தமது பகுதிக்கும் பெற முடிந்ததை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தாங்கள் முன்னர் இவர்களிடம் இழந்ததை இப்படியாவது பெற்றுக்கொள்ள தேர்தல் ஒரு சந்தர்ப்பமாக அமையட்டும். விடுவான் ஏன்?

ஆனால், தங்கள் முதுகுகளில் ஏறி சவாரி செய்தவர்கள், இலட்சங்களோடு தலைமறைவானவர்கள் போன்றோர் முகத்தில் இறுதியாக கரி பூசவும் மக்கள் மறந்துவிடாதிருக்க வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அலசுவது - இராஜதந்திரி

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.க.மாணிக்கவாசகர், அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோது, யாழ்குடா நாட்டில் போர்காலச் சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளசிறுவர்கள் பற்றிக் கவலை தெரிவித்திருந்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் கடந்த பத்து வருடகால யுத்தம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் மிகவும் பாரதூரமானவையாக இருக்கக் காணப்படுகின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெறும் தாக்குதல் நடவடிக்கைகள் கண்மூடித்தனமானவையாகவே அமைந்திருக்கின்றன.

விமானக் குண்டுவீச்சுக்கள், நெடுந்தூர ஷெல் வீச்சுக்கள் ராக்கெட் தாக்குதல்கள் என்பன முற்றிலும் மூர்க்கத்தனமானவையாகவே இடம் பெறுவதுடன், அவை அப்பாவிப் பொதுமக்களையே பெருமளவில் பாதித்திருக்கக் காணப்படுகின்றன.

வீடுகள், கோயில்கள், பாடசாலைகள் உட்பட வைத்தியசாலைக் கட்டிடங்களும் வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் நாசமாக்கப் பட்டுள்ளன.

குடியிருப்புக்கள் மீது விழுந்த கொடிய குண்டுகள் கட்டிடங்களை மட்டும் தகர்த்துவிடவில்லை. அமைதியான வாழ்க்கை நடத்திய ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் சீரழித்துவிட்டுள்ளன.


ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் இந்த ஆண்டை ஒரு குடும்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. குடும்ப உறவுகளை மேம்படுத்தி, ஒன்றிணைந்த குடும்ப வாழ்க்கை முறைகளை ஊக்குவிக்கும் வகையிலேயே ஐ.நா.ஸ்தாபனம் இந்த ஆண்டை ஒரு குடும்ப ஆண்டென்று அறிவித்துள்ளது.

சிறுவர்களிடையே பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த பத்து வருடகாலமாக இடம்பெற்றுவரும் யுத்தம் வடக்கு-கிழக்கில் பல்வேறு பரிமாணங்களையும்

நடவடிக்கைகள் காத்திரமற்றிருக்கின்றன. இதேவேளை இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளே விரிவுபட்டிருக்கக் காணப்படுகின்றன.

வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக



**ஜனாதிபதியாக நான் இருந்தால்....**

யுத்த டாங்கிகள் விளையாடும் இல்லங்களாகும்.
வானிலிருந்து இனிப்புக்கள் பொழியும்
ஷெல்வீசும் மோட்டார்கள்
வண்ண பலூன்களை வீசும்!
துப்பாக்கிக் குழாய்கள் மலர்கள் தூவும்
உலகக் குழந்தைகள்
வேட்டொலியும்
அபாயச் சங்கொலியும்
செவியில் விழாமல்
விழிகள் மூடி துயில் கொள்வர்.
அகதிகள் அனைவரும்
இல்லம் செல்வர்.
அனைத்தும் புதிதாய் ஆரம்பமாகும்.

எழுதியது-ரெபேட்டோ-வயது 10

வேண்டும்' என்ற அவாவை வெளிப் படுத்தும் படம் ஒன்றை வேறொரு சிறுவன் வரைந்திருந்தான்.

இதுதவிர யுத்தக் கொடுமைகள் பற்றி தமது மனதில் பட்டவற்றை எழுத்து வடிவில் தந்திருந்த சிறுவனொருவன் இப்படி எழுதியிருந்தான்:- "நான் ஜனாதிபதியாக இருந்தால் யுத்த டாங்கிகள் சிறுவர்களின் விளையாட்டு வீடுகளாக மாற்றமடையும்.

வானத்தில் இருந்து இனிப்புப் பண்டங்கள் தரையில் விழும். ஷெல் வெடிகளைப் பிரயோகிக்கும் மோட்டார் களில் இருந்து பலூன்கள் வெளியேறும்.

துப்பாக்கிகளில் இருந்து வேட்டுக் களுக்குப் பதிலாக மலர்களே வெளியேறும்.

உலகின் அனைத்துச் சிறுவர்களும் வேட்டுச் சத்தங்கள், அபாயச் சங்கொலி களின் இடையூறுகள் இன்றி அமைதியாகத் தூங்குவார்கள்.

அகதிகள் தமது சொந்த கிராமங் களுக்குத் திரும்புவார்கள். நாம் அனைத்தையுமே புதிதாக ஆரம்பிப்போம்."

ரொபேர்ட்டோ என்ற பத்துவயது யுகோஸ்லாவியச் சிறுவனே தனது உள்ளக் கிடக்கையை மேற்கண்டவாறு வெளியிட் டிருந்தான்.

யுகோஸ்லாவியாவில் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெறும் மோதல்கள் காரணமாக இதுவரை சுமார் பதினைந்து இலட்சம் சிறுவர்கள் உளரீதியிலான பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர். 15 ஆயிரம் சிறுவர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர். 35 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள்

# வடக்கு, கிழக்கில்— மனிதாபிமானத் தீர்வே இன்று தேவை!

குடும்ப உறவுகள் என்பது இன்று சர்வதேச ரீதியாக உருக்குலைந்து வருவதையே அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

விஞ்ஞான வளர்ச்சி, உலகில் அபரிமிதமான சாதனைகளைப் புரிந்து வருகின்றது. ஆனால் இச்சாதனைகளில் ஏராளமானவை மானிட குலத்துக்குத் தீங்கிழைப்பவையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

கைத்தொழில் வளர்ச்சிகள், போக்கு வரத்து விஸ்தரிப்பு, புதிய குடியேற்றங்கள் என்பன காரணமாக இயற்கை வளங்கள் தினந்தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் புவியில் தாவரங்கள், உயிரினங்கள் என்பன பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன. இரசாயனத் தொழிற்சாலைகள் வெளியிடும் நச்சுப்புகை வான்மண்டலத்தை மாசுபடுத்தியுள்ளது. அத்துடன் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் ஆறுகள், குளங்கள் என்பவற்றைப் பெரிதும் பாழாக்கிவிட்டுள்ளன.

ஆயுதப் போட்டி காரணமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள பல்வேறு ரகத்திலுமான நவீன ஆயுதங்கள் நாளாந்தம் உலகில் பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பந்தாடி வருகின்றன.

இத்தகைய கெடுபிடிகளே உலகில் இன்று பல்வேறு பிரதேசங்களில் அபாயகரமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்துள்ளதுடன், மானிடர்களின் அமைதியான வாழ்க்கைக்குச் சவால் விடுவனவாகவும் காணப்படுகின்றன.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசமும், உலகில் யுத்தக் கெடுபிடிகளால் சூழப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு எந்த வகையிலும் சளைத்திராததாக இருக்கக் காணப்படுகின்றது.

விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்பன வடக்கு-கிழக்கில் ஆயிரக்கணக்கானவர்களை வகை, தொகையின்றிப் பலியெடுத்துள்ளன.

கட்டிடங்கள் தகர்ந்து அவற்றின் அத்திபாரங்களே பிடுங்கி எறியப்பட்ட நிலையில் யாழ்குடா நாட்டில் பல பிரதேசங்கள் அகழ்வாராய்ச்சிக்குட்பட்ட பகுதிகள் போலிருக்கக் காணப்படுகின்றன.

இந்நில்லயில் பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் இளவயதினரின் மனநிலையில் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.

கெடுபிடி யுத்தத்தினால் தோன்றும் அபாயகரமான சூழ்நிலைகள் மட்டுமல்ல, பொருளாதாரத்தடைகளினால் ஏற்படும் உணவுத்தட்டுப்பாடு, மருத்துவ ரீதியிலான அசௌகரியங்கள் என்பனவும் பெற்றதாகவே இருக்கக் காணப்படுகின்றது.

இலங்கை ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் மட்டுமல்ல. இந்தியப் படையினரின் நடவடிக்கைகளும் வடக்கு-கிழக்கில் பாரிய சேதங்களை உண்டுபண்ணியிருந்தன.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து இந்தியப் படையினர் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு வந்திருந்தனர்.

அமைதிப்பணி என்ற பெயரில் இந்தியர்களின் வருகை அமைந்திருந்தது. ஆனால் வடக்கு-கிழக்கில் நிலவிய சிறிதளவு அமைதியையும் குலைத்துவிடுவதாகவே இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் காணப்பட்டிருந்தன.

இந்திய ஆயுதப்படைகள் கொண்டிருந்த பல இராட்சத போர்ச் சாதனங்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வலம் வந்ததுடன், மக்கள் எதிர்பார்த்த அமைதி, சமாதானம் என்பனவற்றை மேலும் தொலை தூரத்துக்குக் கொண்டு செல்வதாகவே இந்தியப்படையினரின் நடவடிக்கைகள் விளங்கியிருந்தன.

எனவே வடக்கு-கிழக்குப் பிரதேசங் களின் யுத்த நிலவரம், அப்பிரதேசங்களில் அனைத்துத் தரப்பினரையும், குறிப்பாக சிறுவர்களை உடல்-உள ரீதியாக பெரிதும் பாதித்துவிட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசியல் ரீதியிலான

இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் ஏற்படுத்திவரும் உளரீதியான மாற்றங்கள் பெருமளவிலான சிறுவர்களையும் ஆயுதபாணிகளாக மாற்றிவிட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த தமிழக இலக்கிய வாதியான 'சுபமங்களா' சஞ்சிகை ஆசிரியர் திரு.கோமல் சுவாமிநாதன், யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்பற்றி விரிவான முறையில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்லறைப்பகுதிக்கு விஜயம் செய்ததுபற்றிக் குறிப்பிட்டுள்ள திரு.சுவாமிநாதன், அக்கல்லறைப் பகுதியின் கல்வெட்டுக்களில் காணப்படும் தகவல்கள் கணிசமானளவு இளவயதினர் யுத்தங் களின்போது கொல்லப்பட்டுள்ளதைத் தெரிவிக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் யுனிசெப் (UNICEF) அமைப்பு அண்மையில் உலகநாடுகளில் யுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் குறித்த பத்திரிகையொன்றை வெளியிட்டிருந்தது.

இப்பத்திரிகை இன்று யுத்தத்தினால் பெரிதும் சின்னாபின்னமடைந்துள்ள யுகோஸ்லாவிய நாட்டின் யுத்த நிலவரங் களை மையமாக வைத்து பல தகவல்களை வெளியிட்டிருந்தது.

யுகோஸ்லாவியாவில் இடம்பெறும் உள்நாட்டு யுத்தம் கடந்த இருவருடங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களைப் பலியெடுத் திருக்கக் காணப்படுகின்றது.

சேர்பிய மற்றும் -முஸ்லிம் இனங்களுக் கிடையிலான மோதல்கள் ஏராளமான வர்களை அகதிகளாகவும், அநாதைகளாக வும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

'யுனிசெப்' (UNICEF) அமைப்பினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர் களின் மனநிலை குறித்து ஆய்வொன்றை அண்மையில் யுகோஸ்லாவியாவில் மேற் கொண்டிருந்தனர்.

யுத்தத்தின் கொடுமையை அனுபவிக்கும் சிறுவர்களிடையே ஓவியங்களை வரையத் தூண்டியும், அவர்களது எதிர்பார்ப்புகள் குறித்து எழுதச் செய்தும் யுனிசெப் நிறுவனத்தினால் அந்த ஆய்வு நடத்தப் பட்டிருந்தது.

அப்போது யுகோஸ்லாவிய சிறுவர்கள் பலர் வரைந்திருந்த ஓவியங்களும், மற்றும் அவர்கள் எழுதியிருந்தவையும் ஓர் அமைதியான, வாழ்க்கைக்காக அவர்கள் எவ்வளவுதூரம் ஏங்குகின்றனர் என்பதை வெளிப்படுத்தியிருந்தன.

வேட்டுக்களைத் தீர்க்கும் இராட்சத யுத்த டாங்கிகள் வழியாக அழகிய மலர்கள் வெளிவரவேண்டும் என்று சிறுவ னொருவன் படம் ஒன்றை வரைந்திருந்தான்.

'குண்டுவீச்சுக்களால் தகர்ந்து போயுள்ள இல்லங்கள் புது மெருகுபெற்று, அவற்றில் வயிராற உண்பதற்கு உணவு தயாராக

ஊனமடைந்துள்ளனர் என்று யுனிசெப் மேற்கொண்ட ஆய்வுகள் வெளிப்படுத்து கின்றன.

உலகில் இன்று யுத்தக் கெடுபிடிகளுக் குள்ளாகியுள்ள நாடுகள் பலவற்றில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமைதிப்படைகள் நிலைகொண்டிருக்கக் காணப்படுகின்றன.

இப்படைகள் வெறுமனே மோதல்களில் குதித்து அழிவுகளையும், அனர்த்தங்களை யும் ஏற்படுத்துவதைவிட அப்பாவி மக்களைப் பாதுகாப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றன.

ஆனால் இலங்கையில் ஆட்சி யாளர்களின் போக்கு விசனத்துக் குரியதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு வெளிநாடுகளின் உதவியுடனான தீர்வு முயற்சிகளை நிராகரித்திருக்கும் இலங்கை அரசு, எவ்விதத்திலும் ஆரோக்கியமான அரசியல் தீர்வை சுயமாக முன்னெடுக்காததாகவே இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த பத்து வருட காலமாக இலங்கையின் வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இறந்தும், ஊனமாகியும், வேறு பாதிப்பு களுக்குள்ளாகியுமிருப்போரின் எண்ணிக்கை எண்ணிலடங்காததாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைபற்றி பிரஸ்தாபிக்கப்படும்போது அரசியல், இராணுவ அணுகுமுறைகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் இந்த இருவகையான அணுகுமுறைகளுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் மனிதாபிமான அடிப்படையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கான அணுகுமுறைகளே தற்போது அவசியம் தேவைப்படுவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் பொதுமக்கள் பல்வேறு விதத்திலும் பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கக் காணப்படுகின்றனர்.

வடக்கே காணப்படும் பொருளாதாரத் தடைகள், மற்றும் மின்சாரமின்மை, மருத்துவ வசதிகளின்மை போன்றன அங்குள்ள மக்களை விரக்தியின் விளிம்புக்கே கொண்டு சென்றுள்ளன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஒரு தீர்வை ஏற்படுத்துவது பற்றிப் பேசுவோர், அப்பிரதேசங்களில் பூதாகார வடிவமெடுத்திருக்கும் மனிதாபி மானப் பிரச்னைகளையே முதலில் தீர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாத தாகின்றது.

**ஒரு குழந்தையின் புன்னகைக்காக....**

"யுத்தத்தையும், சண்டையையும்,
போர் விமானங்களையும்,
ஷெல் வீச்சுக்களையும் நிறுத்துங்கள்!
இராணுவ வாகனங்களையும்
அவை தரும் அழிவையும்—
மரணத்தை விதைக்கும்
சகலவற்றையும்—
ஒரு குழந்தையின்
பூஞ் சிரிப்புக்காக நிறுத்துங்கள்!!"

-இவானா, வயது 11-



# சீதையைத் தீக்குளிக்கச் சொன்ன ராமன்! கண்டித்து மீண்டும் கல்லான அகலிகை!!

லேடீஸ் ஸ்பெசல்

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் சு.சமுத்திரம். கால மாற்றத்தை கருத்தில் கொண்டு பெண் விடுதலை நோக்கில் எழுதப்பட்ட சமகாலப் படைப்புக்கள் சிலவற்றையும், படைப்பாளிகளையும் சுட்டிக்காட்டுகிறார்.



புதுமைப்பித்தன், பெண்ணியத்திற்காக பெரிதாக எதுவும் எழுதவில்லைதான். ஆனாலும், அவரது 'பொன்னகரம்' கற்பு கற்பு என்று கதைக்கின்ற ஆண்களுக்கு ஒரு சவுக்கடி' மாதிரி அமைந்தது. அந்தச் சிறுகதையில், பொருளாதார புறநிலை, அகநிலைக்கு ஒரு காரணம் என்பதைச் சொல்லாமல் சொன்னார். அவரது அகலிகை, பாரதியின் பாஞ்சாலி சபதம் போன்றது. ராமன், சீதையை தீக்குளிக்கச் செய்ததைக் கண்டித்து மீண்டும் கல்லாகிப் போன அகலிகையின் போர்ப் பிரகடனத்தைச் சித்தரித்த சிறுகதை.

'விந்தன்' ஒரு சிறுகதையில், ஒரு தொழுவத்து மாடும், அந்த வீட்டின் மாட்டுப் பெண்ணும் படும் பாட்டை மனித நேயத்துடனும், ஒரு தார்மீகக் கோபத்துடனும் சித்தரித்திருக்கிறார். ஜெயகாந்தன் கதைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவரது பெரும்பாலானவை பெண்ணியத் திற்கும், பெண்ணியத்தின் விடுதலைக்கும் போர்ப் பரணியாக அமைந்தவை. ஆனாலும், அவரது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' பெண்ணியத்தை பிற்போக்காய் சித்தரிப்பது.

எழுத்தாளர் அகிலன் அவர்களுக்கு, ஞானபீடம் பரிசு வாங்கிக் கொடுத்த 'சித்திரப்பாவை' பெண்ணியத்தின் பழமைக் கும், புதுமைக்கும் ஒரு பாலமாக அமைந்த தோடு, அந்தப் பாலத்தைக் கடக்கும் ஒரு பெண்ணின் துணிச்சலை அழகுற சித்தரிக்கும் நாவல். இந்தக் கதையின் நாயகி ஆனந்தி என்ற இளம் பெண். ஒருவன் வலுக்கட்டாய மாய் முத்தம் கொடுத்த ஒரே காரணத்திற்காக, அவனை கைப்பிடித்து, அவன் கட்டுக்குள் இருக்கவேண்டிய இக்கட்டிற்கு உட்படுகிறாள்.

இது ஒரு பழமைவாதம். ஆனாலும் கட்டாயத்தின் பேரில் கைப்பிடிக்கப்பட்டவன். தன்மீது கொடுமைகளை ஏவிவிடும்போது, சீறிப்பாய்கிறாள். அவனை உதாசீனம் செய்துவிட்டு, முன்பு காதலித்த ஒரு ஓவியனுடன் வாழத் துணிகிறாள். இந்த நாவல், பெண்ணியம் கால மாறுபாட்டில் முக்கியக் கட்டத்திற்கு வந்ததை செம்மையாகச் சித்தரித்தது.

**கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று சினிமாக்காரர்களும், நாடகக்காரர்களும் இப்போதுகூட, நம்மை நம்பவைத்துக் கொண்டிருக்கும் போது, ஆடி அடங்கி, கெட்டுப்போய் திரும்பி வரும் கணவனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் 'கருணை மனு' என்ற எழுத்தாளர் லிங்கனின் சிறுகதையும் குறிப்பிடத்தக்கது.**

இதற்கு இணையான நூல் ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' என்ற நாவல். இதில் ஊதாரிக் கணவனால் உபாதைக்குட்படும் மனைவி, இறுதியில் சலித்துப்போய் அந்த வீட்டைவிட்டே தானாக வெளியேறி விடுகிறாள். இந்த நாவலின் யதார்த்தம் முழுமையாகக் கொடிகட்டிப் பறக்கிறது. இந்த யதார்த்தத்தைக் கருதி, எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து வெளியேறும் ஒரு தாயின் வேதனையை பரிபூரணமாக சித்தரிக்கும் நாவல் இது.

புதிய தலைமுறை எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் சிவகாமி. அண்மையில் வெளியான இவரது 'ஆனந்தாயி' என்ற நாவலின் இயல்புகள் இந்தக் காலத்தில் அடிபட்டுப்போய்விட்டன; என்றாலும், 'ஆனந்தாயி' என்ற பெண் தாய்மையும் வாய்மையுமாய் கொதிப்பதையும், குமுறுவ தையும் அழகியலுடன் சித்தரிக்கிறது இந்த நாவல். பெண்ணைக் கொச்சைப்படுத்தும் ஒரு காண்ட்டிராக்டர் கணவன், மனைவியான ஆனந்தாயியையும் ஒரு காண்ட்டிராக்ட் பொருளாகக் கருதுவதை இலக்கிய நயத்தோடு இயம்பும் நாவல்.

எழுத்தாளர் திலகவதி, செம்மலரில் எழுதிய ஒரு சிறுகதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அது ஓரளவு செயற்கைத்தனமாக தெரிந்தாலும், ஒரு சக பெண் தொழிலாளியை, மேனேஜர் அடிக்க அதைச் சகித்துக்கொண்டிருக்கும் கோழைக் காதலனைத் துச்சமென மதித்து, அவனை ஒரு சேரிப்பெண் ஒதுக்கி விடுவாள்.

இது பெண்ணியத்தை ஓரளவிற்கு முன் நகர்த்திச் சென்ற கதை. இதேபோல் அம்பையின் பல சிறுகதைகள் பெண்ணின் இடர்பாடுகளை எடுத்துக் கூறுபவை. இவரது 'அம்மா ஒரு கொலை செய்தாள்' என்ற சிறுகதை, ஒரு வயதுக்கு வந்த பெண்ணின் மனோபாவம், எப்படி முன்பு அன்பு காட்டிய அதே அன்னையாலேயே வாதைக் குள்ளாகிறது என்பதை மிக நயம்பட சித்தரிக்கிறது.

பெண் விடுதலைக்காகவே தனது சிந்தனையைச் செலவிடும் எழுத்தாளர் ஜோதிர் லதாகிரிஜா, இவரது பல சிறுகதைகள் ஆணின் துணையில்லாமலே ஒரு பெண்ணால் வாழமுடியும் என்பதை நிலைநிறுத்துபவை. அனுராதா ரமணனும் இந்த வகையில் ஒரு சில நல்ல சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.


ஒரு கிழவனைத் திருமணம் செய்து கொள்ளும் கட்டாயத்திற்கு உட்படும் பெண்ணிற்கு, பாலியல் சுதந்திரம் வேண்டும் என்பதை வற்புறுத்தும் குறிப்பிடத்தக்க நாவல்களில் ஒன்று பொன்னீலனின் 'கரிசல்'. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று சினிமாக்காரர்களும், நாடகக்காரர்களும் இப்போதுகூட, நம்மை நம்ப வைத்துக்கொண்டிருக்கும்போது, ஆடி அடங்கி, கெட்டுப்போய் திரும்பி வரும் கணவனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் 'கருணை மனு' என்ற எழுத்தாளர் லிங்கனின் சிறுகதையும் குறிப்பிடத்தக்கது.

இப்படிப் பெண்ணின் உரிமையை ஆண்களின் கொடுங்கோன்மைக்கு எதிராகச் சித்தரித்த நாவல்கள், சிறுகதைகள் பல உருவானபோது, கந்தர்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, தமிழ்ச்செல்வன், சுப்பிரபாரதிமணியன், கோணங்கி, பாவண்ணன், பூமணி, பிரபஞ்சன், செயப்பிரகாசம், ரோஜாக்குமார் போன்ற முற்போக்கு எழுத்தாளர்கள், பெண்ணியத்தை வர்க்க ரீதியாக சித்தரித்திருக்கிறார்கள். இவர்களது பெரும்பாலான படைப்புகளில், ஆணும் பெண்ணும் கைகோர்த்து செல்லும் சித்தரிப்புகளையே அதிகமாகக் காணலாம்.


## நீங்களும் தைக்கலாம் எஸ்.எஸ்

### 6 மாதக் குழந்தைக்கான ஆரோக்கியச் சட்டை

A-B சட்டையின் அகலம் - 9"
A-D சட்டையின் நீளம் - 11"



படம் 1


படம் 2

A யிலிருந்து 1 1/2" உட்புறமாக E எனக் குறிக்குக. E யிலிருந்து 2" உட்புறமாக H எனக் குறிக்குக. பின்னர் E யிலிருந்து வளைவாக F என வரைக. அதன்பின் F லிருந்து 4 1/2" கீழ்நோக்கி G எனவும் குறித்துக் கொண்டு மேற் காட்டப்பட்டவாறு கழுத்துப் பகுதியை இரண்டாக மடித்து சிறிய அரைவட்ட வடிவில் வெட்டவும்.

வெட்டப்பட்ட தோள் பகுதியை மூட்டியபின்பு வேறு கலரில் குறுக்கு நேரான (குறஸ் பீஸ்) துணி 1 1/2" அளவில் வெட்டி சிறயதாக பைப்பிங் பிடித்துக் கொள்ளவும். அதன்பின் 4" நீளமும் 1 1/2" அகலமுமான 4 துணிகளை எடுத்து மேலே (படம் 2) காட்டியவாறு கீழ்ப்பகுதியை மட்டும் V வடிவில் வெட்டி 2 துண்டினை ஒன்றன்மேல் ஒன்றுவைத்து தைத்து திருப்பிக் கொள்ளவும். திருப்பிய துண்டினை சட்டையின் பின் பக்கத்தில் உள் பகுதியில் தைக்கவும். தைத்ததும் V வடிவத்தின் பகுதியை சட்டையின் முன்பகுதியின் மேலே ரட்ஸ் வைத்து தைத்து இலகுவாக குழந்தைக்கு அணிவிக்கலாம்.

## அழகுக் குறிப்புகள்


ருக்கா-நாதன்



சிறிதளவு கிளிசரின் கலந்து இரவில் படுக்கமுன் முகத்தை கழுவி வந்தால் முகச் சுருக்கம் அகலும். அத்துடன் கினன்சிங்கிரீன் காலை மாலை பூசி முகம் கழுவ வேண்டும்.

**வில் புருவம் செழிக்க**

புருவங்கள் நீண்டு அழகுடன் வளர அப்பிள் பழத்தை நறுக்கித் தேனில் தொட்டுச் சாப்பிட வேண்டும்.



**உலராது இருக்க**

லிப்ஸ்டிக் பூசுபவர்களுக்கு உதடு உலராமல் இருக்க லிப்ஸ்டிக்கை பூசியவுடன் ஐஸ்கட்டியை உதட்டின்மேல் வைத்து அழுத்தி எடுத்தால் லிப்ஸ்டிக் நாளை முழுவதும் கலையாமல் உலராமல் இருக்கும்.

**முகச் செழிப்புக்கு**

முகத்தில் சுருக்கம் போக பசுவின் பாலில்



**முடி மின்னும்!**

தலையில் உள்ள பொடுகு போக தலைமயிர் நீண்டு வளர செம்பருத்தி இலை ஒருபிடி எடுத்து அம்மியில் அரைத்தால், அது நுரைபோல் ஷாம்பு போல் வரும். அதை வாரம் இருமுறை தலைக்கு தேய்த்து குளித்தால் கூந்தல் பட்டுப்போல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும். உடம்பிற்கும் குளிர்மை.

## வீட்டுக் குறிப்பு



நீங்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறீர்களா? அடிக்கடி களைத்துப் போகிறீர்களா? இதை அப்படியே விட்டுவிடாதீர்கள். பின்னால் பெரிய பிரச்சனையில் கொண்டு விட்டுவிடும்.

தினமும் காலையில், வெறும் வயிற்றில் தோடம்பழச் சாறு ஒரு டம்ளரும், பேரீச்சம்பழம் மற்றும் உலர்ந்த திராட்சைப் பழத்தை சாப்பிட்டு வாருங்கள். தொடர்ந்து சாப்பிட வேண்டும். பிறகு பாருங்கள். சுறுசுறுப்பானவர்களாக, ஆரோக்கியமான வர்களாக மாறி விடுவீர்கள்.


பரிசுத் திட்ட கூப்பன் இல-16

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.


## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### முருங்கை பாட்லா

**தேவையானவை:**

முருங்கைக்காய்- 06
வெங்காயம்- 03
தேங்காய் அல்லது கொப்பரை 4 அங்குலத்துண்டு
பூண்டு இரண்டு பல்
மிளகாய் வற்றல்-4
மஞ்சள் சிறுதுண்டு
புளித்தண்ணீர் 1/2 கோப்பை
பச்சைக் கொத்தமல்லி 1 சிறிய கட்டு
எண்ணெய் 4 மேசைக்கரண்டி
கடுகு ஒரு தேக்கரண்டி
உப்பு தேவையான அளவு

**செய்முறை:**

1. மிளகாய் வற்றல், வெங்காயம், பூண்டு தேங்காய், மஞ்சள் எல்லாவற்றையும் தணலில் காட்டிச் சுட்டுக்கொள்ளவும்.
2. எல்லாவற்றையும் மிருதுவாக அரைத்துக் கொள்ளவும்.
3. எண்ணெயில் கடுகைத் தாளிக்கவும். அரைத்த மசாலாவைப் போட்டு 2 நிமிடங்கள் வதக்கவும்.
4. நறுக்கிய முருங்கைக்காய்த் துண்டுகளைப் போடவும். 1 கோப்பை தண்ணீர்விட்டுக் காயை வேகவிடவும். உப்புப்போடவும்.
5. காய் பாதி வெந்தவுடன் புளித் தண்ணீரை விட்டு 5 நிமிடங்கள்வரை கொதிக்க விடவும்.
6. பொடியாக நறுக்கிய பச்சைக் கொத்தமல்லியைப் போடவும். பின்னர் சாதத்துடன் பரிமாறவும்.




## நில்! கவனி!! முன்னேறு!!!

அவன் இருந்த இடமும் செழித்தது கிடையாது. சென்ற இடமும் சிறந்தது கிடையாது.

இது இலங்கை அரசியலுக்கும் பொருந் தும். இலங்கைக்குள் தமிழர் அரசியலுக்கும் பொருந்தும். உலக அரசி யலும் ஒத்துக்கொள்ளும்.

கீழ் மட்டத்தில் இருந்தவர்கள் தலைமை யால் ஏமாற்றப்பட்டு-ஒரு கட்டத்தில் விழித்துக்கொண்டு விலகிப் போவது வேறு விவகாரம். அதில் நியாயம் இருக்கிறது.

தவறுகளுக்கு தானும் ஒத்து ஊதிக் கொண்டிருந்த கோட்டான்கள் பிழைப்புக்கு இடம் தேடுவதை கொள்கை முரண்பாடு என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ள நாம் காதிலே பூ வைத்துக்கொண்டல்லவா இருக்கவேண்டும்.

கட்சி மாறிய கையோடு வெட்க மில்லாமல் வேட்பாளரானவர்களை காண முடிந்திருக்கிறது. அதிலே சிலர் வெற்றி பெற்றதையும் கவலையோடு கவனிக்கவும் முடிந்தது.

நாலு வருடத்தில் நாலு கட்சிக்குதாவத் தெரிந்தால் நகரசபை முதல் நாடாளும் சபை வரை உறுப்பினர்களாகச் செல்ல முடியும்.

இந்த நிலையை பார்க்கும் தொண்டன் என்ன நினைப்பான்?

அட, நானும் ஒடுகாலியாக இல்லாமல் போனேனே என்று நினைத்தால் அதில் என்ன ஆச்சரியம் வரப்போகிறது?

விளம்பரம் பெறும் ஆசையில்லாமல் உழைத்தவன் அடடே...விபரம் புரியாமல் விளக்குத் திரியாக இருந்துவிட்டேனே. அந்த வெளிச்சத்தில் விகாரமானவர்கள் எல்லாம் விளம்பரம் பெற்றுவிட்டார்களே என்று வேதனைப்பட்டால் வியப்பென்ன?

## சிந்திக்கலாம் இங்கே...

மனம் கெட்டுப் போனவர்களை முதுகில் தட்டிக்கொடுப்பது போலத்தான் சூழ்நிலை இருக்கிறது.

எல்லோரும் நிர்வாணமாக இருக்கும் போது ஆடையோடு இருப்பவன் கேலியோடு நோக்கப்படுகிறான்.

நிர்வாணத்திற்கு நிரந்தர மரியாதை என்றானவுடனே ஆடையோடு இருப்பவனும் இது தேவைதானோ என்று யோசிக்க வேண்டியவனாகிறான்.

நிர்வாணம் மறைப்பது நியாயம் இல்லையோ? என்று தனக்குள் கேட்டுக் கொள்ளத் தொடங்கிவிடுகிறான்.

நியாயம்தான் என்று தெளிந்த அறிவில் தெரியும் போதும், சுற்றியிருக்கும் நிர்வாணிகளின் கேலி சூழலுக்கு பணிந்து போனால் என்னவென்று தந்திரத்தோடு சிந்திக்க வைத்து விடுகிறது.

அப்படித்தான் நல்லவர்கள் காயம் படும்போது, நடிக்கத் தெரிந்தவர்கள் இலாபம் பெறும் சூழ்நிலையும்.

இதற்கும் அரசியலில் உதாரணம் காட்டினால்தான் உடனே புரியும்.

கட்சியே தம் மூச்சு என்று உழைக்கும் தொண்டன் கீழேயே நின்று கொண்டிருப்பான்.

அவன் கீழே நின்றாலும் கட்சி விழுந்துபோக இருந்த சமயத்தில் எல்லாம் தோள் கொடுத்து உயர்த்தியவனாக இருப்பான்.

ஆனால் அவன் அங்கேயே நின்று கொண்டிருக்க இடையிலே வருகிறவன் கட்சிக்குள் மேல் ஏறிக்கொண்டிருப்பான்.

காரணம், அடிமட்டத்து தொண்டனுக்கு நடிக்கத் தெரியாது. மாறும் பக்கத்திற்கு ஏற்ப நாவசைத்து ஜாலம் செய்யத் தெரியாது.

அடிமட்டத்து தொண்டன் தன் கட்சிக்காக அன்னம் தண்ணியில்லாமல் உழைத்துக் கொண்டிருந்தபோது எதிர் முகாமில் இருந்தவன், இப்போது வந்து இவன் தோளில் ஏறிக் குந்தியிருப்பான்.

எதிர் முகாமை இல்லாமல் செய்துவிட தொண்டனுக்கு தூண்டுதல் கொடுத்த தலைமை, இப்போது எதிர்முகாமில் இருந்து தன் தொண்டனுக்கே தலையில் குட்டியவனை அருகில் வைத்திருக்கும்.

நீங்கள் வளரவே மாட்டீர்கள் என்று வாயாற வசைபாடியவனை, இப்போது உன் தோழன் என்று தலைமை சுட்டிக்காட்டும். சமயத்தில் அவன் பொறுப்பில் நீ இரு என்று நெஞ்சில் நெருப்பும் அள்ளிக்கொட்டும்.


நாலு வார்த்தை பேசத் தெரிந்தால் போதும் நரக மனம் கொண்டவர்களும் பிழைப்புவாத அரசியலால் மெச்சப் படுகிறார்கள்.

அரசியல் கட்சிகளில் முக்கிய பொறுப்புக்களில் இருந்துவிட்டு, காற்று மாறியபோது கட்சி மாறிய எவன் சாதகமும் சுத்தமானதாக இருந்ததில்லை.

(மறுவாரமும் தொடரலாம்)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# பத்து விரலும் ஒரே ரகம்

## ஆனாலும் அதிலே அசாத்திய பலம்

ஐந்து விரலும் ஒரே விதமாக இருப்பதில்லையல்லவா என்று மனிதரது குண வித்தியாசங்களை நியாயப்படுத்துவதுண்டு. இனிக் கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஆனால்-பத்துவிரலும் ஒரே விதமாக உள்ள மனிதர் ஒருவரை உங்களுக்கு அறிமுகம், மற்றும் அறிவிரல் செய்கிறோம்.

அமெரிக்கா-மிச்சிக்கன் மாநிலத்தில் டெற்றொயிற் நகரில் வசிப்பவர் மாக்ஸ் கெண்டல். வயது 44. கைகளில் உள்ள விரல்களெல்லாமே பெரு விரல்கள் தான். ஆள் காட்டிவிரல், மோதிரவிரல், சின்னிவிரல் ஆகிய வித்தியாசம் எதுவுமே இல்லாமல் எல்லாமே பெருவிரல்களாக அமைந்துவிட்டன.

பிறவியிலேயே மாக்ஸ் இந்தக் குறைபாட்டுடன் தான் பிறந்தார். இக்குறைபாட்டை நீக்குவது முடியாத காரியம் என்று மருத்துவர்கள் கூறியமையினால் அதே விரல்களைப் பயன்படுத்தி தன் பணிகளை முடித்து வருகிறார்.

'கொம்பியூட்டர்' விற்பனையாளரான மாக்ஸ் இளவயதில் இத்தகைய குறைபாடு தனக்கு ஏற்பட்டமைக்காக மிகவும் வருந்தியிருக்கிறார். சக மாணவர்களின் கிண்டலும் கேலியும் பார்ப்பவர்கள் அதிசயமாக அவரை நோக்குவதும் அவரைப் புண்படுத்தியிருக்கின்றன. இருப்பினும் மனம் தளராமல் இன்று மனத் தைரியத்துடன் சவால்களை ஏற்று வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறார்.

மாக்ஸின் மனைவி சண்டறா அவருக்கு எக்குறையும் வைக்காமல் நன்றாகக் கவனித்து வருகிறார். மாக்ஸ் தன் சட்டை பொத்தான்களைப் போடுவதில், கழுத்துப்பட்டி கட்டுவதில் மற்றும் பாதணியின் நாடாவை முடிவதில் மிகவும் சங்கடப்படுவார். மனைவி சண்டறா அவருக்கு உதவுகிறார். இவர்கள் இருவரும் கண்டதும் காதல் கொண்டு தாமதியாமல் மணம் புரிந்தவர்கள். இருபிள்ளைகளுக்கு மாக்ஸ் தந்தை.

மாக்ஸின் தாயார் கருவுற்றிருந்த காலத்தில் உட்கொண்ட மருந்தின் பக்க விளைவினால் தான் மாக்ஸ் இத்தகைய குறைபாட்டுடன் பிறந்திருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் முடிவுக்கு வந்துள்ளனர். தனக்கு இது ஒரு பரம்பரை நோயாக இருக்குமானால் தனது வாரிசுகளுக்கும் இக்குறைபாடு தொடரக்கூடும் என்று மாக்ஸ் பயந்தார். ஆனால் பிறந்த குழந்தைகளுக்கு எதுவிதமான சிக்கலும் இருக்கவில்லை என்பதனால் இருவரும் பெருமகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தனக்கு விரல்களில் குறைபாடு இருந்தபோதிலும் கைகளில் அசாதாரண பலம் இருப்பதாக மாக்ஸ் குறிப்பிடுகிறார்.

மாக்ஸ் ஒருதடவை குடிபோதையில் மோட்டார் ஓட்டியமைக்காக பொலிசார் இவரைக் கைது செய்தனர். அப்போது இவருடைய விரல்களை அடையாளம் எடுக்க முற்பட்டபோது பொலிஸ் அதிகாரிகள் திண்டாடிய சம்பவத்தை இன்றும் நினைத்து சிரிக்கிறார் மாக்ஸ்.



ஐந்து விரலும் ஒரு மாதிரியாகவா இருக்கும்? என்று இனிக் கேட்பது கொஞ்சம் கஷ்டம்தான்!

# உயரமான காதல்

## இது மனிதக் காதலே ~~அல்ல~~ தான்!

அவள் பெயர் ஜுலிஃபெல்ரன். ஜுலிக்கும் திருமணம் செய்ய ஆசைதான். ஆனாலும் அந்த ஆசை நிராசையாகிவிடுமோ என்று நித்தம் நித்தம் வேதனையில் துடித்தாள். நெஞ்சிலே கனவு வளர்த்து தவித்தாள்.

இத்தனைக்கும் ஜுலிக்கு ஒரு குறையும் கிடையாது. ஆயினும் உயரத்திலும் குறை வைக்காமல் நெடு நெடுவென்று வளர்ந்துவிட்டதுதான் பிரச்சனை. ஜுலியின் உயரம் 6 அடி 5 அங்குலம்.

மனதுக்கேற்றவனாக மட்டும் இருந்தால் போதாது. உயரத்துக்கு ஏற்றவனாகவும் இருக்கவேண்டுமே. தேடினாள். தேடினாள். தேடிக்கொண்டேயிருந்தாள்.

அன்றுதான் அந்த நாள். அவள்தன் உயரத்துக்கு ஏற்ற நெட்டழகனைக் கண்டநாள்.



### அவள்-6.5 அடி அவன்-7 அடி

ஆம், 7அடி ஒரு அங்குல உயரமுடைய மார்க் கிறேஸை ஜுலி சந்தித்தாள். அண்ணலும் நோக்க அவளும் நோக்கிய இடம் இலண்டனிலுள்ள உயரமானவர்கள் கழகம்.

மனம் கலந்த நிலையில் மணமாலை மாற்றிக்கொள்ள ஏற்பாடாகிவிட்டது. ஏற்பாடுகளை உயரமானவர் கழகமே செய்துவருகிறது.

"மார்க்கை கண்டேன். என் மன விரக்தி மாயமாய் ஓடி மறைந்துவிட்டது. இனி நாங்கள் ஒரு நிமிடம்கூட பிரியமாட்டோம்" என்கிறார் ஜுலி. வாழ்க நெடுமணமக்கள்!

# தகவல் பெட்டி

## இது—பரவாயில்லை!

மனிதரால் மட்டும்தான் பாடமுடியுமா? ஐரோப்பிய இரசிகர்களை மடோனாவால் மட்டும்தான் கட்டிப்போட முடியுமா? இதோ புறப்பட்டுவிட்டது பபூன் மனிதக்குரங்கு. அமெரிக்காவைச் சேர்ந்த இந்த மனிதக் குரங்கை 'மைக்' முன்பாக வாயசைத்து பாடுவதுபோல அபிநயம் செய்ய பழக்கியிருக்கிறார்கள். தற்போது வரும் பல பாடல்களை கேட்பதைவிட இப்படி வாயசைக்கும் போது கேட்கும் சத்தமே சிறப்பாக இருக்குமல்லவா?



## சபாஷ்! சரியான போட்டி!

### குதிரையை முந்திய எருமை




சிறந்த பந்தயக் குதிரைகளையே சவாரியில் வென்று சாதனை படைக்கும் எருமைமாடு ஒன்று களத்தில் குதித்திருக்கிறது. கலிபோர்ணியாவிலுள்ள அல்பனி நகரில் அமைந்துள்ள கோல்டன் கேற் ஃபீல்ட் பந்தைய மைதானத்தில் குதிரைகளுடன் 2000 இறாத்தல் எடை கொண்ட ஹார்வே வோல்பங்கள் என்ற பெயருடைய எருமை, குதிரையை வென்ற போது இப்படம் பிடிக்கப்பட்டது. இந்த எருமையை ரி.சி. தோர்ஸ்ரென்சன் என்பவர் பழக்கியதுடன் சவாரியும் செய்கிறார். இந்த எருமை ஏற்கனவே 21 தடவைகள் வெற்றி பெற்றிருக்கிறது. 5 தடவைகள் தோல்வியையும் தழுவியுள்ளது. இதனுடைய வேகம் மணிக்கு 32 மைல் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

www.padippakam.com

# சி னி வி சி ட்

## வாங்கிக் குவிக்கும் வடிவேலு

நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் மவுசு உயர்ந்து வருகிறது.
பார்த்தார் வடிவேலு. இப்போது உழைத்தாலதான் உண்டு. உடனே ஊதியத்தை ஒரேயடியாக உயர்த்திவிட்டார்.
தற்போது ஒரு படத்திற்கு அவர் வாங்கும் தொகை 4 இலட்சம்.



'கல்நாயக்'
தமிழில் மூன்று நாயகர் என்ற பேரில் தயாராகிறது.
அதில் ஒரு கட்டம் இது.
வியப்பேது கண்டு விரிந்தனவோ சகுந்தலாவின விழிகள்?

## மினிசினி

★ நடிக, நடிகையர் சொந்தக்குரலில் பின்னணி பாடும் வரிசை நீண்டுகொண்டே போகிறது. அண்மையில் எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் உருவாகும் 'ரசிகன்' படத்தில் கதாநாயகனாக நடிக்கும் இவரது மகன் விஜய், சித்ராவுடன் சேர்ந்து தேவாவின் இசையில் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

★ 'சின்னமணி' திரைப்படத்தில் வித்தியாசமான வேடமொன்றில் நடித்து வருகிறார் கஸ்தூரி. அப்படி என்ன வித்தியாசம் என்கிறீர்களா? கிராமத்துப் பெண்ணாக மேக்-அப் இல்லாமல் நடித்து வருகிறார்.

★ 'பாலம்', 'புதிய காற்று' போன்ற படங்களை இயக்கிய கார்வண்ணன் இப்போது 'தொண்டன்' என்ற படத்தை இயக்கி வருகிறார். தொண்டன் என்ற பெயரை இயக்குநர் கே.பாலச்சந்தர் ஃபிலிம் சேம்பரில் பதிவு செய்து வைத்திருந்தார். இதை அறிந்த கார்வாணன் தனது படத்திற்காக பாலச்சந்தரிடமிருந்து அந்தப் படத்தலைப்பை வாங்கி விட்டார்.

★ ஆனந்தபாபு-திரோஷா ஜோடியாக நடிக்கும் 'வானவில்' என்ற படத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'ஒருதலைராகம்' ரவீந்தர் வில்லனாக நடிக்கிறார்.

★ புதிய இயக்குநர் ஆர்.நாராயணன் இயக்கிய 'கல்யாணம்' என்ற படத்தில் விஷ்ணு-வினோதினி ஜோடியாக நடித்துள்ளனர். விஷ்ணு முன்னாள் நடிகை நளினி (ராமராஜன்) யின் தம்பி ஆவார்.

★ சித்திரைப் புத்தாண்டிற்கு வெளிவந்த 'வரவு எட்டணா செலவு பத்தணா' படத்தை இயக்கிய வி.சேகர், அடுத்து இயக்கும் படத்தில் ராதிகா,ஊர்வசி, மனோரமா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கவுள்ளனர்.

★ மணிவண்ணன் இயக்கிய 'ராசா மகன்' படத்தில் இயக்குநர் மனோபாலா நடித்துள்ளார். இவர்கள் இருவரும் தற்போது தோழர் பாண்டியனில் நடித்து வருகின்றனர். மணிவண்ணன்-மனோபாலா மீண்டும் ஒரு புதிய படமொன்றில் இணைந்து நடிக்கவுள்ளனர்.

★ 'சகலகலாவல்லவர்' டி.ராஜேந்தர் கௌதமி கதாநாயகியாக வைத்து 'ஒரு வசந்த கீதம் படத்தை இயக்கினார். விரைவில் இவர் இயக்கும் புதிய படமொன்றில் குஷ்பு கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

★ பாரதிராஜா இயக்கிவரும் 'கருத்தம்மா' படத்தில் தமிழகத்தில் உள்ள பிரபல பேராசிரியர் பெரியார்தாசன் என்பவர் கிராமத்து விவசாயி வேடத்தில் நடித்து வருகிறார்.

★ சுப்பர் நடிகர் கமலஹாசன் நடித்த 'சலங்கை ஒலி', 'சிப்பிக்குள் முத்து' போன்ற படங்களை இயக்கியவர் பிரபல தெலுங்கு இயக்குநர் கே.விஸ்வநாத். மீண்டும் கமலை வைத்து ஒரு படத்தை விஸ்வநாத் இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

★ 'காதலன்' படம் முடிவடைந்ததும் சிவாஜி புரடக்ஷன்ஸ் சார்பில் படமொன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளார் 'ஜென்டில்மேன்' புகழ் சங்கர். இப்படத்தில் பிரபு கதாநாயகனாக நடிப்பார்.



## ரஜினி பரபரப்பு பேட்டி!
### அடுத்த படம் 'பாஷா'!!

விநியோகஸ்தர்கள் தனது படங்களை அதிக விலை கொடுத்து வாங்கி நஷ்டப்படுவதைத் தடுக்க ரஜினி புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார். வெளிநாட்டு சுற்றுப் பயணத்திற்கு முன்பாக சென்னையில் அவர் அளித்துள்ள பேட்டியில் அத்திட்டத்தை வெளியிட்டார். ஒவ்வொரு ஏரியாவுக்கும் என்ன விலைக்கு தனது படத்தை விற்பது என்பதை முதலிலேயே முடிவு செய்துவிட. பின்னர் அவ்விலையை அதிகரிக்கக்கூடாது என்பதுதான் ரஜினியின் திட்டம். தனது அடுத்த புதிய படம் பற்றிய புதிரையும் ரஜினிகாந்த் விடுத்துள்ளார். சத்யா மூவிஸ் தயாரிக்கும் படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்குவார். 'பாஷா' என்று பெயரிடப்பட்டுள்ள அந்தப் படத்தில் இளையராஜா இசையில் ரஜினிகாந்த் நடிக்கிறார். ஆகஸ்ட் மாதம் தமிழ்நாட்டுக்கு திரும்பும் ரஜினிகாந்த் 'பாஷா' படப்பிடிப்பில் கலந்து கொள்வார்.

## வாயால் வந்த வினை!

ராம்கி கதாநாயகனாக நடித்துவரும் படம் 'உளவாளி'. இந்தப் படத்தில் 'ராம்கி'யுடன் சண்டைபோடும் வேடத்தில் நடிக்க கோழி கூவுது விஜியை ஒப்பந்தம் செய்தனர். விஜிக்கு எப்படி சண்டை போடவேண்டும் என்பதை ஸ்டண்ட் மாஸ்டர் சூப்பர் சுப்பராஜன் சொல்லிக்கொடுத்தார். ஆனால் விஜி அதையெல்லாம் தட்டிக்கழித்துவிட்டு "நான் கராத்தே கற்றவள். எனக்கும் சண்டைபோடத் தெரியும்" என்று புது அடியா சொன்னாராம். சுப்பராஜன் போல் முறையிட, விஜியை கோழியைப் எறிந்துவிட்டார்கள். இப்போது அதனால் தயாரிப்பாளரிடம் போலத் தூக்கி புதுமுகம் சசிரேகா நடித்துவருகிறார்.



கரும்பு வில்லில் பூட்டிய கணைகளால் இதயக் கோட்டை உடைவது மெய்!

## கவர்ச்சிப் புயல்

'சாது' படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக நடிப்பவர் பம்பாய் கவர்ச்சிப் புயல் ரவீனா டாண்டன். ரவீனாவின் கவர்ச்சி கொடுப்பாக்க நடிகை கனை கிளி கொள்ள வைக்கப் போகிறதாம். அர்ஜுனையும் வழி பண்ணிக் கொண்டிருக்கிறார் கவர்ச்சியால அசத்தும் ரவீனா.

## சந்தியா டாட்டா!

'இந்து' படத்தில் 'சக்கரை வள்ளிக் கிழங்கு' பாட்டுக்கு அசத்தல் நடனம் ஆடியவர் சந்தியா. தொடர்ந்தும் ஆடி ரசிகர்களைப் பாடுபடுத்தப்போகிறார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சந்தியா திருமணம் செய்துகொண்டுவிட்டார். 'படத்தில் நடிக்க மாட்டேன். வீட்டோடு தாலியாக இருக்கப் போகிறேன்' என்று அறிக்கையும் விட்டிருக்கிறார்.



புதுமுகம் தேவா
படம்-காளியம்மா

www.padippakam.com



## ஐஸ்வர்யாவால் முடியாது!

'அரஜுனன்' என்னும் படத்தில் சரவணன் ஜோடியாக நடித்துக்கொண்டிருந்தவர் ஐஸ்வர்யா. முதல் கட்டப் படப்பிடிப்பு முடிந்து, இரண்டாம் கட்டப் படப்பிடிப்புக்கு ஐஸ்வர்யாவை அழைத்திருக்கிறார்கள். பதறியபடி ஓடிவந்த நடிகையைப் ஐஸ்வர்யா வயிற்றைக் காட்டியிருக்கிறார். இயக்குநர் ஐஸ்வர்யாவை நீக்கிவிட்டு வேறு ஒரு போடுவதற்கு முடிவு செய்திருக்கிறார். அநேகமாக பிரியா ராமன் நடிக்கக்கூடும். ஐஸ்வர்யா கர்ப்பமாக இருக்கிறார்.

பூரணி
படம்-தாமரை

## முகப்பில்- நெருப்புப் பார்வையோடு நெப்போலியன்
## நேசப் பார்வையோடு ரூபினி



அஹானா-முரளி
படம்-செவத்தப்பொண்ணு

## பிரபு-பிவாசு கூட்டணி!

சின்னத்தம்பி, கிழக்குக்கரை போன்ற படங்களின் வெற்றிக் கூட்டணியான பிரபுவும், பிவாசுவும் மீண்டும் இணைகிறார்கள். இளையராஜா இசையோடு உருவாகும் படத்திற்கு 'கட்டு மரக்காரன்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள். தற்போது 'சேட்' வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. 'கருத்தம்மா' படத்தை முடித்தவுடன் பிரபு நடிக்கும் 'திருவிழா' படத்தின் படப்பிடிப்பை நடத்தி முடிக்க திட்டமிட்டுள்ளார் பாரதிராஜா.

## போதும்! போய்விடு!

பிரசாந்த் நடிக்கும் 'ஆணழகன்' படத்தில் ராஜேஷ் கன்னா- டிம்பிள் கபாடியா தம்பதிகளின் மகள் டிவிங்கிளை நடிக்க வைக்க முயற்சி நடந்தது பலிக்கவில்லை. பப்லு அழகி ஒருவரை [illegible] செய்து நடிக்க வைத்தனர். இயக்குநருக்கு அழகியின் நடிப்பில் திருப்தி வரவில்லை. அழகியை ஏர்ட்டை ஏற்றி பம்பாய்க்கே அனுப்பிவிட்டு வேறு கதாநாயகி தேடுகிறார்கள்.

## இந்தியில் அரவிந்த் சாமி

ரோஜா படம் மூலம் அரவிந்த் சாமிக்கு பெண் இரசிகைகள் அதிகம். இந்தியிலும் அவருக்கு வரவேற்புக் கிடைத்திருக்கிறது. இந்தியில் அவரைக் கதாநாயகனாக வைத்து வீரேன்சந்திரன் ஒரு படத்தை இயக்கப்போகிறார்.

வியட்நாம் காலனி படத்தில் கவுண்டமணியும் [illegible] கலந்து அசத்தப் போகிறார்கள்.



பிரபு-வினிதா-கவுண்டமணி
படம்-வியட்நாம் காலனி

## மறறொரு ரகுமான்! கமலின் நம்மவர்!

## அழைத்தார் ராதிகா.

## பிரியங்கா ஹிட்

'பிரியங்கா' படத்தில் பிரபுவின் நடிப்பை பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. 'ரோஜா' படத்தை விட பிரியங்காவுக்கு வரவேற்பு அதிகம். இத்தனைக்கும் பிரியங்காவில் பிரபுவுக்கு கௌரவ வேடம்தான்.



ரேவதி
படம்-பிரியங்கா

## வாலிக்கு கவலை இல்லை!

'ரசிகன்' படத்தின் பாடல் கசட் வெளியீட்டுவிழாவும் நடந்துவிட்டது. ராதிகாதான் சிறப்பு விருந்தினர். 'ரசிகன்' படத்தில் பாடல் காட்சிகளில் சங்கவி கிட்டத்தட்ட அரை நிர்வாணமாகவே நடித்திருக்கிறார். வாலி தற்போது எழுதிவரும் பாடல்கள் பற்றி முணுமுணுப்புகள் இருந்தாலும் அதையெல்லாம் வாலி காதில் போட்டுக்கொள்ளவில்லை. 'ரசிகன்' படப் பாடல்களும் அதற்கு சாட்சி.

"பச்ச ஓரம் சின்னப் பொண்ணு, மூச்சு வாங்க ஓடி வந்தா"
"ஆட்டோ ராணி, ஜோரைக்கொஞ்சம் அடிச்சுப் பாக்கட்டுமா"
"வல மாமா டின் டின் மாமா"
"மம்பாய் சிட்டிசக்கா ரோட்டு, வித்தாபாத செவத்தக் குட்டி"

வாலி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். எப்படி தயாரிப்பாளர் கேட்கிறாரோ அப்படியே எழுதிக் கொடுப்பது என்பதுதான் அது.


## சரத்தின் புதிய படம்

'புது வசந்தம்', 'புரியாத புதிர்', 'சேரன் பாண்டியன்', 'கோகுலம்', 'காட்டன்' போன்ற படங்களை தயாரித்த சூப்பர்குட் பிலிம்ஸ் பட நிறுவனம் சரத்குமாரை வைத்து புதிதாக தயாரிக்கும் படத்தின் பெயர் 'நாட்டாமை'. சரத்குமாருக்கு ஜோடியாக மூன்று கதாநாயகிகள் நடிக்கவுள்ளனர். கதாநாயகிகள் தேர்வு நடைபெற்றுவருகிறது.



ஜூஹி சாவ்லா





## மு த் த ந் தா

கண்ணே மணியே முத்தந்தா - நீ
கரும்பிலும் இனிய முத்தந்தா

பொய்மை ஒழிந்திட முத்தந்தா - நீ
மெய்மை வளர்ந்திட முத்தந்தா.

மதிமுகம் சிவக்க முத்தந்தா - நீ
மலராய் விரிந்து முத்தந்தா

சிரிக்கும் சிலையே முத்தந்தா - நீ
சிட்டுக் குருவி போல் முத்தந்தா

ஆசை அமுதே முத்தந்தா - நீ
ஆல்போல வாழ முத்தந்தா.

உள்ளம் ஒளி பெற முத்தந்தா - நீ
உயிராய் தாய்க்கு முத்தந்தா

இன்னல் நீங்கிட முத்தந்தா - நீ
இனிய வாழ்வு பெற முத்தந்தா

மானே மயிலே முத்தந்தா - நீ
மரகதச் சிலையே முத்தந்தா.

பிள்ளைக் கனியே முத்தந்தா - நீ
பிஞ்சு முகத்திலே முத்தந்தா

சேயே ஓயா முத்தந்தா - நீ
செந்தாமரையே முத்தந்தா.

**ஆக்கம்: சிவஞானம் ரமேஸ்**
மட்/றோ.க.த.க. பாடசாலை
தேத்தாத்தீவு.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்தநல் லறிவு வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

சங்கீதபுரியில் நல்லாட்சி புரிந்தான் ராஜவர்மன். மக்களுக்காகப் பல நன்மைகளைச் செய்து அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமான அரசனாகத் திகழ்ந்தான். அந்நாட்டில் பசி, பட்டினி என்னும் பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று.

வேதபுரி நாட்டு மன்னன் மதுகிரி, மன்னன் ராஜவர்மனின் நண்பனாகத் திகழ்ந்தான். என்றாலும் குணத்தில் ராஜவர்மனுக்கு நேர் எதிர். மக்களைப் பாடாய்ப் படுத்தினான். மக்கள் நலனைவிட தன்னுடைய நலனையே பெரிதாக நினைத்துச் செயற்பட்டு வந்தான்.

நட்பு முறையில் ராஜவர்மன், வேதபுரி மன்னனுக்கு நிறைய புத்திமதி கூறினான். என்றாலும், அவற்றை அவன் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிடுவான்.

"ராஜவர்மா! நீயும் ஒரு நாட்டுக்கு மன்னன், நானும் ஒரு நாட்டுக்கு மன்னன். நாம் இருவரும் நண்பர்களாக இருப்பது அரச முறையாகாது. அது நம்முடைய தனிப்பட்ட நட்பு. ஆட்சிமுறையில் நீ வடதுருவம் என்றால் நான் தென்துருவம்.. என் ஆட்சி முறையில் நீ தலையிடுவதை நான் விரும்பவில்லை," என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டான். அன்றுமுதல் ராஜவர்மன் வேதபுரி நாட்டு அரசியலில் தலையிடுவதில்லை.

இந்த விஷயம் யோகிபுரீஸ்வரர் என்ற முனிவரின் காதில் விழுந்தது. இந்த இரு மன்னர்களுமே யோகிபுரீஸ்வரரை அடிக்கடி சந்தித்து, அவரது ஆசி பெற்று வருவார்கள். சித்திரை மாதம் பௌர்ணமி அன்று யோகிபுரீஸ்வருக்குப் பணிவிடை புரிந்து அவர் அளிக்கும் பிரசாதங்களை அள்ளிச் சென்று நாட்டு மக்களுக்கு வழங்கி வருவது வழக்கம்.

ஒரு சமயம் வேதபுரி நாட்டில் மழை பெய்யாமல் கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் அரசர் மதுகிரி, அப்பஞ்சத்தைப் போக்க எந்த முயற்சியும் எடுக்காமல் தான் மட்டுமே பசி, பட்டினியால் வாட்டமடையாமல் சுகபோகத்தில் மிதந்தார். இதை எல்லாம் அந்நாட்டு மக்கள் மூலம் யோகிபுரீஸ்வரர் அறிந்தார். இந்நிலையில் சித்ரா பௌர்ணமி வந்தது. ராஜவர்மனும், மதுரகிரியும் வழக்கம்போல் யோகிபுரீஸ்வரரைத் தரிசிக்க வந்தார்கள். அன்று முழுவதும் அங்கு தங்கி முனிவர் அளித்த பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

# இரண்டாவது வருகை



புறப்படுவதற்கு முன்பு முனிவர் இருவரையும் அழைத்துத் "எனக்குக் காட்டு வாசம் அலுத்துவிட்டது. சிறிது காலம் நகர சஞ்சாரம் செய்யலாம் என இருக்கிறேன். உங்களுடைய இருநாடுகளுள் எந்த நாட்டிற்கு வருவது என்பதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்றார்.

உடனே இரு நாட்டு மன்னர்களும், முனிவரது காலில் விழுந்து நமஸ்கரித்து, "அடியேனின் நாட்டிற்குத் தங்களை அழைப்பதில் ஆனந்தப்படுகிறேன்," என்றனர். முனிவர் இருவரையும் ஏற இறங்கப் பார்த்த பிறகு சொன்னார்.

"எந்த நாட்டில் மக்கள் சுபீட்சமாக இருக்கிறார்களோ, அந்த நாட்டிற்கே யாம் வர ஆசைப்படுகிறோம். குறையின்றி மக்கள் வாழும் பகுதியில் சிறிது காலம் தங்கி வருவோம்," என்றார்.

உடனே அரசர் மதுகிரி, "என் நாட்டில் அத்தகைய நிலைமை ஏற்படுத்திய பிறகு ஒருவாற காலத்திற்குள் அரச மரியாதையுடன் எமது நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்," என்றார்.

ஆனால் ராஜவர்மன் ஒன்றும் பேசாமல் வாய் பொத்தி நின்றான்.

உடனே முனிவர், "ஆகட்டும் போய் வாருங்கள்" என இருவரையும் ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார். ஆனால் சிறிது தூரம் சென்ற ராஜவர்மன், திரும்பி வந்து முனிவரை நமஸ்கரித்து, "மாமுனிவரே நான் உங்களை என் நாட்டிற்கு அழைக்காமல் இருந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதை நீங்கள் அறிந்தால் சந்தோசப்படுவீர்கள்," என்றான்.

முனிவர் ஒன்றும் அறியாதவர் மாதிரி ராஜவர்மனைப் பார்த்து, "ராஜவர்மா நீ என்ன சொல்கிறாய்," என்றார்.

ராஜவர்மன், தனது நண்பனின் நாட்டில் உள்ள கடும் பஞ்சத்தை எடுத்துக்கூறி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டு மக்களுக்கு நல்லது செய்யட்டும் என்றுதான் அவரை நமது நாட்டிற்கு அழைக்காமல் இருந்ததைச் சொல்லி மன்னிப்புக் கேட்டான்.

முனிவர் சிரித்தபடியே "ராஜவர்மா! அனைத்தையும் நான் அறிவேன். எனக்கு பணிவிடை செய்வதில், பக்தி செலுத்துவதில் சுயநலம் இல்லாதவன் நீ. ஆனால் உனது நண்பன் அப்படி அல்ல. தனது நலத்தை முன்னிட்டே என்னை அழைக்கிறான். அவன் என்னை அழைத்தபோது, நீயும் போட்டி போட்டுக்கொண்டு என்னை அழைக்காமல் மௌனமாக இருந்ததன் காரணத்தை நான் அறிவேன். நீ உன் நாட்டு மக்களை மட்டுமன்றி, மற்ற நாட்டு மக்களையும் உனது மக்களாக எண்ணும் நல்ல எண்ணம் உன்னிடம் இருக்கிறது. அந்நாட்டின் சுபீட்சத்திற்காக உன்னுடைய ஆசையை விட்டுக்கொடுத்ததை நான் அறிவேன். என்றாலும், நான் உனது நாட்டிற்குத்தான் முதலில் வருவேன். நீ போய், எனக்கு உன் அரண்மனைக்கு அருகிலேயே ஆசிரமம் அமைத்து வை. நான் நாளையே அங்கு வருகிறேன். வேதபுரிக்கு எனது வருகை இரண்டாவது வருகையாகவே இருக்கும்," என்றார்.

ராஜவர்மன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

மாமுனிவர் தமது நாட்டிற்கு இரண்டாவதாக வருகை புரிவது, வேதபுரி நாட்டு அரசருக்கு வேதனையை அளித்தாலும், மனம் திருந்தி தமது ஆட்சியில் நாட்டு மக்கள் கஷ்டப்படக்கூடாது என்பதை முனிவரின் செயலால் அறிந்து திருந்தினான். வேதபுரிக்கு மாமுனிவர் விஜயம் செய்தபோது அவரது காலில் விழுந்து தன் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

## விடுகதைகளும் விடைகளும்

1. வட்ட முகத்தழகி நிலையில்லா உடலழகி. அவள் யார்?
2. கடையிலும் இருப்பேன். கடலிலும் இருப்பேன். பெண்கள் கழுத்திலும் இருப்பேன். நான் யார்?
3. நான் உறங்க மாட்டேன். நான் உறங்கினால் நீ விழிக்க மாட்டாய். நான் யார்?
4. உணவிலும் இருப்பேன். உடலிலும் இருப்பேன். நெருப்பில் எரிவேன். நீரில் மிதப்பேன் நான் யார்?

**விடைகள்**

1. நிலா 2. முத்து
3. இதயம் 4. எண்ணெய்.

**றிஸ்வானா ஏ.ஹமீட்-அக்குறணை.**


1. காட்டிலே பச்சை, கடையிலே கறுப்பு, வீட்டிலே சிவப்பு. இவர் யார்?
2. காடு மேடு பள்ளம் பாதாளம் எல்லாம் ஓடுவான். கடலிலே ஓடமாட்டான். யார் இவன்?
3. இரண்டு பேர் ஓடுவார்கள். பன்னிரண்டு பேர் பார்த்திருப்பார்கள். அது என்ன?
4. அண்ணனுக்கு எட்டாது. தம்பிக்கு எட்டும். அது என்ன?
5. உருண்டையாய் இருக்கும், உலகமுமில்லை. உள்ளே பார்த்தால் ஒன்றும் இல்லை. அது என்ன்?
6. பச்சை மயிலுக்கு பல சிறகுகள் உண்டு. தொட்டால்போதும் தோகையை மூடும். அது என்ன?
7. பல பெயர்கள் உண்டு. பார்க்க முடியாத ஒன்று. அது என்ன?
8. பார்வைக்கு மிக அழகானவன், பக்கத்திலே போய் தொடமுடியாதவன். யார் இவன்?

**விடைகள்**

1. தேயிலை 2. புகையிரதம்
3. கடிகாரம் 4. உதடு
5. வெங்காயம்
6. தொட்டால் சிணுங்கி
7. காற்று 8. சந்திரன்

**எம்.எம்.ஏ.மனாப்டீன்-பதுளை.**

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.06.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 44
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 41

**பரிசுக்குரியவர்**
கீத்தா தவபால்
இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்
வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்**

ச.ரமேஸ்குமார்-காரைதீவு-01.

அ.முஹம்மது இஸ்மாயில்
கல்/கண்டக்குழி முஸ்லிம் மகாவித்தியாலயம்
கண்டக்குழி.

எஸ்.லூட்ஸ் சிந்துஜா
சாந்த கிளேயர் மகளிர் வித்தியாலயம்
கொழும்பு-06.

எம்.இஸட்.எப். சிம்லா
ஆமினா வித்தியாலயம்
மாத்தளை.

ஏ.சி.ரியாஸ்-பொல்கஹவெல.

செல்வன்.ஜெ.ஜெகன்
களு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை.
ஹொரணை

செல்வன் கே.ஜி.ஜே. ரமணன்
கொழும்பு-10.

செல்வன் ஆ.பவணந்தி
மட்டக்களப்பு.

செல்வி.சோபனா
மண்டூர்.

## ஏன் இப்படி?

1. முகச் சவரம் செய்ய தளவாடிவிலும் குழிவாடி சிறந்தது ஏன்?
**உருப்பெருத்த நிமிர்ந்த விம்பத்தைப் பெறலாம்.**
2. வெள்ளித் தேக்கரண்டியில் முன் முகம் பார்க்கின் உருப்பெருத்த விம்பமும் பின்புறம் நோக்கின் உருச்சிறுத்த விம்பமும் தோன்றுவது எப்படி?
**முன்புறம் குழிவாடியாகவும் பின்புறம் குவிவாடியாகவும் தொழிற்படுவதனால்.**
3. வாகனங்களின் பக்கக் கண்ணாடியாக குவிவாடி பாவிக்கப்படுவது ஏன்?
**உருச்சிறுத்த நிமிர்ந்த முழு விம்பத்தையும் கொடுப்பதால்.**
4. துருவ விளக்குகள் பகல் நேரங்களில் சூரியனை நோக்கி வைக்கக்கூடாது. காரணம்?
**சமாந்தர ஒளிக்கற்றைகள் தெறிப்படைந்து F இலுள்ள மின்குமிழின் மீது குவிப்படாமல் இருப்பதற்கு.**
5. நோயாளர்களை காவும் வண்டிகளில் (Ambulance) என்பது பக்கம் மாறியே எழுதியிருக்கும் எதற்கு?
**முன் செல்லும் வாகனச் சாரதி பக்கக் கண்ணாடியினூடாக பார்க்கையில் சரியான ஒழுங்கில் விளங்கிக் கொள்வதற்கு.**

தொகுப்பு: பாத்திமா ரீஸா ரவுப்
ஆமினா மகா வித்தியாலயம்
மாத்தளை.

## முத்துக் கொட்டலாம்




ஆசிரியர்: பூனைக்கும், எலிக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன்: பூனை எலியைத் தின்னும். எலி பூனையைத் தின்னாது சேர்.

## பாப்பா முரசுக்கு
## உங்கள் ஆக்கங்கள்
## வரவேற்கப்படுகின்றன.

## செய்து பாருங்கள்—நீரில் நாணயம்

ஒரு தட்டில் நாணயத்தை வைத்து, அது மூழ்கும் அளவுக்கு நீர் ஊற்றவும். விரலை ஈரமாக்கிக்கொள்ளாது அந்த நாணயத்தை எடுக்க முடியுமா? என உங்கள் நண்பர்களிடம் கேளுங்கள். முடியாது என்றால் அதற்கான வழி இதோ...



ஒரு தாளை எரிக்கவும். எரியும் தாளை ஒரு கண்ணாடி டம்ளருக்குள் போடவும். (கைகளை சுட்டுக்கொள்ளாமல் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்) உடனே அந்த டம்ளரை நாணயம் உள்ள தட்டின் மீது தலைகீழாகத் திருப்பவும். இவை அனைத்தையும் விரைவாக உடனுக்குடன் செய்துமுடிக்க வேண்டும். காகிதம் முழுவதும் தலைகீழாக திருப்பப்பட்டுள்ள கண்ணாடி டம்ளருக்குள் எரிந்து முடிந்ததும் அங்கு வெற்றிடம் உருவாகும். அதனால் தட்டில் உள்ள நீர் கண்ணாடி டம்ளருக்குள் உறிஞ்சப்படும்.

இப்போது நாணயம் நீரின்றி இருக்கும். உடனே எடுத்து விடலாம்.

## அவசிய மூன்று

1. பாராட்ட வேண்டிய மூன்று: அழகு, அறிவு, குணம்
2. விரும்ப வேண்டிய மூன்று: நேர்மை, தூய்மை, கடின உழைப்பு.
3. விலக்க வேண்டிய மூன்று: மதுவருந்துதல், சூதாடல், புகைபிடித்தல்.
4. ஒழிக்க வேண்டிய மூன்று: சோம்பல், புறங்கூறல்,பொய்
5. மதிக்க வேண்டிய மூன்று: முதுமை, சட்டம், மதம்.
6. வளர்க்க வேண்டிய மூன்று: உற்சாகம், அஞ்சாமை, திருப்தி

தங்கையா கோகிலன்
விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம்
தெமட்டகொடை.



ஸ்கியிங் என்பது நீளமான சட்டங்களைக் கொண்டு பனியில் சறுக்கும் ஒரு விளையாட்டு. இந்த விளையாட்டு 1850ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## அறிவோம் மனதில் பதிவோம்



அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோன்சன் தன் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் பரிசாக பல் துலக்கும் பிரஷ்ஷையே தருவார். அது மிகவும் உபயோகமான பரிசு என்பது அவரது எண்ணம். 'காலையிலும், இரவிலும் நான் நினைக்கும் முக்கியமான பொருள்' என்று பல் துலக்கும் பிரஷ்சைப் பற்றி அவர் கூறுவார்.

## பொலிஸ் என்றால் என்ன?

POLICE என்ற 6 எழுத்துக்கள் கொண்ட ஆங்கிலச் சொல்லின் விளக்கம் தெரியுமா?

| | |
|---|---|
| P - Politness | - மரியாதை |
| O - Obedience | - பணிவு |
| L - Loyalty | - விசுவாசம் |
| I - Intelligence | - நுண்ணறிவு |
| C - Courtesy | - அன்பு நடத்தை |
| E - Efficiency | - திறமை |

சாஜிதா தாஹிர்-மன்னார்-03

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்

# இம்ரான்கான் ஏற்பும்–மறுப்பும்!



1992ல் உலகக் கோப்பையை வென்றெடுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இம்ரான்கான் அதே ஆண்டில் ஓய்வெடுத்துக்கொண்டார்.

இப்பொழுது தனது சுயசரிதையை நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார். இதில் 1981ம் ஆண்டு நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் பந்து வீச்சின் போது ஒரு போத்தல் மூடியினால் பந்தின் வழுவழுத்த தன்மையைச் சுரண்டியதாகத் தெரிவித் துள்ளார். இதனை தன் முட்டாள் தனம் என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் குழுவில் முன்னர் ஆடிய யோனிஸ் அஹமட், இம்ரான்கான்மீது ஒரு குற்றச்சாட்டினைச் சுமத்தியுள்ளார். 1987ல் இந்தியாவுக்கு எதிராக ஆடியபோது ஒரு ஸ்குரு டிரைவரையும் வெஸ்லினையும் இம்ரான்கான் பந்தைப் பதப்படுத்துவதற்காகப் பாவித்தார் என்று அக்குற்றச்சாட்டு கூறுகிறது. இதனை கான் மறுத்திருக்கிறார். அத்துடன் உலக கிரிக்கெட் கவுன்சிலின் செயற்குழுவிலிருந்தும் விலகிக் கொண்டுள்ளார்.

# அபராதம் கட்டிய மொங்கியா!

இந்தியக் கிரிக்கெட் வீரர்களில் மொங்கியா என்ற பெயரைக்·கேள்விப்பட்டதும் அபராதம் தான் ஞாபகத்திற்கு வரும். இவர் இந்திய கிரிக்கெட் அணியின் துடிப்பான விக்கட் கீப்பர். பரோடாவைச் சேர்ந்த நயான் மொங்கியா அடிக்கடி உணர்ச்சிவசப்படுபவர். சார்ஜா கிரிக்கெட்டில் இவரது கோபம் நன்றாகவே தெரிந்தது. ஒரு அவுட் தரவில்லை என பந்தைக் கோபமாகத் தரையில் அடித்தார். இது மைதானத்தில் இருந்த நடுவருக்குக் கோபம் தரவில்லை. பெவிலியனில் இருந்த சர்வதேச நடுவருக்குக் கோபம் வந்துவிட்டது. ஆட்டம் முடிவடைந்ததும் இந்திய அணித் தலைவர் அசாருதீனையும், அணி மனேஜர் கவாஸ்கரையும் கூப்பிட்டார்.



மொங்கியாவின் அத்துமீறலை சொன்னார். அதுமட்டுமல்ல, ரூ. 35ஆயிரம் அபராதமும் போட்டார். மொங்கியா மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அசாருதீன் வருத்தம் தெரிவித்தார்.

மொங்கியா இனிவரும் போட்டிகளில் (டிசம்பர் வரை) இவ்வாறு நடந்து கொண்டால், ஒரு ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்படும் என்று கட்டளை போடப்பட்டது. கிரிக்கெட் போட்டியில் அபராதம் கட்டிய இரண்டாவது இந்தியவீரர் மொங்கியா. இதற்கு முன்னர் மனோஜ் பிரபாகர் ஒருமுறை அபராதம் கட்டினார்.

90ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக ஆடிய இந்திய அணிக்கு மொங்கியா முதலில் தேர்வு செய்யப்பட்டார். அந்தச் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு அவர் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார். இதே நேரத்தில் விஜய் யாதவ் நல்ல துடுப்பாட்டவீரராக உருவானார். இதனால் மொங்கியாவின் புகழ் அடிபட்டது.

இருப்பினும் மொங்கியா, சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப்போல் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடினார். சென்றமுறை நடைபெற்ற ராணி கோப்பை கிரிக்கெட்டில் பஞ்சாப் அணிக்கு எதிராக 10 காட்ச்கள் ஒரு சதம் என இந்தியத் தேர்வாளர்களை அசர வைத்தார். பிறகென்ன? உடனடியாக இந்திய அணியில் அவருக்கு இடம் கிடைத்தது. இப்போது மொங்கியாவின் பெயர் கொடிகட்டிப் பறக்கிறது. ■

# தேன் கிண்ணம்

### நாளை நாங்களும் ஏந்தப் போகிறோம்

சமாதானம்
பட்டுப் போய்!
படுத்துவிட்ட!
இளவு தேசம்.
●
பூவும்!
பிஞ்சுமாய்!
உதிரும்
உயிர்களின்
ஆசையோடு கூடிய
அகால மரணிப்புகள்!
●
வாழ்வதா?
சாவதா?
எண்ணி! எண்ணி!
மூளை திசுக்களிலும்
முன்னூறு சிதிலங்கள்.
●



இன்றா?
நாளையா?
சீரழிந்த
சிவப்பு
வாழ்க்கையில்
ஆத்மம் படும்
அவஸ்த்தைகள்.



●
எதிர்காலம்
இளைப்பாற!
இடமில்லை.
மனசின்
இடுக்கெல்லாம்
மயானக் கௌவல்.
●
முகாரி பாடும்
நித்ரா ராவுகளில்
நீளமாய்! விழித்து!
பாடைகளால்
எழும்
பயங்கர
வாழ்க்கை.
●
'அகதி' என்ற
தேசிய பாஷைகளை
தினமும் உச்சரித்து
அங்குல அங்குலமாய்
செத்துச் செத்து
வாழும்.
மனிதங்கள்.
●
இன்னும் இன்னும்
பிரளயங்களையே
பிரசவிக்கும்
இந்த
யுத்த பூமியில்
நாங்களும்
நாளை
ஏந்தப் போகிறோம்

ஆயுதமல்ல
ஆயுதக் கப்பலில்
வரும்
'நிவாரணங்களை'
ஏந்தி நிதம்
சிந்தப் போகிறோம்.
செங்குருதி அல்ல
'கண்ணீரை.'

நிவேப்பிரியன்
பொத்துவில்-03.

### பூரணப் பூ வேண்டும்



பனி மலராய் நான்
விடி காலை வெளிச்சமாய் நீ
இனிவரும் காலமெல்லாம்
இனிதாய் வாழ வேண்டும்.
இனிப்பாய்க் கழிக்க வேண்டும்.

எப்போதும்
போதும் போதும் என்று
நாம் மகிழ்ச்சியில் நனைய வேண்டும்.
நம் மனக் கிண்ணங்கள் நிறைய வேண்டும்.

அறிவும் ஆசியும் அன்பும் ஆசையும்
நம்மை அளவுடனே அரவணைத்திட வேண்டும்-நம்
அன்றிலாய் என்றும் அனுசரித்து வாழ்ந்திட வேண்டும்.

இனிப் போதும்
போதும் போதும் என்று
இனப் போர்கள் புறங்காட்டி ஓடிட வேண்டும்-பின்
பொழுதெல்லாம் உன்னுடனே கழிக்க வேண்டும். ஊடிப்
போராடிக் களைத்திடவும் வேண்டும்.

பூ மத்திய கோடும், மற்றைய கோடுகளும்
மாய மானாய் மறைந்திட வேண்டும்-இப்
பூவுலகில் சாந்தி சமாதானம் என்றும்
நின்று நிலைத்திட வேண்டும்.

புத்துயிர்கள் புதுப் புனலாய்ப் பிறந்திட வேண்டும்
பூலோகம் பூரணப் பூவாய்ப் பூத்திட வேண்டும்.

நீலாம்பரி-வவுனியா.



### ஒற்றைச் சிறகு!

இது
என்ன கொடுமை
எனது வரியில்
எனக்கு-
துவக்கு வாங்கப்படுகிறது..!
✧
என்
தாய் நாட்டில்
ஏன் நான்
அந்நியப்பட்டேன்...?
✧
நான்-
என் தேசத்தில்
வாழ வேண்டுமா?
என் உரிமைகளை
விற்க வேண்டும்..!
✧
நான்-
இறந்துவிட்டால்
புதைப்பதற்கு-
என் மண்ணில்லை

அதை விட்டும்
விரட்டப்பட்ட
தேசிய அநாதை நான்..!
✧
அங்கே யார் இருப்பார்கள்
எனது
வீடும் வயலும்
எப்படி இருக்கும்.
கண்டு வர
விழிகளுக்கு சிறகில்லை
உணர்வுகளுக்குமா...?

சுதந்திரச் சிறகு
பிடுங்கப்பட்டு
முகாமுக்குள்,
மூர்ச்சையுற்றுள்ளது
என்-
விடுதலைப் பறவை..!
✧
தமிழ்த் தோழனே...
உன் உணர்வுகளும்
என் உரிமைகளும்
ஒன்றுதான்
நாம் ஓர் இனம்தான்
நசுக்கப்படுவதில்
ஒடுக்கப்படுவதில்...!
✧
எனதின்
இதயத்திற்குள்ளும்
நமதின் கனவுகள்-
உறைந்து கிடக்க
என்னை-நீ

வெளியில் அல்லவா
வீசிவிட்டாய்...?
✧
சொல் சகோதரா!
உன்-
ஒருகை ஓசை
உலகின் செவிகளில்
எப்படிச் சேரும்...?

ஒட்டமாவடி அறபாத்

### மானுடம் என்பது!.......

மானுடம் தேடி
நான் மனிதப் பாதைகளில்
பயணித்தேன்.
கால்பட்ட இடங்களெல்லாம்
குருதிக் கசிவுகளே!
நாளைய வானத்தின்
இளைய நட்சத்திரங்கள்
இன்றைய இருளிலேயே
இறந்து கிடக்கக் கண்டேன்.
✧✧
சுட்டெரிக்கும் வெயிலில்
பாலை வெளியில்
நெளியும் கானல் நீராய்
மானுடம்!.....
நெருங்கிப் பார்க்கையில்
நொறுங்கிப் போகின்றேன்!
✧✧
நிறபேதம்!
மொழிபேதம்!
இனபேதம்...
மனித சாக்கடையிலிருந்து
அழுகும் நாற்றங்கள்
நாசியை அடைக்கின்றன.
✧✧
இடம் மாறிய உறவுகள்
உறவிழந்த பாலகர்கள்
துணைஇழந்த துணைவிகள்
துப்பாக்கிகளின் இரைச்சலின் பின்
முகாரி ஒலிக்கும் துயரங்கள்!
✧✧
மானுடம் தேடிய
என் பயணம்
முடிவினைக் கண்டபோது
மனதில் எதிரொலித்தது:
'மானுடம் என்பது
மனிதனை மனிதன் உண்பது'

காத்தான்குடி-சுபைர்கான்.


### ஒரு மலரின் ஒரு பக்கம்

தெருவோரம் பொற்தேராய்
தேயாத பொன்நிலவாய்
காலையிலே பூத்திடுவாள் கன்னிமலர்
கன்னியரும் வசமிழுக்கும் பூவை அவள்.
அவள் பற்களில் தோன்றிய மின்னல்
அவள் பட்டுகன்னத்தில் பட்டு தெறிக்கும்.

பவள முகத்தில் பாயும் இரு கயல்கள்
புருவச் சிறையில் பூத்த திலகம்
பட்டுடலைத் தொட்டுத் தழுவிய புடவையுடன்
பாதங்கள் தரைதொட்டு நிற்கும்.

என் மனமோ தரை விட்டெழுந்து
வெகுதூரம் சென்றிருக்கும்
பருவ மங்கையின் ஒரு பக்கம்
நானறிவேன்
மறு பக்கம்?......

எஸ்.ராஜகுமாரி–டிக்கோயா.



### மூட்டை

ஒழிந்திருந்து
உதிரத்தையுறிஞ்சி
உணவாய்
உண்பது
மூட்டை.

### மரவட்டை

எங்களைக்
கண்டுதான்
புகைவண்டி

செய்தார்கள் என்று
பெருமை கூறுவது
மரவட்டை.

### நாய்கள்

தங்களையும்விட
கேவலமான முறையில்
மரணமாகின்றார்கள்
மனிதர்கள் என்று
இரகசியம் பேசும்
நாய்கள்.

பாலமுனை–வாஹிட்.

# இந்த வாரம் உங்கள் பலன்

**(12.06.94 முதல் 18.06.94 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன் |
| மிதுனம் | - புதன் |
| கர்க்கடகம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது, செவ்வாய் |

15.06.94இல் மிதுனச் சூரியன்

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 11 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், கடன் தொல்லை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, மனக்கவலை. | காலை 6 மணி |
| சனி- | உறவினர் உதவி, பணத்தடை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணத்தட்டுப்பாடு, உயர்ந்த நிலை. | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், பணப்புழக்கம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | அந்நியர் எதிர்ப்பு, செல்வாக்குநிலை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | முயற்சிகளில் வெற்றி, கௌரவம். | காலை 10 மணி |
| சனி- | தெய்வ தரிசனம், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், வீண் செலவு. | பி.ப 1 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், பயனற்ற செய்கை. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், கௌரவம். | காலை 10 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், செய்தொழில் நன்மை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | முயற்சிகளில் வெற்றி, பணவரவு. | காலை 8 மணி |
| சனி- | தனலாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சிகளில் வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள- | தெய்வானுகூலம், காரியசித்தி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண்தொல்லை நீங்கும், உயர்ந்தநிலை. | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், கவலை குறையும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் பகை, குடும்பக் கலகம். | காலை 6 மணி |
| திங்கள்- | பகை நீங்கும், எடுத்த காரியம் வெற்றி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், தொழில் நிலை மாற்றம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் உதவி, காரியசித்தி. | காலை 8 மணி |
| வியாழன்- | கௌரவம், செய்தொழில் வெற்றி. | காலை 10 மணி |
| வெள்ளி- | வீண் கவலை, பிள்ளைகளால் தொல்லை. | பி.ப 2 மணி |
| சனி- | தொழில் நிலை பேறு, பணவருவாய். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 2

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப சுகம் குறைவு, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியரால் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் நிலைப்பேறு, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | நினைத்த காரியம் வெற்றி, உயர்ந்தநிலை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | அந்நியர் சகாயம், பணவரவு. | காலை 8 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், முயற்சி வெற்றி. | பி.ப 2 மணி |
| சனி- | தொழில் கேடு, மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள்வரவு. | காலை 10 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், கடன் தொல்லை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், முயற்சி தோல்வி. | பகல் 11 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், தெய்வானுகூலம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, கவலை. | பி.ப 3 மணி |
| சனி- | எடுத்த காரியம் வெற்றி, பணவரவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண்தொல்லை, மனக்கவலை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | கடன்தொல்லை, செய்தொழில் நட்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- | மனக்கவலை நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- | வீண் கவலை நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, தேகசுக நன்மை. | பகல் 11 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்தநிலை, முயற்சிகளில் வெற்றி. | காலை 9 மணி |
| வெள்ளி- | உறவினரால் நன்மை, புதிய முயற்சி. | பி.ப 2 மணி |
| சனி- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணவரவு, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பயனற்ற பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் கலகம், தெய்வ நம்பிக்கை. | காலை 7 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மன நம்பிக்கை. | காலை 9 மணி |
| சனி- | புதிய முயற்சி வெற்றி, பணவரவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சிகளில் வெற்றி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், கௌரவம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் கஷ்டம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| வெள்ளி- | வெளியிடச் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| சனி- | செல்வாக்குநிலை, உயர்ந்த எண்ணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனக்கவலை நீங்கும், பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, மனச்சஞ்சலம். | பி.ப 2 மணி |
| புதன்- | செய்தொழில் வெற்றி, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பாராட்டு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அரச சன்மானம், உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, மனக் குழப்பம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

# மருத்துவ விந்தைகள்





ஐந்து குழந்தைகளை ஈன்றதனால் புவிவியக்கும் பெருமையினைப் பெற்ற மகிழ்ச்சியில் பெற்றவர்கள்.

## அவசரமாய் பிறந்த 5 குழந்தைகள்

### உயிர்காக்க மருத்துவர் போராட்டம்

ஒரே சூலில் பல குழந்தைகள் பிறப்பது இப்பொழுது சர்வ சாதாரணமாகிவிட்ட சம்பவம்.

ஆனால் உரிய பேறு காலத்துக்கு 14 வாரங்களுக்கு முன்னரே- ஒன்று இரண்டல்ல- 5 பிள்ளைகள் பிறந்து விட்டன. அத்தனையும் மருத்துவ நிபுணர்களின் சாதுரியத்தினால் இன்று உயிருடன் உள்ளன.

நியூயோர்க் நகரில் ஓல்ட் புறாக் விலி என்ற இடத்தில் வசிக்கும் டெனிசி-லோ கார்போண் தம்பதியினருக்கு இந்த 5 குழந்தைகளும் கடந்த செப்ரம்பர் 9ம் திகதி பிறந்தன. 3 பெண்களும் 2 ஆண்களுமான இக்குழந்தைகள் 1 இறாத்தல் 9 அவுன்ஸ் முதல் 1 இறாத்தல் 12 அவுன்ஸ்வரை எடை கொண்டவையாகவே இருந்தன. இவர்கள் ஐவரையும் உயிருடன் பாதுகாப்பதை ஒரு பெரும் சவாலாக ஏற்ற மருத்துவர்கள் பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டு காப்பாற்றி விட்டனர். இப்பொழுது இக்குழந்தைகள் மருத்துவமனையைவிட்டு பெற்றாரிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

லோ ஒரு பொறியியலாளர். 36 வயது. தனது வேலையிலிருந்து தற்காலிக விடுப்பு எடுத்துக்கொண்டு 33 வயதான தன் மனைவி டெனிசியுடன் சேர்ந்து குழந்தைகளைப் பராமரிப்பதில் பெரும் பொழுதைச் செலவிடுகிறார்.

"சில நண்பர்கள் என்னிடம் கிண்டலாகக் கேட்கும் கேள்வி. ஒருநாளில் இத்தனை குழந்தைகளுக்குமான அணை ஆடைகளை எவ்வாறு மாற்றிக் கொண்டிருக்கிறாய்? என்பதாகும். 'இவற்றை எண்ணிக் கணக்கிடுவது எங்கள் வேலையல்ல. எங்கள் பணியினைச் சீராகச் செய்கிறோம்'என்று நான் பதிலளிப்பேன்.

"எங்களுக்குள்ள ஒரு பெரும் பிரச்சனை இக்குழந்தைகள் ஒவ்வொன்றும் எந்த நேரத்தில் தூங்க விரும்புகின்றன என்பதுதான். ஒரு குழந்தையைத் தாலாட்டி உறங்க வைக்கும் அதே வேளையில் இரண்டு குழந்தைகள் கண்விழித்து அழ ஆரம்பித்துவிடுகின்றன" என்கிறார் தயார் டெனிசி.

ஐந்து குழந்தைகள் உபயத்தில் மிகவும் பிரபலமாகிவிட்டார்கள் டெனிசி-லோ கார்போண் தம்பதியினர். ■

**கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ்**

## கையெழுத்தால் முடிந்த தலையெழுத்து

### போட்டுவைத்த கொலைத் திட்டம் ஓ.கே. கண்மணி!!

### காதலனை பழிதீர்த்த காரிகை!



மரண தண்டனை நிறைவேறுமுன் மூன்று மோட்டார் வாகனத் திருடர்களுடன் வலது கோடியில் காணப்படுபவர் தான் கேர்ணல் எறொடா பெரஸ்.



புத்திசாலித்தனமாக கொலைத் திட்டம் வகுத்து இன்று குற்றவாளியாகக் கைது செய்யப்பட்ட ஆளுநரின் காரியதரிசி மார்க்கோஸ்

பெரு நாட்டின் மொலினா மாவட்டத்தின் இராணுவ ஆளுநர் கேர்ணல் எடுறாடோ பெரஸ் தனக்குத்தானே மரண தண்டனை விதிக்கும் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அதன்படி சுட்டுக்கொல்லப்பட்டார். கடந்த வருடத்தில் இடம்பெற்ற இந்தத் திகிலூட்டும் நாடகத்தின் சூத்திரதாரி அந்த ஆளுநரின் செயலாளரான டெலோரஸ் மார்க்கோஸ் என்ற 29 வயது அழகி. இவளை பொலிசார் கைது செய்துள்ளனர்.

"மார்க்கோஸ் தனது எஜமானருக்கான மரண தண்டனை கட்டளையைத் தயாரித்து ஏனைய பல ஆவணங்களுடன் அவருடைய கையொப்பத்துக்காக அனுப்பிவைத்தாள்.

ஆளுநரும் சந்தேகப்படாமல், வழமையாக ஒப்பமிடுவதுபோன்று தனது மரண ஓலையில் தானே ஒப்பமிட்டார்.

அன்றிரவே கைது செய்யப்பட்ட ஆளுநர் சிறிது நேரத்தில் 4 இராணுவ வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கெரில்லா யுத்தம் நடைபெற்றுவரும் பெருநாட்டின் சில பகுதிகளில் இராணுவ ஆட்சி நடைபெறுவதால் ஆளுநர் கட்டளைக்கு சகலரும் கட்டுப்பட்டேயாக வேண்டும். குற்றவாளிகள் தாங்கள் நிரபராதிகளாக இருந்தாலும் ஆளுநரால் விதிக்கப்படும் தண்டனைக்கு மேன்முறையீடு செய்ய முடியாது.

தனது எஜமானையே கொன்று பழிதீர்க்கும் அளவுக்கு வலுவான காரணம் வேண்டுமல்லவா? காதல் கசந்ததனால் வந்த வினை இது என்று தெரிய வருகிறது. ஆளுநர் பெரஸும் மார்க்கோஸும் 5 வருடங்களாககாதலர்களாக இருந்தனர். அயல் கிராமமொன்றில் வசிக்கும் ஒரு பெண்ணுடன் பெரஸ் கொண்டிருந்த அந்தரங்கத் தொடர்பினை மார்க்கோஸ் அறிந்து கொண்டாள். இதனால் ஏற்பட்ட பொறாமை பழி தீர்க்கும் படலத்துக்கு அடிகோலியது.

கேர்ணல் பெரஸ் தனது படையினருக்கு ஒரு கட்டளை பிறப்பித்திருந்தார். அவர்கள் எவரும் உள்ளூர்ப் பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கலாகாது என்பது அக்கட்டளை.

இருப்பினும் அவரே அக்கட்டளையை மீறிவிட்டார்.

இராணுவ உடையில்லாமல் சாதாரண குடிமகனின் உடை அணிந்து கார்லொஸ் முனஸ் என்ற பொய்ப் பெயரிலேயே தன் புதுக் காதலியிடம் போய் வந்தார். இந்த இரகசியத்தை மார்க்கோஸ் கண்டுபிடித்துவிட்டாள்.

சம்பவ தினம் பெரஸ் தன் காதலியிடம் போகும் காலம் நேரமெல்லாம் அறிந்து வைத்திருந்த மார்க்கோஸ், குறிப்பிட்ட அதே வீட்டில் தேடப்படும் பயங்கரவாதியான கார்லொஸ் முனஸ் தங்கியிருப்பதாகவும் அவனுக்கு மரண தண்டனை விதிக்கும் கட்டளையில் ஆளுநர் கையொப்பமிட்டிருப்பதாகவும் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தாள். தகவலைப் பெற்ற இராணுவ அதிகாரியும் புதிதாக அப்பகுதிக்கு வந்தவன். அவன் ஆளுநர் பெரஸை இதற்குமுன் கண்டதேயில்லை.

பெரஸ் கைது செய்யப்பட்டதும் தன்னை அடையாளம் காட்ட படாதபாடுபட்டார்.

பயங்கரவாதி பலவகையான தந்திரோபாயங்களைக் கையாளுவான் என்பதனால் படை வீரர்கள் எதற்கும் செவிசாய்க்கவில்லை. கைது செய்து சிறிது நேரத்துக்குள் பெரஸ் நான்கு வீரர்களின் துப்பாக்கி ரவைகளை தன் உடலில் ஏற்றுக்கொண்டார்.

விசாரணைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அன்ரோனியோ றுயிஸ் என்பவர், விசாரணை நடத்தி முழு உண்மைகளையும் தெரிந்து கொண்டு டெலோரஸ் மார்க்கோஸ் மிகவும் சாதுரியமாக தனது பழி தீர்க்கும் படலத்தை அரங்கேற்றியிருக்கிறாள் என்றார். ●

## திருமணத் தோழன் ஐந்தறிவு ஜீவன்

இது ஒரு திருமணக் காட்சி. இதில் என்ன வித்தியாச விசேஷம் தெரியுமோ?

மாப்பிள்ளைத் தோழனாக இருந்து திருமணம் கலகலப்பாக நடக்க காரணமாக இருந்தது யார் என்கிறீர்கள்?

மிஸ்டர் பான்டிற்! மனிதனல்ல. நாய்! மணமகனுக்கு தான் வளர்த்த நாய்மீது மகா மகாப் பிரியம்.

ஆறறிவுள்ளோரைவிட இந்த ஐந்தறிவு ஜீவனே தோழனாக இருக்கட்டும் என்று கூறிவிட்டார். மிஸ்டர் பான்டிற் ஒழுக்கத்திலும், நடத்தையிலும் ஒரு குறையில்லாதவர் என்று சொல்கிறார் மணமகன் மைக்நெச்! திருமணம் நடந்த நாடு கனடா.

ரை கட்டி, சீவிச் சிங்காரித்து மணமக்கள் அருகே இருக்கிறார் மிஸ்டர் பான்டிற்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

தருவது - ரசிகன்

"மயக்கம் எனது தாயகம்
மவுனம் எனது தாய்மொழி
கலக்கம் எனது காவியம்-நான்
கண்ணீர் வரைந்த ஓவியம்!
..........
விதியும் மதியும் வேறம்மா
அதன் விளக்கம் நான்தான் பாரம்மா!"
-கவியரசு கண்ணதாசன்-



பிரசாத் காரில் வெளியேறிச் சென்று மறைய டி.ஐ.ஜி.டென்சிலின் ஜீப் வந்து ஹரிகரன் வீட்டின் முன் ஓய்ந்தது.

கேற் அகல விரிந்து கிடந்ததில் டென்சிலின் மூளையில் உறுத்தல் வந்தது. சாரதியைப் பார்த்தார். "உள்ளே போகலாம்" என்றார்.

திறந்திருந்த கேற் வழியே புகுந்து ஹரிகரன் வீட்டின் போர்டிக்கோவில் ஜீப் தரித்து நிற்க, சிறிய துள்ளலோடு குதித்து இறங்கி, நிமிர்ந்து பார்க்க, வீட்டின் கதவு திறந்திருந்தது.

உள் மனம் விபரீதம் என்று உணர்த்துவது போல இருந்தது.

நிதானமாக அடி எடுத்து வைக்கும் போதே, இடுப்பில் இருந்து பிஸ்டல் உருவி கையில் எடுத்துக்கொண்டார். கொன்ஸ்டபிள்கள் டி.ஐ.ஜியை தொடர்ந்தனர்.

உள்ளே முன் ஹோலில் கிடந்த நைலான் கயிறு கண்ணில் பட்டது.

அருகே சென்று குனிந்து நைலான் கயிறு கரத்தில் எடுக்க, கயிற்றின் மையப் பகுதியில் சிவப்பாய் கறை தெரிந்தது.

"நிச்சயமாக இது இரத்தம்தான்" உள் மனம் உடனே உறுதிப்படுத்தியது.

நைலான் கயிறு வலது கரத்தில் இருக்க முன்ஹோலைச் சுற்றி நாற்புறமும் பார்வையால் முழுதாக ஒரு அலசல்.

முன் ஹோலின் இடது மூலையில் இருந்த அறை நோக்கிச் சென்றார். கைரேகைகள் இருக்கலாம். அழித்துவிடக்கூடாது. நைலான் கயிற்றை கொன்ஸ்டபிளிடம் கொடுத்து, பத்திரப்படுத்துமாறு கூறிவிட்டு, இடுப்பில் இருந்த பிஸ்டல் ஹோல்டரில் பிஸ்டலைச் செருகிவிட்டு, காற்சட்டை பொக்கற்றுக்குள் இருந்து 'கிளவுஸ்' எடுத்து கையில் அணிந்து கொண்டார்.

கிளவுஸ் போட்டிருந்த இடது கரம் நீட்டி கதவு தள்ளி திறக்க முயல, கொன்ஸ்டபிள் ஒருவர் ஓடிவந்தார்.

"சேர் அந்த அறையில்தான் கொலை நடந்திருக்கிறது."

கொன்ஸ்டபிள் காட்டிய திசையில் முன் ஹோலின் வலதுபுற மூலையில் இருந்த அறை நோக்கி டென்சில் விரைந்து போய், கட்டில் மேலே உயிருக்கு விடைகொடுத்து விட்டுக் கிடந்த திருமதி ஹரிகரனின் உடலைப் பார்த்து, விசாரணைக்காக வந்த இடத்தில்,

இனி எந்தக் கேள்விக்குமே விடை சொல்ல முடியாமல் திருமதி ஹரிகரன் நிரந்தரமாக வாயை சாத்திக்கொண்டது புரிந்து, தலையில் இருந்த தொப்பியை கரத்தில் எடுத்தபடி, கட்டிலின் கீழே பார்வையை செலுத்த, அங்கே இருந்து அவரைப் பார்த்து, "என்ன டி.ஐ.ஜி சௌக்கியமா?" என்று கேட்பதுபோல, "நாம் அடிக்கடி சந்திக்கிறோம் அல்லவா?" என்று குறும்பாகச் சிரிப்பதுபோல-

**சிவப்பான ஒற்றை ரோஜா!**

சிவப்பான ஒற்றை ரோஜா தரையில் கிடந்தது, டி.ஐ.ஜி. திரும்பி தன் அருகில் நின்ற கொன்ஸ்டபிளைப் பார்த்தார்.

பார்வையின் அர்த்தம் புரிந்து விரைந்து அந்த ரோஜாவை எடுத்துவந்து டி.ஐ.ஜியிடம் கொடுத்தார் கொன்ஸ்டபிள்.

வாங்கிப் பார்த்தார். ரோஜாவையும், கட்டிலில் மீது உயிர் போனபின் வெறும் கூடாகக் கிடக்கும் திருமதி ஹரிகரனையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்.

வீட்டில் வேறு யாருமே இல்லை. "நிர்மலா எங்கே?" மனதில் சந்தேகம் எழுந்தது.

ஏற்கனவே ஹரிகரனின் கொலை விசாரணைக்கு வந்திருந்தபோது நிர்மலாவைப் பார்த்திருக்கிறார்.

தந்தை கொலையான சோகம் அதிகம் பாதிக்காதது போல் தெரிந்தாள்.

உடையில், பேசிய தோரணையில், பேசும் போது சிரித்ததில், எழுந்து விடைபெற்று தன் அறைக்கு செல்கையில், நடந்து போனதில் எல்லாவற்றிலுமே ஒரு அலட்சிய மனோபாவம் தொக்கி நின்றது.

அப்போதே மனதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாள். எனினும் தந்தையின் கொலையோடு அவளுக்கு முடிச்சுப் போட்டுப் பார்க்கும் யோசனை வரவில்லை.

அவள் எழுந்து திறந்து போன அறை எதுவென்று நினைவுக்கு கொண்டுவந்தார்.

முன் ஹோலின் வலது மூலையில் தான் முதலில் திறக்க முயற்சி செய்த அறைதான் அது என்பது நினைவுக்கு வந்தது.

திருமதி ஹரிகரனின் அறையை விட்டு வெளியே வந்தார். தொலைபேசி அருகே போய் டயல் செய்து, ஆம்புலன்ஸ் அனுப்பச் சொல்லி, விசாரணைக்கு தேவையானவர்களை-புகைப்படப்பிடிப்பாளர் உட்பட அனுப்பி வைக்க உத்தரவிட்டு நிர்மலாவின் அறை நோக்கிப் போனார்.

கதவு திறந்துகொண்டு டி.ஐ.ஜியை உள்ளே வாங்கியது.

அறையின் உள்ளே மெல்லிய வாசனை பரவியிருந்தது. மெல்லிய நீலப் பூப்போட்ட ஜன்னல் திரைகள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. மின் விசிறியை நிறுத்தாமல் வெளியே சென்றிருக்கிறாள். இதிலும் அலட்சியமா? அல்லது அவசரமா?

டி.ஐ.ஜி.டென்சில் யோசித்தார். ஆனால் அறை படு சுத்தமாக இருந்தது. கட்டில் விரிப்புக்கூட கலையாமல் இருந்தது. அறையின் மூலையில் சின்னதாய் ஒரு மேசை இருந்தது. ஒரு மேசை விளக்கு அதன்மேல் தெரிந்தது. மேசை மீது பார்வையை செலுத்தியபடி லாச்சி திறந்தார். லாச்சியில் சாவி தொங்கிக்கொண்டிருந்தது. ஆனால் பூட்டப்படாமல் இருந்தது.

திறந்து விழிகள் செலுத்த உள்ளே ஒரு டயறி தெரிந்தது. பாஸ்போர்ட் அளவான சிவப்பு டயறி.

எடுத்துப் பிரிக்க, முதல் பக்கத்தில் நிர்மலா என்று அழகான எழுத்தில் பெயர் தெரிய, தந்தையின் பெயரது முதல் எழுத்துக்கூட போடப்படாமல் வெறுமனே தன் பெயர் மட்டும் எழுதியிருப்பது நினைத்து வித்தியாசமாய் உணர்ந்தார்.

அடுத்த பக்கத்தை விரல்கள் புரட்ட, திறந்த பக்கத்தில் பட்ட விழிகள் அசைய மறுத்தன. டயறியின் தாளில் கறுத்த மையினால் எழுதிப் பதிந்த வரிகள் டி.ஐ.ஜியை புதிர்போலக் குழப்பிக்கொண்டிருந்தன.

■

மீதியாக இருந்த மதுவை இறுதியாக உறிஞ்சி காலி செய்துவிட்டு, கிளாஸை மேசையில் வைத்துவிட்டு நிமிர்ந்து, தன் எதிரே மேசையின் மறுபுறம் இருந்து தன்னையே விழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த காயத்திரியை பார்த்து ஒப்புக்காக சிரிப்பதுபோல புன்னகைத்தான் வினோ.

"இன்று நீ நல்ல 'மூடி'ல் இல்லை. சம் திங் ரோங்."

என்றாள் காயத்திரி. பதில் சொல்லாமல் வறட்சியாய் புன்னகைத்தான் வினோ.

"என்ன பிரச்சனை வினோ! உன் பாடல்களில்கூட சோகம் கசிகிறது. கேட்கும் எனக்கே மனசு கிடந்து தவிக்கிறது. பாடுகிற உனக்கு எப்படியிருக்கும். ஐ.நோ. நீ சோகம் அனுபவித்து மனசின் ஆழத்திலிருந்து வார்த்தைகள் எடுத்து கோர்த்துப் பாடுகிறாய். சோ....உன்னிடம் நிறையச் சோகம் இருக்கிறது."

"பத்திரிகையாளர் என்பதை காட்டுகிறாய் பார். எதையும் குடைந்து பார்க்கிற புத்தி."



வெற்றுக்கிளாஸை விரல்களால் வருடிக் கொண்டிருந்தான்.

சர்வர் வந்து கிளாஸ் காலியாக இருப்பதைப் பார்த்து, கொண்டுவரட்டுமா என்று கேட்க வாய் திறந்தபோது, காயத்திரி விடவில்லை. முந்திக் கொண்டு,

"எதுவும் வேண்டாம். பில் மட்டும் கொடு போதும்."

சர்வர் சிரித்து, வினோவை ஒருதரம் பார்த்துவிட்டு விலகிப்போக,

"அதிகமாக உரிமை எடுத்துக்கொள்கிறாய் நீ?"

"ஏன் கூடாதா? எங்கே மனசை திறந்து சொல்லு. உன் மனசின் ஒரு ஓரத்தில்கூட நான் இல்லையென்று சொல்லு பார்க்கலாம்."

வினோ மௌனமாக இருந்தான். அவளை நேரடியாகப் பார்ப்பதை தவிர்க்கவே விரும்பினான். அவனது இசைக்குழு அரங்கை விட்டுப் புறப்பட தயாராகிக்கொண்டிருந்தது. 'கிற்றாரை' உறைக்குள் வைத்துக்கொண்டிருந்தவன் அங்கிருந்தபடியே வினோவைப் பார்த்து கண்ணடித்து சிரித்தான்.

"ராசியடா அவனுக்கு." என்று தன் அருகில் நின்றவனுக்குச் சொல்லி பெருமூச்சுவிட்டான்.

"என்ன வினோ பதிலே இல்லை. பொய் சொல்லமாட்டாய் நீ. எனக்குத் தெரியும். உண்மையைச் சொல்லாவிட்டாலும், பொய் சொல்லாமல் இருக்கிறாய் பார். ரியலி கிரேட்."

என்ற காயத்திரி மேசைமீது இருந்த அவன் கரம்தொட்டு அவன் விரல்களோடு தன் விரல்களை இணைத்தாள்.

வினோ ஒரு நொடி தாமதித்துவிட்டு தன் விரல்களை விடுவித்துக்கொண்டான்.

"பிடிக்கவில்லையா?"

விழிகளில் மயக்கம் தெரிய காயத்திரி கேட்டாள்,

"நான் சூடு கண்ட பூனை."

"நான் நெருப்பல்ல வினோ!"

"தொழுத கையுள்ளும் படை உறங்கும் காயத்திரி."

"நான் எங்கே உன்னைத் தொழுதேன். தொட்டேன். நீ என் மனதைத் தொட்டாய். நான் உன் விரலைத் தொட்டேன். தட்ஸ்.ஓ.கே."

வினோ தன்னை மறந்து சிரித்தான்.

"நன்றாகப் பேசுகிறாய் நீ."

"இது ஜனநாயக நாடப்பா. நம்பு."

"அப்படியா? முயற்சிக்கிறேன்."

"எதற்கு?"

"நீ சொன்னதை நம்புவதற்கு!"

"செய்! ஆனால் ஒரு விசயத்தை மட்டும் நீ முயற்சிக்காமலேயே நம்பலாம். நம்பு."

"எதை?"

"என் மனதை நீ...தொட்டதை. தொட்ட உன்னை எட்டி விலக நான் விடப்போவதில்லை என்பதை."

வினோ தன் நெற்றியின் மையத்தில் விரல்களால் தேய்த்துக்கொண்டான்.

"என்ன? தொல்லையா?"

"யெஸ்! யெஸ்! நூறுதரம் யெஸ்!"

"என்னைக் காதலிக்கிறாயா என்று கேட்டு இதைப் போலவே நீ சொல்ல வைக்கிறேன் வினோ. உன் மனதில் கிடப்பதை உதட்டுக்கு எப்படி கொண்டு வருவது என்று எனக்குத் தெரியும்."

"உன் திறமையை உபயோகமாக செலவிடு காயத்திரி. விரய முயற்சிகளை தவிர். போகலாம் வா!"

"உன்னோடு- உன் பாதையில் என்றால் இப்போதும், எப்போதும் ஓ.கே."

குழந்தைபோல இமைகள் படபடக்க புன்னகைத்தாள்- எழுந்தாள்.

அவர்கள் செல்வதையே கவனித்துக் கொண்டிருந்தன ஒரு ஜோடிக் கண்கள்.

■

பசுபதி நிர்மலாவின் அருகே வந்து தோளில் தொட்டு தன்னோடு அணைத்தார்.

"வெளியே ஆள் இருக்கிறான்."

"யார் ராகவன்தானே?"

அவரை ஆச்சரியமாய் பார்த்தாள் நிர்மலா.

"எப்படித் தெரியும்?"

"எல்லாமே தெரியும். பெயர்தான் பசுபதி. பசுப்பெயர் போர்த்திய புலி."

பாறாங்கல்லுகள் உருண்டுவிழுவதுபோல வாய்விட்டுச் சிரித்தார்.

"சொல்லாமல் அழைத்துவந்தது தப்பு. அந்தத் தப்பை இந்த உடம்பு மறக்கச் செய்து விட்டது."

மார்பு தொட்டார். விரல்கள் ஊர நிர்மலா நெளிந்து,

"ராகவனுக்கு என்ன சொல்வது? முரடனாக இருக்கிறான்."

"படியவைத்துவிடு. முடியாவிட்டால் சொல்லு மடியவைத்துவிடலாம்."

மீண்டும் பாறாங்கல்லுகள் உருளும் சத்தம். என்ன சிரிப்பு அது?

"இப்போது சமாளிக்க வேண்டுமே?"

நிர்மலாவின் குரலில் கவலை தெரிந்தது.

"சவாலே சமாளி! இப்போது என்னால் சமாளிக்க முடியவில்லை."

"யாராவது வரப்போகிறார்கள். இங்கே வேண்டாம்."

"வரமுடியாது. நான் இங்கே 'சுவிட்ச்' அழுத்தினால் மட்டும்தான் கதவு திறக்கும். இப்போது கதவு திறக்காது. ஆனால்..."

வயதுக்கு பொருத்தம் இல்லாமல் விழிகளில் வெறி தெரிந்தது.

குலாம்ஷா, பிரியா சொன்ன குறிப்பின் வழியே உள்ளே புகுந்து, பசுபதியின் பிரத்தியேக அறையின் பின்புறமாய் செல்ல முயல,

"யார் அது?"

பின்னால் இருந்து குரல் கேட்டது. தடுமாற்றமே இல்லாமல் நின்று திரும்பிப் பார்த்தார்.

கேட்டவன் நல்ல உயரமாகத் தெரிந்தான். பலமுள்ளவன் என்பது உடலின் கட்டான தன்மையில் உடனே புரிந்தது.



குலாம்ஷாவுக்கு அருகில் வந்து சந்தேகமாய் பார்த்தான். குலாம்ஷா அசையாமல் நின்று கொண்டிருந்தார்.

"எங்கே போகிறாய்?"

என்ன பதில் சொல்வது? உடனே அசட்டுச் சிரிப்பொன்றை தருவித்துவிட்டு,

"என்னைத் தெரியாதா உனக்கு?"

"தெரியாது. யார் நீ?"

"பசுபதி அறிந்தால் உன்னை சும்மா விடமாட்டார். அவர் மருமகன் அப்பா நான்."

நம்புவதா விடுவதா என்று அவன் யோசித்தான்.

"உன்னை..உங்களை நான் இங்கே கண்டதேயில்லையே!"

வார்த்தைகளில் வந்த மரியாதை அவன் தடுமாறுவதை உணர்த்தியது.

"நான் உன்னைக் கண்டிருக்கிறேன். மாமா சொல்லியிருக்கிறார்."

"என்ன?"

"நீ அவருக்கு நிழல் மாதிரி என்று."

அவன் முகத்தில் முரட்டுத்தனம் சற்றுக் குறைவது மாதிரித் தெரிந்தது.

முன்பிருந்த உஷார் நிலையை தளரவிட்டுக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

'எதிரிக்கு சாதகமான இடத்தில், அவன் முழுமையான தயார் நிலையில் உள்ளபோது தாக்காதே. தாக்கினாய் எனில் வெல்வது முயற்கொம்பு.

'எதிரியை உனக்கு சாதகமான பகுதிக்கு கொண்டுவா! முடியாது போனால் அவன் கவனம் திருப்பி அவன் பலம் பாதியாக்க முயற்சி செய்.'

முயற்சி செய்துகொண்டிருந்தார் குலாம்ஷா. தாக்குதல் எதிர்பார்த்து அதைத் தடுக்கும் முன்கை எடுக்கும் நிலையில் இருந்து விலகி, 'இப்படி ஒரு மருமகனா? இவன் எப்போது முளைத்தான்' என்று அவன் யோசிக்கத் தொடங்கினான்.

அதுதான் தருணம். குலாம்ஷாவின் இடதுகால் கண் இமைக்கும் நொடியில் உயர்ந்து அவனது இடுப்புக்கு கீழே இறங்கியது.

எதிர்பாராத தாக்குதல். "யம்மா!" குனிந்தான். குலாம்ஷா இடது கரத்தை கத்திபோலாக்கி அவன்பின் கழுத்து பகுதியில் வெட்டினார். அப்படியே முகம் குப்புற தரையில் சாய்ந்தான்.

'நன்றி நண்பனே. நீ எழும்போது நான் இங்கிருந்து போய்விடுவேன்.'

மனதுக்குள் சொல்லியபடி பசுபதியின் அறையின் பினபுறம் நோக்கிச் சென்று, உள்ளே பார்க்க ஏதாவது வழி தெரிகிறதா என்று பார்த்தார்.

நிர்மலா தன் சட்டையின் பட்டன்களை போட்டுக்கொண்டாள்.

"யானைப் பசிக்கு சோளப் பொரி" என்று சொல்லி கழுத்துக்கு கீழே மயக்கத்தோடு பாார்த்தார் பசுபதி.

அறைக் கதவு தட்டப்பட்டது.

"நிர்மலா கதவு திற."

என்றுவிட்டு தன் மேசைக்கு பின்னால் போய் நின்று கொண்டார் பசுபதி.

கதவு திறக்க ஒரு புயல்போல உள்ளே நுழைந்தவன் ராகவன் அல்ல ஜவாஹர்.

ஜவாஹரை அங்கே எதிர்பார்க்காத நிர்மலா திகைத்துப்போனாள்.

திரும்பிப் பசுபதியைப் பார்த்தாள். பசுபதி முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல் நிர்மலாவையே பார்த்தார்.

ஜவாஹர் தன் சட்டை விலக்கி பிஸ்டல் எடுத்தான்.

"இப்போதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறது." பிஸ்டலை முத்தமிட்டு சிரித்தான்.

"விருந்தின் பெயர் என்ன ஜவா?"

பசுபதி கேட்டார். பசுபதிக்கு இவனை ஏற்கனவே தெரிந்திருக்கிறது என்று புரிந்து நிர்மலா இருவரையும் குழப்பத்தோடு நோக்க, பசுபதியின் கேள்விக்கு பதில் சொன்னான் ஜவாஹர்.


"விருந்தின் பெயர் ராகவன்!"

"இன்னொரு விருந்தாக யாரைக் கேட்கிறது ஜவா உன் பிஸ்டல்?"


ஜவாஹர் நிர்மலாவைப் பார்த்தான்.

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ். ஜெயக்குமார்
முகவரி: 180 ஏ, மெயின் வீதி, இறக்குவானை
பொழுதுபோக்கு: நாடகம் பார்த்தல், செய்திகள் படித்தல், வழமையான பொழுதுபோக்குகள்.




பெயர்: எம்.பி.எம்.நிஸாம்
வயது: 20
முகவரி: ஏ/45, பியகம றோட், பெதியா கொட, கெலனிய.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, நண்பர் தொடர்பு.




பெயர்: எஸ். சிவானந்தன்
வயது: 19
முகவரி: 35-ST-DENNIS-DRIVE 535, DONMILS.ONT M 3 C IG 9-CANADA.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: ஏ.கே.எம். நௌசாத்
முகவரி: SIYANCO (MINISTRY OF P.T.T.) ROOM NO-K,84, P.O.BOX-2731 RIYADH-11461. K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: பி. தேவமலர்
வயது: 19
முகவரி: 10, சேனைத் தெரு, கோட்டைமுனை, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: தையல், புத்தகங்கள் வாசித்தல், சினிமா பார்த்தல்.



பெயர்: எம்.என். றிஷி
வயது: 17
முகவரி: ஹிஜ்ரா வீதி, கிண்ணியா-03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல், இயற்கைக் காட்சிகளை இரசித்தல்.

பெயர்: க.ராம்குமார்
வயது: 19
முகவரி: டெஸ்போட்-ப.க. நானுஓயா.
பொ.போக்கு: பத்திரிகை, வானொலி, ரீ.வி., கிரிக்கெட் செய்திகள் சேகரித்தல்.

பெயர்: சி.எம்.ஹலீம் சாதிக்
வயது: 14
முகவரி: அளுத்கம, கம்பிரிகெஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.

பெயர்: பொ.ஸ்ரீதரதீசன்
வயது: 25
முகவரி: மாவட்ட வைத்தியசாலை, வாழைச்சேனை.
பொ.போ: பேனா நட்பு, புத்தகங்கள் படித்தல், இசையை இரசித்தல்.

பெயர்: எம்.எஸ். மாகிரா
முகவரி: 'டி' ஹவுஸ், லவ்லேன், திருகோணமலை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், புகைப்படம் பிடித்தல், புத்தகம் வாசித்தல்.

பெயர்: க. வடிவேல்
வயது: 23
முகவரி: 38/6, இரட்னம் வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: எம்.எச்.எம். ஷபீக்
வயது: 14
முகவரி: ரஹீமா மன்ஸில், பம்மன்ன, நாரங்கொட.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட் விளையாடுதல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# தழும்புகள்



அவள் ஒரு உத்தமி. கபடமே தெரியாத அப்பாவி. அவளுக்குத் தேவைப்பட்டதெல்லாம் நிம்மதி மட்டுமே. ஆனால் நிம்மதிக்கு மட்டும் இவ்வளவு கடப்பாடு ஏன்? மனம் அந்தரப் பட்டுக் கொண்டிருந்தது. அவளின் மனம் ஆறுதலடையவேண்டும். ஆனால் ஆறுதல் பற்றி அவள் அகராதியில் வார்த்தைகளைத் துளாவிக் கொண்டிருக்கிறாள். இது வரையில் அகப்படவே இல்லை. வேலைத்தலமாயினும் சரி, வீடாயினும் சரி மனம் அந்தரப்பட்டே இருந்தது. மறக்கமுடியாமல் எத்தனை நிகழ்வுகள். கோரமாய் மனம் நெரிபட அடிக்கும் தென்றலும் எரிக்கும் நிலவும் சுட்டது.

அவளுக்கு அந்தப் பிரிவு மறக்கவே முடியாத ஒன்று. அதிலும் அவள் அவனுக்காய் எழுதிய கடிதம் இன்னும் மனத்தின் ஓரத்தில் தழும்பாய் வேதனைப் படுத்தியது. 'என் ஆத்திரம் தீர்வதற்காய் அவருக்கு எழுதிய கடிதம் அவரை என்ன பாடு படுத்தியிருக்குமோ?' எண்ணினாள். 'ஆனால் அந்த நேரம் என் மனநிலையில் அவர் இருந்திருந்தால்...' இதனை எண்ணியபடி அந்த கடிதத்தின் பிரதியை எடுத்துப் படித்தாள். ஆத்திரத்திலும் ஆவேசத்திலும் அவ்வாறு எழுதியதை மீண்டும் படிப்போம் எனும் எண்ணம் ஏன் இப்போதுமட்டும் திடீரென்று வந்தது? விடையில்லாத சிந்தனை வந்தது பின் மறைந்தது. ஃபைல்களைப் புரட்டி அந்த இறுதிக் கடிதத்தை எடுத்துப் படித்தாள். அதுதான் அவள் அவனுக்கு எழுதிய இறுதிக்கடிதம். அதற்குப் பின் அவனை அவள் காணவில்லை. விதி அவர்களைப் பிரித்தே விட்டது... ஆனால் பாசம் மட்டும் மனதின் ஆழத்தில் கொத்தாய்க்கிடந்தது.

***அன்புடன் என்றும் என் உயிரினும் மேலானவருக்கு.***

*அண்ணா! வெறும் பேனா கொண்டு இதை எழுதுவதாக எண்ண வேண்டாம். கண்ணீரோடு என் இரத்தத்தையும் கலந்தே வரைகின்றேன். இரண்டு நாட்களாக தங்களது கடிதத்தை எதிர்பார்த்திருந்த எனக்கு இன்று பின்னேரம் நீங்களனுப்பிய பெரிய காகித உறையிலிட்ட கடிதம் வெளிப்பார்வைக்கு ஆறுதலாக இருந்தது. உடைத்துப் பார்த்தேன். உடைந்துவிட்டது உள்ளம். இல்லை பேரிடி விழுந்து நொருங்கிவிட்டது இவளிதயம்.*

*இந்தத் தங்கை மீது வைத்துள்ள அன்பு இவ்வளவுதானா? அவசரப் பிரயாணம் என்றாலும் இவளிடம் ஒருவார்த்தை சொல்லிவிட்டுப் போய் வருவோம் என்ற எண்ணமே எழவில்லையா? ஆறுதலின்றி ஆதரவின்றி அழுவாளே என்ற அனுதாபம் கூட வரவில்லையா? உங்களையே உயிராக நினைத்து வாழும் என்னை ஏன் மறந்தீர்கள்? ஒரேயடியாக இடியைத் தூக்கிப் போட்டு விட்டீர்களே! இத்தனை சோதனைகளையும் நானொருத்தி எப்படித் தாங்குவேன்? ஏன் என்மீது தாங்கள் வைத்துள்ள அன்பு இவ்வளவுதானா? என் ஆழமான அன்பை எடைபோட மறந்துவிட்டீர்களே. எத்தனையோ எப்படியோ எல்லாம் நம்பியிருந்தேன். இறைவன் என் மனதை ஏன் கல்லாகப் படைத்திருக்கக்கூடாது. இறைவனிடம் நான் குறிப்பிட்டுக் கேட்ட பிரார்த்தனை- என் அண்ணாவின் முழுமையான பாசம், ஆதரவு, அன்பான அரவணைப்பு, அண்ணாவின் மடி மீது உயிரைவிடும் பாக்கியம். இத்தனையும்தான்.*

*என் வேதனை...இது யாருக்கும் புரியாது. புரியவும் வேண்டாம். வேதனை, சோதனைகளைத் தாங்கிப் பழக்கப்பட்டவள் தான் நான்.. ஆனால் தங்களின் மேல் நான் வைத்துள்ள பாசமும், நம்பிக்கையும் வேறெவரிலும் வைக்கவில்லை.*

*இன்று என்னால் படிக்கவே முடியாது... இனிமேலும்தான். நெற்றி தெறிப்பதுபோல தலையை வலிக்கிறது. என் மனப் பலவீனத்தைப் புரிந்துகொண்ட என்னுயிரா இப்படி?*

*என்னை விட்டு தாங்கள் ஏனிப்படி விலகிச் செல்லுகிறீர்கள்? என்னிடம் உண்மையை விளக்கிச் சொன்னால் நான் புரிந்துகொள்ள மாட்டேனா?*

*பாசத்தால் பித்துப்பிடிக்கும் என்பது எவ்வளவு உண்மை. என்னிதயம் படும்பாடு....*

*இரவு நித்திரையே இல்லை. இதயத்திற்கும் கண்களுக்கும் எவ்வளவு ஒற்றுமை.*

*நீங்கள் ஆயிரம் மொழிகளில் பல்லாயிரம் நூல்களைப் படித்திருக்கலாம். ஆனால் என்னுடைய பாச நூலின் பக்கங்களை நீங்கள் இதுவரை புரட்டிப் பார்க்கவில்லை. வெறுமனே அட்டைப் படத்தை மட்டுமே பார்த்தீர்கள்... பயமாயிருக்கு அதைக் கிழிச்சு அப்படியே நெருப்பில் போட்டு விடுவீர்களோ என்று!*

*உயிரான பாசத்துடன் உங்கள் அருகிலேயே வாழத்தான் ஆசைப்படுகிறேன். என் மனதை அறிந்தோருமில்லை -புரிந்தவருமில்லையா?*

*சத்தியமாகச் சொல்கிறேன். இத்தனை அன்பு யார்மீதும் வைத்ததில்லை. எனக்காக என் அன்புக்காக என்றோ ஒருநாள் நீங்கள் அழத்தான் போகிறீர்கள். அன்று...ஆம் அன்று பிரயோசனமிராது. இரண்டு சொட்டுக் கண்ணீர்மட்டும் விடுங்கள். ஓ...அதுகூட வேண்டாம். ஒரு துளி கண்ணீர் அது போதும்.*

*தாங்கள் தந்த டயறி எப்போதும் என் கூடவே இருக்கும். ஏதுமென்றால் அறிவிக்குமாறு தங்கள் முகவரிதான் அதில் எழுதப் பட்டிருக்கிறது. ஆனால்... அந்த முகவரியில் நீங்கள் இப்போதுதான் இல்லையே. இன்னுமே என்னைப் புரிந்துகொள்ளவில்லையா? இறைவனுக்கு சொற்ப அன்பு என்மீது இருந்தாலும் போதும். உங்களுடன் ஒன்றாக என்னை வாழச் செய்யட்டும் அண்ணா! என்மேல் கோபமா? நான் என்ன தவறு செய்தேன்? ஏன் எனக்கு இப்படியோர் தண்டனை?*

*இறைவன் எனக்குத் தந்த அருட்கொடையினை ஒரு நொடியில் பறித்துக் கொண்டுவிட்டானோ? கலங்குகிறேன். துடிக்கிறேன். துவழ்கிறேன். புரிந்து கொள்வார் யாரிங்கே?*

*பணத்திற்கு முன்னால் பாசம் மண்டியிட்டு விட்டதோ, அன்றேலது மடிந்தே விட்டதோ?*

இவள்
உங்களையே உயிரென
நம்பும் தங்கை.

> **"சத்தியமாகச் சொல்கிறேன். இத்தனை அன்பு யார் மீதும் வைத்ததில்லை. என் அன்புக்காக நிச்சயம் ஒருநாள் நீங்கள் அழத்தான் போகிறீர்கள்"**

**ஹரீரா அனஸ்**

கடிதத்தை மடித்தபோது கண்கள் கலங்கி வழிந்தோடியது. கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

மனம் இன்னும் அந்தரப்பட்டது. அவரெங்கே! அவரை ஒருதரமேனும் பார்க்க முடியுமோ? அல்லது அவரைப் பார்க்காமலேயே என் வாழ்நாள் முடிந்து விடுமோ?

நொடிகளைத் தள்ளிக்கொண்டு நாட்கள் நகர்ந்தன.

□□□

அந்த வெளிநாட்டு நிறுவனக் கட்டடம் மெயின் பாதையோரமாக நிமிர்ந்து உயர்ந்து கம்பீரமாக நின்றது. அவளின் படிப்பின் பலனாய் அந்த நிறுவனத்தில் அவள் நிர்வாகியாக பணிபுரிகிறாள். அவளுக்குக் கீழ்தான் அங்குள்ள வேலை செய்பவர்களெல்லாம். பட்டுப்போன்ற வெண்மை நிறக் காரில் லாவகமாய் ஏறி அமர, சாரதி அதனை இயக்குகிறான். கார் பிரதான பாதையினூடே வழுக்கிக்கொண்டு செல்கிறது. நினைவுகளின் விளிம்பில் அவள். 'என்ன பாசம்... என்ன பந்தம்... அவரைக் காணவே கிடைக்காதோ?' மனம் இறங்கி வந்து கெஞ்சியது.

சிவப்பு விளக்கு காரைத் தரிபாடாக்கியது. பக்கத்தில் தருணம் பார்த்த பிச்சைக்காரர்கள் ஓடிவந்து கையை நீட்டினார்கள். அவனும் நீட்டினான் அவளிடம்.

அதே மெலிந்த தேகம். கூர்மூக்கு, சிவந்த உதடுகள், சுருள் முடி, தீட்ஷண்யமான கண்கள், மனது அந்தரப்பட்டது அவளுக்கு. கண்கள் அவனுள் அவனைத் தேடின. சில வினாடிகளில் அவனின் அடையாளம் அவளின் மனப் பரப்பில் வெளிச்சம் காட்டியது.

'ஏ.சி'க்காக மூடப்பட்ட கண்ணாடியைத் திறந்து... காரை ஓரமாக்கி அவனை அழைத்து சந்தேகம் தீர்த்தாள். மனம் அடைத்துக்கொண்டு வந்தது. மனேஜரம்மா சஞ்சலப்படுவது ட்றைவருக்குத் தெரிந்தது. அவள் மனேஜர் என்பதற்கு தடித்து பருமனாகி...என்றெல்லாம் இல்லை. அதே மெலிந்த உருவம். அதே பத்தொன்பது வருடத் தோற்றம், அதே முகம், அதே..அதே... எல்லாம் அப்படியே.

அவனும் சஞ்சலப்பட்டான். 'ஏறுங்கள்' என்று தானே கதவைத் திறந்துவிட்டாள். அவன் ஏறினான். ட்றைவர் ஒன்றுமே புரியாதவனாகி காரை வழமை போல்ச் செலுத்தினான். அவள் ஒன்றும் பேசவில்லை. அவள் அழுதுகொண்டிருப்பது தெரிந்தது. அவன் மௌனமாய் இருந்தான்.

ஃபோட்டிக்கோவில் காரை நிப்பாட்டி விட்டு ட்றைவரைப் போகச் சொன்னாள்.

"வாருங்கள்" என்று அவனை அழைத்து தனது வீட்டுக்குள் கூட்டிச் சென்றாள்.

உடைப்பெடுத்த அணையென, பொங்கிப் போனாள். "அண்ணா..." என அவனைக் கட்டிக்கொண்டு தனது மனப்பாரம் இறங்கு மட்டும் அழுதாள். இத்தனை காலப்பிரிவை எண்ணி எண்ணி விம்மினாள். இடைப்பட்ட தன் சோகக் கதைகளை எல்லாம் சொல்லிச் சொல்லி அழுதாள்.

அவனும் அழுதான். பின்னர் தனது தங்கையின் உயர்வான எண்ணங்கள் மீது பரிவுடன் நோக்கினான். பின்னரும் அழுதான். அவனின் விம்மலும் கேவலிலும் அவள் ஆடிப்போனாள். இன்னும் அவனின் கடிதங்களைப் பத்திரமாக வைத்திருப்பதை எண்ணிப் பெருமிதத்துடன் கொண்டு வந்துகாட்டினாள். அவனும் ஆசையாக ஒவ்வொன்றாய் எடுத்துப் படித்தான்.

"அண்ணா... பேசுங்களேன்.." அவள் அவனை ஆசையோடு கேட்டாள். அவன் கண்ணீர் விட்டான். பின்னரும் அவள் பேசுங்களேன்" என்று வற்புறுத்தினாள்.

"அவன் தன்னிடமிருந்த 'வைத்திய அட்டை' ஒன்றை எடுத்து நீட்டினான். அதனை வாங்கி அவசர அவசரமாக அதனை வாசித்துப் பார்த்தாள்.

அதில் (அவளின் பிரிவால் ஏற்பட்ட) ஒரு அதிர்ச்சியினால் அவன் வாய் ஊமையாகி போய்விட்டான் என்று குறிப்பிருந்தது.

தலையிலடித்துக் கண்ணீர்விட்டு ஓவென்று அழுதாள் அவள்.

'என்னால் என் அண்ணாவுக்கா...' அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

"எனக்கு வந்திருக்கக்கூடாதா" என்று அங்கலாய்த்தாள். பின்னர் அவனை அவள் ஆறுதல் படுத்தினாள்.

'என்ன இறைவா? இப்படியா என் உயிரை என்னோடு சேர்த்து வைக்க வேண்டும்?' எண்ணினாள்.

அவன் கிடைத்ததே போதும் அவளுக்கு.

மனத் 'தழும்புகள்' கொஞ்சம் கொஞ்சமாக இலேசாவதுபோல இருந்தது. ஆனாலும் அவனின் நிலை கண்டு விம்மினாள்.

'தன் ஆருயிர் உறவை இணைத்து வைக்கச் சொல்லி இறைவனிடம் செய்த பிரார்த்தனை வீண்போகவில்லை' நினைவுகளுடன் தன் அண்ணாவுக்கு பணிவிடை செய்யும் உயரிய பணியினை எண்ணி இனிமேல் வரும் நாட்களுக்காய் மலர்ந்தாள் அவள். ●

## குட்டிக்கதை

**மூளையை சலவை செய்தவன் வேண்டா வெறுப்பாக கல்யாணம் செய்தான். ஏமாற்றம் இடைக்கிடையே வெடித்தது.**

# மின்னுவதெல்லாம் பெண்ணல்ல

**ஷர்மிளா இஸ்மாயில்**



ஐந்தடி ஒன்பதங்குல உயரத்தில் கம்பீரமாய்த் தெரிந்தான் ரகு எனப்படும் ரகுமான். ஹோலில் கிடந்த குஷனில் அமுங்கிப்போய் ஆனந்தமாய்ப் புகைத்து, சுருள் சுருளாய் எழும் புகையை இரசித்துக் கொண்டிருந்தவனின் அந்த ஆனந்தத்தை அம்மா தடைசெய்துவிட்டாள். இவன் கண்களில் நீர்ஷமாய் கோபம் படர்ந்தது. எரிச்சலாய் எழுந்தவன்.

"அம்மா, இந்த விஷயத்தில உங்களோட விருப்பம் எனக்கு சம்மந்தமில்லாத விஷயம். என் கல்யாணத்த என்கிட்ட விட்டுடுங்க. இதில டடியோ நீங்களோ எந்த இடத்திலையும் குறுக்கிடக்கூடாது. நான் விடவும் மாட்டேன்."

அவன் அம்மாவின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி. உதடுகள் துடிக்க ஏதோ சொல்ல வாயெடுத்தவர் நெஞ்சை சட்டெனப் பிடித்தவாறே சோபாவில் சாய்ந்தார். மௌனத்தை உணர்ந்து திரும்பியவன் லேசாய் அதிர்ந்து பின் நிதானமாய் டொக்டரின் தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றினான். 'உயர் இரத்த அழுத்தம்...' முணுமுணுத்தான்.

மாலைவேளை. அழகான வெள்ளை நிற லான்ஸர் காரில் வீடுநோக்கி வந்த அப்பா விபரம் புரிந்து துள்ளினார். "ஒரே பிள்ளையாச்சேன்னு கட்டுப்பாடில்லாம வளர்த்த குற்றம். வளர்த்த கடா மார்பிலே பாயுது. அம்மாவையே எதிர்த்துப் பேசத் துணிஞ்சிட்டாரு பெரிய மனுசன்." கரகரவென்று அடித் தொண்டையால் பேசியவர்- "டேய் ரகு....வாடா இங்க." உச்சஸ்தாயில் ஓர் ஆங்காரமான அழைப்பு.

ரகுவுக்கு லேசாய் தொடை நடுங்கியது. சமாளித்து எழுந்தான். 'என்ன தான் சொல்லிடுவாருன்னு பார்ப்போம். நா ஒண்ணும் இன்னும் பாப்பா இல்ல. எனக்கும் இருவத்தஞ்சு வயசாகுதுன்னு அவங்க புரியணும்.' இந்த மாதிரியான எண்ண வோட்டங்களுடன் சென்றவனை உறுத்துப் பார்த்து உறுமினார் அவன் தந்தை.

"நீ சொல்ற மாதிரி எங்களால ஆட முடியாது புரிஞ்சுக்கோ. என்கிட்ட இருக்கிற பலகோடி மதிப்பான சொத்துக்களுக்கு ஒரேவாரிசு நீ. உனக்கு இது தேவைன்னு நெனச்சா நாங்க பார்த்து வெச்ச பொண்ணையே கட்டிக்கணும். நீ தேடுற பேரழகியா அவ இல்லாம இருக்கலாம். பட் ஒரு சராசரிப் பெண்ணுக்கான அழகு அவகிட்ட இருக்கு. அதுக்கும் மேலா நல்ல குணமிருக்கு. பண்பிருக்கு. எங்களுக்கு மருமகளா வரப்போற ஒரே பொண்ணு அவதான். உனக்கு அவளப் பிடிக்காட்டி.... நீயா ஒரு பேரழகிய தேடிக் கட்டிக்கோ. பட் வன்திங் மை சன். இந்த சொத்துல, பணத்துல ஒரு சதம்கூட உனக்கு வராது. வரவிடமாட்டேன். யூ ஆன்டர்ஸ்டான்ட்?"

சினிமா வில்லன் நம்பியாருக்கும் மேலாக பயங்கரமாக மிரட்டினார். ரகு திகைத்தான். அவனால் பேச முடியவில்லை. சரியான இடத்தில் அடித்து விட்டார்! இருபத்தைந்து வருஷமாக பணத்தில் குளித்து, மிதந்து வளர்ந்த உடம்பு. சொகுசான வாழ்க்கை. எப்படி விடுவது? எங்கே போவது? போனாலும் என்ன செய்வது? ஏலெவலில் எல்லாம் பெயிலாகியும் ஒரு மனேஜர் உத்தியோகம் வகிப்பது அப்பன் சொத்தாகிய அவரது கம்பனியில்தான். வேறெங்காவது வேலை தருவானா? அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடித் திரியும் வாழ்க்கையை கற்பனையில்கூட சேர்க்க இஷ்டமில்லை.

மூளையைச் சலவை செய்தவன் வேண்டா வெறுப்பாக கல்யாணம் கட்டி கொண்டான். அடிமனதில் புதைபட்ட ஏமாற்றம் அவ்வப்போது வெடிக்கும். சீ எத்தனை விதமாய் கற்பனை பண்ணியிருந்தான் வரப்போகும் மனைவியை ஓர் ரம்பையாக, ஊர்வசியாக, காரில் பக்கத்து வீட்டில் பதுமைப் பெட்டகமாக உட்கார வைத்து பலரின் புருவங்கள் வியப்பால் விரியத்தக்க அழகியான அவளுடன் வலம்வர.... அவனோடு அவள் கைகோர்த்து போகுங் கணங்களில் பலரின் தலைகள் தானாகத் திரும்பக் கூடிய பேரழகியாக... ஊஹூம். அவன் போட்டு வைத்திருந்த இந்த அழகிய வட்டத்திற்குள் அகப்படாதவளே மனைவியாக வாய்த்து விட்டாள். அடக்கி வைத்தான் எரிமலையான மனதை.

சொன்னபடி சொத்துக்களை எழுதி வைத்துவிட்டு அப்பா இறைவனிடம் போக தொடர்ந்து அம்மாவும் போய்விட்டாள். தனிக்காட்டு ராஜாவாக அத்தனை பணத்துக்கும் ரகுவே அதிபதியாகி புது சுதந்திரம் கிடைத்த உணர்வில் மிதந்தான். மனைவி என்பவள் இப்போது அலட்சியத்தின் கடைசிப் படியில். பாவம் ஏழைப் பெண்ணவள். கணவனின் செய்கைகளைப் பொறுத்து பூமாதேவி போலிருந்தாள். இருந்தும் இவனது வக்கிர புத்தி. அவளை விவாகரத்து செய்துவிட்டான். கண்ணீர் கடலாக அவள் மன்றாடிய போது கல் மனசாய் மாறியிருந்தான். அவள்போய் விட்டாள். இவன் திருவிளை யாடல்கள் ஆரம்பித்தன.

இத்தனை நாள் அழகுக்காய் ஏங்கிய மனசு. ஆர்ப்பாட்டம் பண்ணியது. நாளுக்கொரு அழகியைத் தேர்ந்தெடுத்து ஆனந்தப் பட்டான். தண்ணீராய்ப் பணத்தை இறைத்து அழகிகளின் சொர்க்கம் தேடினான். முடிவாய் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கண்டெடுத்த அழகியை மனைவியாய்ப் பட்டம் சூட்டி மகிழ்ந்தான்.

ஒரேயடியாய் இன்பக் கடலில் மூழ்கியிருந்தான் ரகு. எதுவரை? அவனது நிறுவனம் சார்பாய் நடந்த இலவச இரத்ததான வைபவத்தில் அவனொரு எச்.ஐ.வி பொஸிடிவ்வாக கண்டுபிடிக்கப்படும் வரை! இப்போது கரையிலெடுத்துப் போட்ட மீனாய் துடித்துக்கொண்டிருக்கிறான். இப்போது அவனொரு எய்ட்ஸ் நோயாளி! ●

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

- நம்ம கட்சிப் பொருளாளரை ஏன் நீக்கிட்டாங்க?
- கட்சியில ஏற்பட்ட விரிசலைச் சரி பண்ண கொங்கிரீட் செலவு ஒரு இலட்சம் ரூபாய் எண்டு கணக்கு காட்டினாராம்.

□□

ஒருவர்: எங்க அனாதை விடுதிக்கு ஏதாவது நன்கொடை கொடுங்க சார்.
மற்றவர்: காசு வேணுமா, குழந்தை வேணுமா?

□□

திருடன் 1: நீ எப்படி மாட்டிக்கிட்டே?
திருடன் 2: அலாம் மணிக்கூடு திருடியதும் அது சரியா வேலை செய்யுதான்னு அங்கேயே நின்னு செக் பண்ணிப் பார்த்தேன்.

□□

ஒருவர்: என் பையன் மூக்கில விரலை வைக்கிற மாதிரிப் பண்ணிட்டான்.
மற்றவர்: அப்படி என்ன பண்ணினான்?
ஒருவர்: ஒரு குச்சியை எடுத்து சாக்கடையைக் கிளறிவிட்டான்.

□□

அவன்: நான் லவ் லெட்டர் கொடுத்த பொண்ணு டீச்சரா வேலை பார்க்கிறா...
இவன்: எப்படி தெரிஞ்சது?
அவன்: லவ் லெட்டரில நிறைய மிஸ்டேக் இருக்குன்னு திருத்தி அனுப்பி இருக்கிறா.

□□

பாபு: நான் எழுதிய அரைப்பக்கக் கதைஒண்ணு பத்திரிகையில பிரசுரமாகியிருக்குடா.
கோபு: கதை எல்லாம் எழுதவே மாட்டேன். துணுக்குகள் தான் எழுதுவேன் எண்டு நீ சொன்னியே?
பாபு: நகைச்சுவைத் துணுக்குத்தாண்டா எழுதி அனுப்பி இருந்தேன். அது கொஞ்சம் பெரிசாப் போச்சு. அதையே அரைப்பக்கக் கதையாப் போட்டுட்டாங்க.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# கூழ் முட்டை

மண்டூர் உருத்திரா

அவனது உருவின் நிழலை மட்டும் படம் பிடித்துக்கொண்டிருக்கக்கூடிய அகோர வெயில் அது. மேலே அண்ணாந்து பார்க்கிறான்...!

கண்ணையும், மனத்தையும்- கரியாக்கக் கூடிய அனல் பறக்கும் ஒளிக்கீற்று. தொடர்ந்து அதனை ஊடறுக்க முடியாமல் தலை தாழ்த்தி சொறிக் கற்களினால்-சட்டைப் பையை நிரப்பிக்கொண்டிருக்கிறான். அவன்!

குற்றங்கள் செய்யாமல்- குற்றவாளியாக்கப் பட்ட நிரபராதி இவன். இந்தப் பரந்த உலகில், அவன் பாதங்கள் கொள்ளும் பூமியின் அளவைத் தவிர சொந்தங்கள், பந்தங்கள், உற்றார் உறவினர்கள் அனைத்தையும் சூன்யமாக்கிக்கொண்டவன்.

"டேய் சூழ்முட்டை, வாடா வட்டக்காவடி விளையாடுவம்!"

அவனுக்கென்று இல்லாமல் போகும் இந்தப் பொழுதுகளைக் கழிக்க, தன்னை மறந்து கொஞ்ச நேரமாவது சுய உணர்வுடன் இந்தப் பௌதீகத்தில் சஞ்சரிக்க, அவன் நாடும் ஒன்று -'வட்டக்காவடி'.

அந்த விளையாட்டு வட்டத்திற்கு வெளியே நின்று ஏனையவர்களைப் பிடிப்பதற்கு மட்டுமே அவன் பயன்படுத்தப்படுவான்.

நிஜ வாழ்விலும் அவன் சமூக வட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்டு, 'கூழ்முட்டை' என்ற பெயரைத் தொலைத்த பட்டப் பெயருடன் நடைப்பிணமாய்...

"என்னடா ஏலாட்டி ஏலாண்டு சொல்லு. நேரம் போகுது. அம்மா தேடுவா." ஒருவன் அவனை அவசரப்படுத்தினான்.

"எவடத்தடா விளையாடுற?"

"கூமாவடியில."

"எனக்கு ஒண்ணாடா... கூமாவடிக் கெண்டா நான் வரமா...ட்டன்." விளையாடுவதற்கு முடியாதென்று அவனுக்கு கூறுவதற்கு பயம். அவனது விருப்பு வெறுப்புக்களை அவனை நாடும் எவரும் கருத்தில் கொள்வதில்லை. மாறாக அவனால் தாங்கள் எவ்வளவு பலனை அடைந்து கொள்ளலாம் என்பதுதான் குறி!

"நேற்றும் எங்கள நீ ஏமாத்திப்போட்டா, வரப்போறியா இல்லையா?"

"எனக்...கொண்ணா...ஆ" அவனது குரல், அவனால் ஏற்கனவே மறுப்பிற்கான தண்டனையைப் பெற்று அனுபவத்தினால் ஆடத்தொடங்கியது.

"இவனுக்கு வரவரப் பெரிய எண்ணம்டா. ரெண்டு குடுத்தா வலிய வருவான். அடிங்கடா."

கையில் இருந்த கருக்கு வெட்டப்படாத அந்தப் பனம் மட்டை தும்பாய்ப் போகிறது; அத்தனையும் அவன் முதுகில் மோதி மோதி தெறித்து வைரம் இழந்து போனமையினால்..;

சின்னச்சின்ன கருக்கு வெட்டு, உடலெங்கும்; கிழிந்த மேலங்கியினூடாக இரத்தம் கசியத் தொடங்கியது. மண்டையைப் பிளக்கும் உச்சிவெயிலில் அந்த சொறிக்கல் திடரில் மல்லாந்து படுத்து முனகத் தொடங்கினான்.

"ய்யா...ஆ....ய்யா...ஆ...."

அந்தத் திடலில் தனிமரமாய் இருந்து கொண்டு முனகும் அவன் குரலுக்கு அந்த மதியத்தில் செவிசாய்க்க யார் இருக்கிறார்?

"பிரகாஷ்! முன்னுக்குத் தந்தை பெயர் இல்லாத, பதிவு செய்யப்படாத பின்னால் சமூகத்தில் அங்கீகரிக்கப்படாத அவனது பெயர்!

முறையற்றுப் பிறந்தவன் என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமல்லாது, ஒரு உயர்தரக் குடும்பத்தின் அந்தஸ்த்து வரட்டுக் கௌரவம்- இவனது பிறப்பால் பாழாகிவிடும் என்பதற்காகவும், அநாதையாக்கப்பட்டவன்.

எல்லை மீறிய காதல்-அவன் பெற்றோரின் காதல்தான்- இவனது வாழ்க்கை அத்தியாயத்தின் முதல்படி: அவனது பிறப்புத் தடைக்கான முயற்சிகள் தோல்வியாகப் போனபின் பூரணத்துவ



மில்லாமல் மறந்தான். விளைவுகள்...? அவன் மூளைவளர்ச்சியற்ற கூடவே அநாதையான ஒரு தனிமனிதன்.

பிழைகள் மன்னிக்கப்படலாம். ஆனால் செய்வது பிழை என்று அறிந்து கொண்டபின்னரும், செய்வதற்கு தண்டனை யுண்டா? அவனைப் பெற்று தவற்றினை ஊரறியாமல் மூடி, தெருநாயாய் அலைய விட்டுக்கொண்டு இறுதியில் எச்சில்கள் உண்பதற்காய் அவன் செல்லும் அந்தப் பெரிய வீடு.... அவனது 'பிறப்பிடம்' என்பதை எவரும் சொன்னால் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இதயம் இல்லாத மனிதங்கள் வாழும் இத்தகைய பெரியவீடுகள் பெயரளவில் மட்டும் எதற்கு...?

அவள் அவன் அந்த வீட்டுக்கு வரும் போதெல்லாம் மகிழ்ச்சியைத் தொலைத்து விடுவாள். எவருக்கும் தெரியாமல் பலவிதமான உதவிகளைச் செய்ய முடியும் அவளால் அவனுக்கு! ஆனால் அந்த உதவி, அதைப் பெற்று உணர்ந்துகொள்ளும் பக்குவம், அவனுக்கு இல்லையே? இதைப் பற்றிய ஏனையோரின் பார்வை எதிர்காலத்தில் உள்ளதாக அவள் நினைத்துக்கொண்டு இருக்கின்ற வாழ்க்கை. இவையெல்லாம் இல்லாமல் போக, இவன் காரணமாகி விடுவானோ என்ற அச்சம். பெண்மையில் இருந்து அவளை அப்பால்படுத்திக்கொண்டு நான்கு சுவர்களுக்குள்ளே கட்டுப்போட்டு வைத்திருக்கிறது அவனை!

தடுமாறித் தடுமாறி எழுந்து நிற்கிறான் அவன். உடலெங்கும் அனலாகக் கொதித்தது. அந்த வெப்பத்தைக் கொண்டே ஒரு பொட்டலம் துணிகளை அயன் செய்யலாம் போலிருந்தது.

சட்டையைக் கழற்றி தலையில் போட்டுக்கொண்டு, மெதுவாக நடந்து சந்திக் கடையை அடைகிறான். எல்லோருடைய பார்வையும் மனிதாபிமானம் என்ற காரணத்திற்காக இவன்மீது விழுந்தாலும் இவனை இனம் கண்டுகொண்டபின்னர் ச்சீ...இவனா' என்று தெறிப்படைகிறது? அந்த வெள்ளைச் சேர்ட்டில் கறைபடிந்து கிடக்கும் அவனது குருதியை கண்ட அந்தப் பெரிய மனிதர் இரங்கிக்கொள்கிறார்.

"என்ன நடந்ததுப்பா...?"

"விள...ஆ...ட ஒண்ணான்னு..." அவனுக்கு பேசமுடியாமல் அழுகை வெடிக்கிறது.

"ஒண்ணான்னு...?" பெரியவர் அவனை பேசுவதற்கு உற்சாகமூட்டினார்.

"நான் செல்ல... என்ன... அடிச்சுட் டான்கள்" அழுதழுது வீங்கிய அந்தக் கண்களில் இருந்து இத்தனை உப்பு நீரும் எங்கிருந்து வந்தது? அந்தப் பெரியவரின் பெரிய மனதை அவனது அழுகை கரைத்தது.

"இந்தாப்பா இதப் பூசு... இத சாப்பிட்டிற்று...போ." ஒரு இலையில் தைலமும், பாதி பணிசும், வாங்கிக் கொடுத்தார். ஆனால் அவன் அதை வாங்கிக்கொள்ளாமல், கேட்கிறான்.

"இதமாதி பனமட்டையால அவனு களுக்கும் அடிப்பீங்களா?" அவனது திருப்தி ஒரு பழிவாங்கலில் மட்டும்தான் உள்ளது என்பதை அவரால் புரிந்துகொள்ள முடிகிறது.

"இப்ப நீ சாப்பிட்டிற்று போ. நான் வீட்டுக்குப்போய் இந்தச் சாமானுகள கொடுத்துப்போட்டு, வந்து அவனுகளுக்கு பனமட்டையால அடிக்கிறன்!" சட்டையால் முதுகைத் தட்டிக்கொடுத்து அவனது திருப்திக்காக ஒரு பொய்யைச் சொல்லி அனுப்புகிறார்.

"கட்டாயம் வரணும். அவனுகளுக்கு அடிக்கணும்..." தெரு ஒழுங்கையினால் போகும் அவன், திரும்பித் திரும்பிப் பார்த்துச் சொல்லிக்கொண்டு போகிறான்.

"பாவம்! சின்னப்பையன். புத்தி தெரியாது." அவர் யாருடனோ அனுதாபப் பட்டுக்கொள்கிறார்.

அவள் மிகுதியாய் அவனுக்கென்று வைத்த அந்தச் சோறு நேரம் கெட்டுப் போனதனால் பழுதடைகிறது.

"பழக்கப்பட்ட பூனையை தொலைத்து விடுவதற்காய் தொலைவில் கொண்டு விட்டாலும் அது மீண்டும் பழைய இடத்தை அடைந்தே தீரும். அவனது பிறப்பை ஊருக்கு இனம் காட்டாமல் அவனையும் , அவளது குடும்பம் தொலைவில் கொண்டு போய் விட்டதுதான். ஆனால் மீண்டும் அவன் எப்படி இங்கு வந்தான்? யார் கொண்டு வந்தார்? என்று தெரியாமல் அவனை மட்டும் முக மச்சங்களில் இனம் கண்டு அந்த இரகசியத்தை அவளுக்குள்ளே பூட்டிக்கொண்டு சமுதாயப் பயத்தில், மெழுகாய் தனக்குள்ளே உருகிக் கொண்டிருக்கும் அவளது நிலை மிகப் பரிதாபமானது.

ஒவ்வொரு நாளும் எந்தநேரமாவது அவன் வருவான். ஏதாவது ஒரு சாப்பாடு அவனுக்கு கொடுத்து அவனை நிறைவு செய்வதில், இவளுக்கொரு ஆனந்தம். பூரணமில்லாத திருப்தி. அறிவீனத்தினால் ஏற்பட்ட ஒரு சிறிய தவறு. பதினொரு வருடமாகியும் அழிக்கப்படாமல் அவள் கண்முன்னே நடமாடித் திரிவதை எண்ண முடியாதுள்ளது அவளுக்கு.

அவன் வராமைக்கான காரணம் தெரியாது. குழம்பிப்போய் தனக்குள்ளே அதை அடக்கிக்கொள்கிறான்.

அவன்,

புளியடித்திடல் வளவிற்குள் வந்து-நேராய் நிமிர்ந்து நிற்கும் புளியமரத்தையும் அதன் கீழே இருந்து வட்டக்காவடி விளையாடும் அந்த, வேறொரு குழுவையும் காண்கிறான்.

பொழுது சாய்ந்து நேரம் மூன்று மணியையும் தாண்டிப்போய்விட்டது. பாதி பணிசும், குளாய் தண்ணீரும் குடலை நிரப்பி-போதாமையால் பசி வேகம் ஒருபுறம்.

மத்தியானம் இதேபோல் ஒரு குழுவால், தான் அடிபட்ட காட்சி ஒருபுறம் தோன்றி மறைகிறது அவனுக்கு!

"டேய் கூழ் முட்டை வாறாண்டோ. ஊ...ய்...ய்.." அடிமரத்திற்கு கீழிருந்து வந்து அவனது செவிப்பறையில் இப்பொழுது புதிதாய் ஒருவார்த்தை வந்து மோதுகிறது.

"கூழ் முட்டை" மீண்டும் உச்சரித்துப் பார்க்கிறான்.

"பிரகாஷ்!" ஒளித்துவிட்ட அவனது பெயர் மறுகாதில்...

இன்றுவரை 'கூழ்முட்டை' அவனுக்கு வைத்துள்ள பட்டப்பெயர் என்பது, புரிந்து கொள்ள கிடைத்த இந்த நிமிடம் தான், அவன் 'மூளைவளர்ச்சியற்றவன் என்ற வாய்ப்பாட்டில் இருந்து கழிக்கப்படுவதற்குரிய சுப முகூர்த்தமாகிறது..!

புது இரத்தம் ஓடி அவனது உணர்வைக் கிழறுகின்றது. வெட்டப்படாத அவனது சுருள் முடி, முகத்துக்கு நேரே விழுந்து ஒரு கண்ணை மறைக்க, மறுகையில் எதிரே கிடந்த சூரைமுள் கம்பை எடுத்து ஓங்கிக் கொண்டு ஒரு வில்லனைப்போல வேகமாய் ஓடுகிறான். அந்த ஓட்டத்தில் ஏற்கனவே அவன் அனுபவித்த அடியின் வலி... அதன் வேதனை... எல்லாம் பறந்து...

அவனது எதிர்பாராத ஓட்டம், விளையாடியவர்களை சிதற வைத்தாலும், மீண்டும் ஒன்றுகூடி..... இனிப்பை எறும்புகள் மொய்த்துக்கொள்வதைப்போல் அவனை சுற்றி... அவர்கள்...

தனது கம்பே தனக்கு வினையாகும் என அவன் நினைத்திருக்கவில்லை....

பொழுது மிக வேகமாய் நகர்ந்து கொள்கிறது. புளியடித் திடல் வெறிச்சோடிக் கிடந்தது. அவனைத் தவிர.

அந்த இரவு முழுவதும் அவளுக்கு நித்திரையில்லாமல், நிம்மதியில்லாமல், 'இந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்லி ஒரு முடிவு எடுத்தால் என்ன...?'

பெற்றவயிறு அவளுடையது அல்லவா? யோசித்துக்கொண்டே தன்னை அறியாமல் தூங்கிப் போய், விடிந்ததும் வருவான் என்ற நம்பிக்கையில், நேரத்துடன் எழுந்து முற்றத்திற்கு வருகிறாள்.

மறு சுற்றில்...சூரியன் மெல்ல மெல்ல மெலெழுந்து கொண்டு முன்னேறுகிறது..

"பெரியய்யா, இஞ்சவருவான் அந்தப் பொடியன். அதுதான் இந்தப் பிள்ளையள் கூழ்முட்டை எண்டு சொல்ற பொடியன். புள்ளியடித் திடல்ல செத்துக் கிடக்கானாம்..." தோட்ட வேலைக்கு நேரத்தோடு வந்த சாமியண்ணன்தான் இதை அவளது தந்தையிடம் கூறுகிறார்.

"ஐயோ... கடவுளே என் பிள்ளையைக் கொண்ணுட்டியாப்பா... உன்னாலகூட அவனக் காப்பாத்த முடியலையா...?

அந்தத் தாயுள்ளம் நொறுங்கிப் போகிறது. அவள் அந்த அறைக்குள்ளே கிடந்து கதறுகிறாள்.

புளியடித் திடலைச் சுற்றி 'வட்டக்காவடி' விளையாடும் பிள்ளைகள்...கண்ணீர் அறு அவர்களைத் தாண்டி ஓடுகிறது...

"நல்லதெண்டான, கெட்டதெண்டான, நமக்கெல்லாம் முசுப்பாத்தியாக் கிடந்தவன். என்ன நடந்ததெண்டு ஒருவருக்கும் தெரியாதாம்.." அவனது இறப்பிற்கு அனுதாபம் செலுத்தி, காரணத்தை அறிய முடியாமல் குழம்பிப் போனவரின் ஏக்கம் இது!

கூழ் முட்டைகள் குஞ்சாவதில்லை. இது இயற்கையின் நியதி! ஆனால் குஞ்சாகி வளரக்கூடிய இந்த பிரகாஷ் போன்ற முட்டைகளை கூழாக்கியவர்கள் யார்? இது எந்த நியதிக்குட்பட்டது?

கூழ்முட்டைகள் பயனற்றதாய் வீசப்படுகிறது. ஆனால் அந்தக் கூழ் முட்டையை உருவாக்கிய கோழியுமல்லவா வீசப்படவேண்டும்....? இதுதானே உண்மை நியதி?

ஆம்... ஒதுக்கப்பட்டமையினாலே கூழாகிப்போன இந்தப் பிரகாஷ் என்ற கூழ் முட்டையும் இந்தச் சமுதாயத்திற்கு எதற்கென்று ஆண்டவன் நினைத்துக் கொண்டானா இப்படியான கூழ் முட்டைகளை நிச்சயம் குஞ்சாக்க முடியும்.., இந்தச் சமுதாயம் ஒத்துவாழும் சூழலுக்கு உயரும்வரை...!

---

குட்டிக்கதை

# தாய்மை

சேத்தூர் எஸ். பகீரதி

பாடசாலைக்குச் செல்வதற்காக சித்ராவும், ஜெயாவும் பஸ் வண்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் உயர்தரம் படிக்கும் மாணவிகள். நல்ல தோழிகளும்கூட. சிந்தனை வசப்பட்டிருந்த சித்ராவை ஜெயாவின் குரல் கலைத்தது. "சித்ரா அங்கே பாரேன். உன்னை தினமும் சுத்துற றோமியோ வருது" என்றாள் ஜெயா. சித்ரா பார்த்தாள். வழமையான ஏக்கம் நிறைந்த விழிகளோடு சங்கர் சித்ராவை நோக்கி வந்து கொண்டிருந்தான். "இவனோட பெரும் தொல்லை" என சிடுசிடுத்த சித்ரா முகத்தைத் திருப்பிக்கொண்டாள். நல்ல வேளையாக பஸ் வண்டியும் வந்து நிற்க சித்ராவும் ஜெயாவும் ஏறிக்கொண்டார்கள். சங்கர் வழமைபோல் முகத்தில் ஏமாற்றத்தை வாங்கி நகர்ந்தான்.

சங்கர் தந்தையை இழந்தவன். கோடி கோடியாக சேர்த்து வைத்துவிட்டு இறந்த தந்தை சிவராமின் பணத்தை செலவழிப்பது என்ற தீர்மானத்தோடு பிறந்தவன்தான் சங்கர். பணமிருந்தும் என்ன? தன் மகன் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுகிறானே என தாய் கலங்குவாள்.

சித்ரா படிப்பில் கெட்டிக்காரி. அவளுக்கு இந்த காதல் கத்தரிக்காய்களில் ஆர்வமுமில்லை. நம்பிக்கையுமில்லை. அவளைப் பொறுத்தவரையில் அவளது இலட்சியம் படிப்பு ஒன்றுதான். சித்ராவின் இவ்வாறான கொள்கைக்குக் காரணம் அவளது ஏழ்மை மட்டுமல்ல. நாகரிகம் முன்னேறிவிட்ட இன்றைய காலகட்டங்களில் காதலிப்பதை அனேகமானோர் ஒரு ஃபாஷன் என்றே கருதுவதும் ஏமாற்றுவதும் ஏமாறுவதுமே நடந்து கொண்டிருப்பதால் சித்ரா காதலை வெறுத்தாள்.

தென்றலாக இருக்கும் சித்ரா தன்னால் புயலைப்போல் சீற்றமடையவும் தெரியும் என்பது போல் மிகவும் கண்டிப்பாக



இருந்தாள். நெருப்பு தொட்டால் சுடும். சித்ராவும் அதே மாதிரித்தான். ஆனால் சேகர் சித்ராவைத் தொடர்ந்தான். சித்ராமீது சேகருக்கு நிஜமான நேசமில்லை. முடியாது என்பதை முடித்தே தீருவது என்ற கொள்கையுடையவன். சித்ரா பல முறை பல வழிகளிலும் தனது வெறுப்பைக் காட்டினாள். சேகர் விடுவதாகத் தெரிய வில்லை. சித்ரா செல்லுமிடமெங்கும் சேகர் தொடர்ந்தான். இதனால் பல வேளைகளில் சங்கடத்துக்குள்ளாகியிருக்கிறாள். சேகரோ எதைப்பற்றியும் கவலைப்படாதவனாக சித்ராவின் பின்னே சுற்றினான்.

சித்ரா மாலை நேர வகுப்பு முடிந்ததும் பஸ் வண்டியை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அவளது தோழி ஜெயா இன்று வரவில்லை.

அந்தி மயங்கிக்கொண்டிருக்கும் நேரம், வீதியில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. ஜெயா இன்று வராதது சித்ராவுக்கு என்னவோ போலிருந்தது.

"எக்ஸ்கியுஸ்மீ" என்ற குரல் கேட்ட சித்ரா மெல்ல அதிர்ந்து திரும்பினாள். சேகர் நின்று கொண்டிருந்தான். சித்ரா முகத்தைத் திருப்பிக்கொண்டாள். சித்ராவுக்கு கோபம் வந்தது. "சித்ரா ஐ...ஐ லவ் யூ.... ஐ லவ் யூ சித்ரா" சேகர் மென்மையாகத் தன் எண்ணத்தை வழமைபோல் வெளியிட்டான். சித்ரா பேச விரும்பாதவளாய் மௌனமானாள். சேகர் அதைச் சாதகமாக்கிக்கொண்டு தொடர்ந்தான்.

"சித்ரா உங்க பின்னால இத்தன நாளா சுத்துறேன். எனக்கு நல்ல பதிலாச் சொல்லுங்க. உங்களை நெனச்சா பசியே இல்ல. தூக்கம்கூட வருதில்ல.நா..நான் படுற வேதனை கொஞ்சம் நஞ்சமல்ல. இன்னிக்கு எனக்கு நல்ல முடிவா ஒரு முடிவைச் சொல்லணும். சொல்லாம விட்டால் இதோ விஷம் இப்பவே குடிச்சுடுவேன்." சேகர் கையிலிருந்த விஷக் குப்பியைக் காட்டினான்.

சித்ரா முகத்தில் எந்த விதமான உணர்ச்சியையும் காட்டாமல், "சேகர் என்னை மன்னிச்சிடுங்க. அப்பா இல்லாத என்னையும் என்னோட மூணு தங்கச்சிகளையும் எங்க அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்க் கிறாங்க. எங்க குடும்பம் என்னையே நம்பியிருக்கு. என்னை நம்பியிருக்கிற என்னோட அம்மாவையும், தங்கச்சியையும் நான் ஏமாற்ற விரும்பலை.

வாழ்க்கையில எதுவும் கிடைச்சுடும். நான் இல்லாவிட்டால் உங்களுக்கு இன்னொருத்தி கிடைப்பா. அதேபோல நீங்க இல்லாவிட்டால் எனக்கு இன்னொருவர் கிடைப்பார். ஆனா... இன்னுமொரு தாய் கிடைக்கமாட்டா. உங்களுக்கும்தான். எனக்கும் தான். பசியில்லை, தூக்கமில்லை, சாகப்போறேன்'னு பைத்தியகாரத்தனமாக பேசாதீங்க.

புனிதமான தாய்மைக்கு முன்னால இதெல்லாம் ஒரு தூசு. ஒரு தாயோட அன்புக்கு எல்லையே இல்லை. அதே மாதிரி அவவோட மனசில தன்னோட பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி நிறைய எதிர்பார்ப்பு இருக்கும். முதல்ல தாயோட மனசை அறிந்து ஒரு நல்ல பிள்ளையா இருக்கணும். இனியாகிலும் நல்லா நடவுங்க. நான் வர்ரேன்" என்று பஸ் வண்டி வரவே தனது நீளமான பேச்சை முடித்துக்கொண்டு பஸ் வண்டியில் ஏறினாள்.

சேகர் பஸ் வண்டி மறையும்வரையும் சிலையாக நின்றான். ஏதோ நினைவுக்கு வந்த சேகர் நஞ்சுக் குப்பியை வீசிவிட்டு தெளிந்த மனதுடன் வீட்டை நோக்கி நடந்தான். அவனது மனதிலும் தாயின் தெய்வீக முகம் ஒளி வீசியது. முதன் முதலாக தாயின் அன்புக்கு முன் எல்லாமே வெறும் பூஜ்ஜியம் என்பதை சேகர் உணர்ந்து கொண்டான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்






இடையிலே கிடந்த உறையிலே களத்திலே பகைவர் சிரசறுக்கும் வாள் இருந்தது.

உறைவிட்டு அந்த வாள் கிளம்பி விட்டால் எதிரியை மிரட்டுவதுபோல் பிரகாசிக்குமல்லவா? அதுபோலவே விழிகளிலும் பிரகாச ஒளி.

'தாய்நாட்டின் மானம் காக்க தயங்கேன்' என்று உறுதி கூறும் உள்ளத்தை ஒத்ததாக பரந்து விரிந்திருக்கும் மார்பு. அந்த மார்புக்கு அணையாக உயர்ந்து திரண்டிருக்கும் தோள்கள்.

எண்ணிவைத்தாலும் எடுத்து வைக்கும் அடியில் உறுதியிருக்கும் என்று சொல்லும் உரம் கொண்ட கால்கள்.

அந்தக் கால்களை தடவிக்கொடுத்தது போல உறைவாள் அசைந்துகொண்டிருக்க இளம்வழுதி வந்துகொண்டிருந்தான்.

கழனியிலே கதிர் அறுக்கும் உழவர்களின் கரம் தாங்கும் அரிவாளை வாங்கி தன் முகத்திலே அணிந்து கொண்டானோ என்று நினைக்கவைக்கும் மீசை இளம் வழுதியின் கம்பீரத்தோடு கலந்து தெரிந்தது.

மேலங்கி வழியாக அவன் மார்பிலே இருந்த இரண்டு பெரிய தழும்புகள் போரிலே அவன் விழுப்புண் தாங்கிய சாட்சியம் கூறிக்கொண்டிருந்தன.

ஆற்றுமணலில் அமர்ந்திருந்து அவன் வருவதையே விழிகளால் உண்டு கொண்டிருந்தாள் மணியரசி.

முன்னரே வந்து காத்திருந்தாள். சொன்னபடி வராமல் தாமதித்து வருகிறாரே என்று நெல்லின் முனையளவு கோபமும் கொண்டாள்.

அவன் கம்பீரமாய் நடந்துவர, 'என் மனம் இவர்மீது சாய்ந்துபோனதில் வியப்பேதும் இல்லைதான்.' என்று நினைத்தும் கொண்டாள்.

பனி உலராத மலர் போன்ற கொஞ்சும் பருவத்தாள், கோல மயில் உருவத்தாள், வெல்லும் விழிப் புருவத்தாள், நெஞ்சை அள்ளும் முகக்கமலத்தாள் தனக்காக காத்திருப்பதைக் கண்டுவிட்டான் இளம்வழுதி.

நடையிலே வேகம் வந்தது. கொடி இடையாள் தான் தாமதமாகிய கோபத்தால் பிடிவாதமுடையாளாய் அடம் பிடிக்கப் போகிறாளோ என்று நினைத்துக்கொண்டான்.

## தருவது ரசிகன்

அருகே வந்து விட்டான். இதுவரை அவன் நடந்துவரும் அழகை மனதுக்குள் வாங்கி இரசித்துக்கொண்டிருந்தவள் இப்போது பொய்யாக முகம் திருப்பி துள்ளிச் செல்லும் ஆற்றின்மீது கொல்லும் விழி செலுத்துவதுபோல நடித்தாள்..

செவிகள் மட்டும் விரிந்திருந்து 'அருகே வந்துவிட்டானோ, இன்னுமா வரவில்லை' என்று அவள் மனம் கேட்ட கேள்விக்கு விடை தேடிக்கொண்டிருந்தன.

மணலில் பதியும் காலின் தடங்கள் காதில் விழாதல்லவோ? ஆனால் பொல்லாத காதுகள் எப்படியோ புரிந்து கொண்டு மனதுக்கு செய்தி அனுப்பின.

ஐம்புலனும் அளவற்ற உவகை கொள்ளும் அற்புதமே காதல். உவகை கொண்ட செவிகள் அவன் வரவு சொல்ல, மனசுக்குள் பூரிப்பு ஒரு மயில் போல் எழுந்து தோகை விரித்துக்கொண்டது.

செருமினான். திரும்பிக்கூடப் பார்க்கவில்லை, மண்ணில் இருந்த விண் நிலாவை வெல்லும் அந்தப் பெண் நிலா!

அருகே அமர்ந்தான்.

"வான் நிலவு எரிந்தால் இருள் விலகும். பெண் நிலவே நீ எரிந்தால் என் இதயமல்லோ கருகும்."

உரத்துச் சொல்லிக்கொண்டான். மணியரசி மனதுள் நகைத்தாள். எனினும் மலர் முகம் திருப்பாமல்தான் இருந்தாள்.

இருந்தவன் எழுந்தான். அவள் முகம் பார்க்கும் திசையில் குறுக்கே நின்றான். தன் இரு கரங்களையும் மடித்து தன் செவிகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டான்.

"ஒன்று, இரண்டு.."

மணியரசியால் நகைப்பை மறைக்க முடியவில்லை.

அங்காடியில் முத்துக்கள் கொட்டும் ஓசைபோல நகைத்தாள்.

"போதும்...போதும்...காக்க வைக்க வேண்டியது. பின்னர் நடிக்கத் தொடங்குவது."

இளம்வழுதியும் நகைத்தான். அவள் அருகே வந்து அமர்ந்து கொண்டான்.

"வேண்டுமென்றே செய்தேனா நான். வேலைகள் அப்படி?"

"வேண்டாம் என்றுதான் செய்கிறீர்களோ என்று நினைக்க வேண்டியிருக்...."

அவள் சொல்லி முடிக்கவில்லை இளவழுதி. தன் கரங்களால் தேன் இதழ்களை பொத்தினான்.

"காயத்திற்கு இனிது கனியிதழ் முத்தம்."

கண் சிமிட்டியபடி சொல்லி நகைத்தான். போலியாக கோபம் காட்டி, அவன் இடது செவியில் பிடித்து திருகினாள்.

இதுதான் சமயம் என்று எண்ணிய காளை அவள் இழுப்புக்கு பணிவதுபோல தோளில் முகம் சரித்தான்.

"அப்பப்பா.."

"என்ன அப்பப்பா....?"

"வழுக்கி விடுமோ என்று என் முகம் பயப்படுகிறது. அத்தனை வாளிப்பு! மூங்கிலின் பளபளப்பு!"

"போதும். போதும். ஒரேயடியாகப் புகழவேண்டாம். நாளைக்கும் கொஞ்சம் இருக்கட்டும்."

அவன் மார்பில் இருந்த போரில் பட்ட தழும்புகள்மீது விரல் தொட்டு வருடிவிட்டாள்.

"இப்படி ஒரு நிவாரணம் கிடைக்குமானால் இன்னும் நிறைவாய் களத்தில் தழும்புகள் வாங்கி வரலாமே."

என்றான் இளம்வழுதி.

"ஆசைதான்."

"அது உண்மைதான்."

"எது?"

"ஆசை உண்டு என்பது. ஏன் மணியரசி உனக்கில்லையோ ஆசை?"

"இருக்கும்.இருக்கும்."

"இல்லை. இல்லை. உனக்கு ஆசையும் இல்லை. என்மேல் அன்பும் இல்லை."

"அதுதானாக்கும் இவரைக் காண்பதற்காக ஓடோடி வந்து காத்திருக்கிறேன்."

"காத்திருந்தாய் சரிதான். என்னைக் கண்ட பின்னர் ஏன் பாராமுகமாயிருந்தாய்?"

மணியரசி மெல்ல நகைத்துவிட்டு சொன்னாள்.

"சும்மா ஒரு வேடிக்கை பார்க்கலாமே என்றுதான்."

"தெரியும்."

"என்ன தெரியும்?"

"வேடிக்கை பார்க்க நடித்தாய் என்று."

மணியரசி முகத்தில் கோபம் வந்து படையெடுத்தது,

"எப்படித் தெரியும்? அனுபவம் இருக்கிறதாக்கும்!?"

"அய்யய்யோ...இது என்ன புதுக் குழப்பம். தவறாக நினைக்காதே. பட்டு அறிந்து சொல்லவில்லை நான். படித்து அறிந்து கொண்டதை சொன்னேன்."

சந்தேகமாய் பார்த்தாள்.

"எங்கே படித்தீர்கள்? இதற்கெல்லாம் கூட படிப்புண்டோ?"

"உண்டு. குறள் இருக்கப் பயமேன். தன்னை வருத்திய காதலன் படும் பாட்டை காதலி வேடிக்கை பார்ப்பது உண்டாம்."

அந்தக் குறளையும் சொன்னான் இளம்வழுதி.

**"புல்லா திரா அப் புலத்தை யவருறு மல்லனோய் காண்கஞ் சிறிது"**

**குறள் 1301-அதிகாரம் 131**

## இலக்கிய நயம்

"இது என்ன பேச்சு மணியரசி? இதோ இருக்கிறதே, உடைவாள். இந்த வாளுக்கு கூர் இல்லாமல் போனால் பயன் என்ன? அப்படித்தான் நீ இல்லாத வாழ்க்கையும் எனக்கு!"

மணியரசிக்கு பெருமை பிடிபடவில்லை. தன் தேன் இதழ்களை மூடியிருந்த அவன் விரல்களில் ஒன்றை கடித்தாள்.

"அய்யய்யோ...என் விரல் ஏகலைவன் விரலாகப் போகிறது. துரோணருக்கு ஏகலைவன் கொடுத்தது குரு தட்சணை. நீ எனக்கு தருவது கொடும் தண்டனை."

வலிக்க கடிக்கவில்லை. ஆனால் வலிப்பதுபோல நடித்தான்.

மணியரசி விடவில்லை. இன்னொரு கடி. விழிகளால் சிரித்தாள். குறும்புக் கணை தொடுத்தாள்.

"கால தாமதம் கடுகளவுகூட இருக்காது. விரலை விடு தாயே!"

விரலை கடித்தால் ஏற்பட்ட வலியைப் போக்கும் மருந்தாக நுனி நாவால் தொட்டு ஈரப்படுத்தினாள். இதழ் பிடி தளர்த்தினாள். ஆனால் இளம்வழுதி விரலை விடுவிக்காமல் இருந்தான். மணியரசி தன் கரத்தால் விரல் பற்றி விடுவித்தாள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–53

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | ■ |
| | | ■ | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | | ■ | |
| 7 | | | | | | |
| | ■ | | ■ | | 8 | |
| ■ | 9 | | ■ | 10 | | 11 |
| 12 | | | | ■ | | |

**இடமிருந்து வலம்**

1. ஆழ்கடலே இதற்கு அருமையான வீடு.
4. இது மனதையும் கெடுக்கும்.
6. நாவுக்கு இது முக்கியம்.
7. விருந்துகளில் இதற்கும் இடமுண்டு.
10. இதில் காலம் கடந்தவற்றை கழித்துவிடலாம்.
12. உருவாகி வருவது. கிள்ளி விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

**மேலிருந்து கீழ்**

1. இங்கு சேரும் நிதி அதிகம் என்பார்கள்.
2. ஆண்களுக்குப் பொருந்தாது.
3. இதன் உறுதி அத்திவாரத்தில்.
5. இது கயிறானால் பலமாகி விடும்.
6. சில குற்றங்களுக்கு இதுவும் ஒரு தண்டனை.
8. இதற்கு ஆபத்து வராமல் பாதுகாக்க நாட்டின் தலைவர்களுக்கு நிறையச் செலவிடப்படுகிறது.
9. இதைப் போக்குவதற்கு பல வழிமுறைகள் வந்துவிட்டன.
11. போரின்எதிரிகளுக்கு பிடித்தமானது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 18.06.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-53
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.


### குறுக்கெழுத்துப் போட்டி இல-51க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ச | ன் | மா | ன | ம் | ■ | 2 வ |
| 3 மை | 4 சூ | ர் | ■ | 5 கா | ட் | சி |
| ய | ழ் | ■ | 6 ப | ரி | ■ | ட் |
| ல் | ச் | 7 பே | ரி | கை | ■ | ட |
| ■ | சி | னா | வு | ■ | 8 கை | ர் |
| 9 ஏ | ■ | ட் | ■ | 10 நி | சி | ■ |
| 11 ரி | க் | ஷா | க் | கா | ர | ன் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.51இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. பே.பூபதி தம்பலகாமம்.
2. ஜெல்சியா சலீம் இகல கொத்தரமுல்ல.
3. வி.கிருஷ்ணராஜ் கொழும்பு-03.
4. ஆப்டீன் நிசார் அநுராதபுரம்.
5. என்.நாகராஜன் தலவாக்கொல்ல.
6. பிரேம்ராஜ் பீதாம்பரப்பிள்ளை செங்கலடி.
7. கு.பவானி மட்டக்களப்பு.
8. செல்வி.நுஸ்ரத் பதுளை.
9. இ.கண்மணி பசறை.
10. ஆர்.சக்திவேல் நுவரெலியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



டியர் சிந்தியா! அன்பாக உங்களை ஒருவர் அறைந்தால் என்ன செய்வீர்கள்?

**டி.எஸ்.பிரேமச்சந்திரன்-அப்புகாமம் எஸ்டேட்.**

அன்பின் அடையாளம் அறைவதுதான் என்றால் நானும் செல்லமாக திருப்பி ஒரு அறை கொடுத்துவிடுவேன்.

□□

மனிதன் எதை இழக்கக்கூடாது?

**பர்ஸானா வாஹிட்-அக்குறணை.**

பகுத்தறிவை.

□□

முன்னர் குட்டி எம்.ஜி.ஆர். என்றழைக்கப்பட்ட மு.க.முத்து எங்கே?

**ஸ்ரீ.றைகம-இங்கிரிய.**

கலைஞர் கருணாநிதி அவரை எம்.ஜி.ஆருக்கு போட்டியாக வளர்த்தார். இப்போது ஜெயலலிதா அவரை கருணாநிதிக்கு எதிரியாக மாற்றியிருக்கிறார். தந்தைக்கு மகனும் எதிரி. இதுதான் அரசியல்.

□□

பிரபுவுக்கும்-குஷ்புவுக்கும் கிசுகிசுவாக இருந்ததே?

**வி.திவ்யா-வந்தாறுமூலை.**

அது அன்று. குஷ்புவோடு இப்போது கிசுகிசுக்கப்படுபவர் மலையாள ஜெயநடிகர். சினிமா கிசுகிசுக்களுக்கு ஆயுள் கெட்டியல்ல.

□□

போராட்டத்தால் மதமா? மதங்களால் போராட்டமா?

**எ.எல்.ஷாம்-காத்தான்குடி-06.**

மனிதன் பேதம் என்னும் மதம் பிடித்ததனால்தான் அழிவுப் போராட்டங்கள் ஆரம்பமாகின்றன. மதம், இனம், மொழி என்பவையெல்லாம் அதனை நியாயப்படுத்த சொல்லும் சாக்குப் போக்குகள்.

□□

எப்போதும் இன்பமாய் வாழ என்ன செய்யலாம்?

**வி.பி.வினித்தா-அமிர்தகழி-மட்டக்களப்பு.**

எப்போதும் துன்பம் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் கஷ்டம்தான்.

□□

நல்ல நண்பர்கள் கிடைக்க என்ன செய்யவேண்டும்?

**செல்வி.எஸ்.ஏ.ஜோதி-கொழும்பு-12.**

முதலில் நாமும் நல்ல நண்பர்களாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

□□

அழகானவர்கள் பலர் ஏன் அறிவாளிகளாக இருப்பதில்லை?

**ஏ.எஸ்.றகீஸ்-கடுகஸ்தோட்ட.**

இப்படியொரு அறிவான கேள்வியை கேட்டுள்ள நீங்கள்கூட அழகாக இல்லையோ றகீஸ்?!

□□

விடுதலைப் புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையாவின் நிலவரம் என்ன?

**ஆர்.தமிழ்வாணன்-இரத்தினபுரி.**

பரவாயில்லை. நீங்களாவது அவரது பெயரை நினைவில் வைத்திருக்கிறீர்களே! என்ன கோலத்திலோ அல்லது ஆழத்திலோ? யார் கண்டார்!

□□

டியர் சிந்தியா! மனிதனுக்கு தேவையானது பணமா? குணமா?

**எஸ்.பாபு-லுனுவத்த.**

இன்றைய பெறுமதி நிலவரப்படி குணம் குப்பையிலே. பணம் இருந்தால் குப்பையும் கோபுரத்திலே போய் ஒட்டிக்கொள்கிறதே.

□□

பெண் பாவம் பொல்லாதது என்கிறார்களே, அதன் அர்த்தம்தான் என்ன?

**எஸ்.கே.பௌமீலா-நீர்கொழும்பு.**

பெண்தானே என்று நினைத்து மிதித்துக்கொண்டே இருந்தால் அதன் விளைவும் விபரீதமாகும் என்றுதான் அர்த்தம்.

□□

நன்றி மறப்பவர்களுக்கு ஒரு உபதேசம் சொல்வீர்களா?

**இம்ஸானா இம்புயா-தர்காநகர்.**

உபதேசமா? ஆளைவிடுங்கள். திருவள்ளுவர் அன்றே சொன்னார் நன்றே சொன்னார். காதைக் கொடுங்கள்.

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா
-முய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு"

□□

அரசியல் உலகில் ரொம்ப கேவலமான விஷயம் எது?

**என்.லதா-ஆரையம்பதி.**

அரசியலே கேவலமாக மாறிக் கொண்டிருக்கிறது.

□□

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம் அங்கம் 33

**இவ்வாரம் (12.06.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:** இடும்பனை பீமன் கொன்றது பாண்டவர்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றல்ல. அவர்களுடைய பயணத்தில் இதுவும் ஒரு மைல்கல் மட்டுமே. இடும்பியுடன் பீமனை விட்டு விட்டு ஏனைய நால்வரும் தாயும் புறப்பட்டுவிட்டனர். இதே காலகட்டத்தில் அஸ்தினாபுரம் பிரச்சனை எனும் சிலந்தி வலையுள் சிக்கித் திணறுகிறது. விதுரர் தான் அந்நாட்டின் பிரச்சினைகளை சுமக்கும் சுமைதாங்கியாகவும் காணப் படுகிறார்.

-காட்சி தொடக்கம்-

விதுரர் அரண்மனை-பீஷ்மர் வருகிறார்.

**விதுர:** வாருங்கள் பெரியப்பா! அமருங்கள்!

**பீஷ்ம:** நான் இருந்து கதை பேசவரவில்லை.

**விது.மனைவி:** வாருங்கள்..! வாருங்கள்...!

**பீஷ்ம:** பல்லாண்டு வாழ்க...! உனது கணவரிடம் கேள்! எனது மருமகளும் பிள்ளைகளும் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டுச் சொல்.

**விதுர:** ஏன் என்னிடமே அக்கேள்வியை நேரடியாகக் கேட்கலாமே!

**பீஷ்ம:** அவர்கள் இருக்கவேண்டிய இடத்தில் சுகமாக இருக்கிறார்கள் என்ற பதிலைக் கேட்டு எனக்குப் புளித்துப்போய் விட்டது. அரசியலைப் பற்றி எனக்கு எதுவுமே தற்போது வேண்டாம். அவர்கள் அனைவரும் எங்கே இருக்கின்றனர் என்பது தெரிய வேண்டும். அரசியலையும் என்னிடமிருந்து தானே கற்றுக் கொண்டாய்...!

**விதுர:** இராஜதந்திரத்தின் தத்துவங்களை எனக்கு உணர்த்தியவர் தாங்களே! தத்துவங்களையும் பாதுகாப்பதும் அவசியமாகிறது. தாங்கள் கற்றுத்தந்த இராஜ தந்திரத்தில் அரக்குமாளிகை இராஜதந்திரம் எங்குமே காணப்படவில்லையே பெரியப்பா!

**பீஷ்ம:** அஸ்தினாபுரியின் பிரதம அமைச்சரைக் காண நான் இங்கு வரவில்லை. எனது அன்புக்குரிய பாண்டவர்கள் எங்கே உள்ளனர் என்பதை அறியவே வந்துள்ளேன்.

**விதுர:** அவர்கள் தற்போது ஏகசக்கர நகரில் உள்ளனர் பெரியப்பா...!

**பீஷ்ம:** சரி... அவர்களை நான் உடன் போய் பார்த்து வர வேண்டும். ஏற்பாடு செய்ய முடியுமா?

**விதுர:** அமைச்சர் விதுரர் அதற்கு இந்த நொடியிலேயே ஏற்பாடு செய்துவிடலாம். ஆனால் உங்கள் மகன் விதுரர் அதற்குச் சம்மதிக்கமாட்டான். நான் போட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகி விடும், தாங்கள் அங்கு சென்றால்.

**பீஷ்ம:** அப்போ அவர்களுடைய நடமாட்டம் பற்றி அவ்வப்போது எனக்கு அறியத்தர வேண்டும். ஏகசக்கர நகரில் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?

-காட்சி மாற்றம்-

- ஏகசக்கர நகர்-பாண்டவர்கள் உணவுக்கு பிச்சாபாத்திரம் ஏந்தி ஒருவரை ஒருவர் வாழ்த்திய வண்ணம் புறப்படுகின்றனர்.
- குந்தி ஒரு வீட்டின் மூலையில் யோசனையிலாழ்ந் திருக்கிறார்.

__பின்னணிப் பாடல்:__

*தரணிதனில் தர்மநெறி தழைத்தோங்கத் தன் சிரத்தில்*
*தகதகக்கும் முடிபுனையக் காத்திருந்தோன்*
*தர்மத்தின் தலைமகனும் தன் கரத்தில்*
*தானம் பெறுமோடந்தி தம்பிமார்தம்*
*துணையுடனே வீதிகளில் விரையும் கோலம்*
*தலைவிதியின் பயனன்றோ தடுக்கலாமோ?*

**பெண்:** தேவி என்ன கடும் சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்?

**குந்தி:** நீண்ட காலத்தின் பின்னர் தங்கள் இல்லத்தில்தான் நான் அமைதியைக் கண்டேன். கடந்த கால நினைவுகளை மனம் அசை போடுகிறது- அவ்வளவுதான்.

**சிறுவன்:** மாமி! மாமி! அமைதி-மகிழ்ச்சி என்கிறார்களே...! அது என்ன மாமி?

**குந்தி:** அதுதான் மிகவும் இனிப்பானவை குழந்தாய். அவை உன்னிடமே இருக்கின்றனவே!

**சிறுவ:** எனக்கு இனிப்புத்தின்ன ரொம்ப ஆசை மாமி!

**குந்தி:** மகனே, உன் வார்த்தைகளைவிட வேறு எதுவுமே சிறந்த இனிப்பாகாது கண்ணா!

**சிறுவ:** அப்போ இந்த இனிப்பை நீங்களும் உண்ணுங்களேன்.

**மகள்:** அம்மா! அப்பா வந்துவிட்டார்.

**அப்பா:** என்ன செய்துகொண்டிருக்கிறாய் மகன்?

**சிறுவ:** மாமியுடன் இனிப்புச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்...!

**அப்பா:** இனிப்பா...? யார் கொடுத்தார்கள்?

**சிறுவ:** அப்பா! என் பேச்சே இனிப்பதாக மாமி சொன்னார்கள்.

வீட்டுக்காரரின் மகள் குந்தியுடனிருந்து அரிசி கழுவும்போது யுதிஷ்டிரன் அர்ச்சுனன், சகாதேவன் ஆகியோர் தானமாகப் பெற்ற உணவுகளுடன் வருகின்றனர்.

**யுதிஷ்:** அம்மா! இரந்து பெற்ற உணவுடன் வந்திருக்கிறோம் அம்மா...!

**குந்தி:** நீங்களே உங்களுக்குள் பகிர்ந்து உண்ணுங்கள் மக்காள்.

**சகாதே:** இதே வார்த்தைதான் அம்மாவின் வாயில் எப்போதும்...! உங்களுக்குள் பகிர்ந்து உண்ணுங்கள்...! சின்னண்ணன் பீமன் எம்முடன் இல்லாதமையினால் எந்த உணவும் சுவையாகத் தெரியவில்லை.

**அர்ச்:** அவருக்கு உணவு விடயத்தில் எந்த பிரச்சனையும் தலையெடுக்காமல் அண்ணி நன்றாகக் கவனிக்கிறார் போலும். அல்லா விட்டால் எப்போதோ இங்கு ஓடி வந்திருக்கமாட்டாரா சகாதேவா..? அம்மா! பீமண்ணா ஏன் இதுவரை வரவில்லை?

**சகா:** அதுதான் இப்போது நீங்களே கூறினீர்களே! அண்ணி அவரை நன்றாகக் கவனிக்கிறார் என்று...!

**யுதிஷ்:** தம்பி! அண்ணன் பீமனை அளவுக்கு அதிகமாகக் கிண்டல் செய்கிறாயே...!

**சகா:** அவர் என்மீதும், நான் அவர்மீதும் கொண்ட அதிகபட்ச பாசம்தான் அண்ணா காரணம்.

**அர்ச்:** உண்மையில் நாம் அவரை நீண்ட காலமாகப் பிரிந்திருக்கிறோம் என்பது தான் உண்மை அம்மா!

-காட்சி மாற்றம்-

இடும்பியின் இருப்பிடம்.

**இடும்பி:** மகனே! நீ ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துதித்துவிட்டாய்? உனது வரவு உனது அப்பாவை என்னிடமிருந்து விரைவில் பிரித்துவிடும் அறிகுறியாகும் அல்லவா?

**பீமன்:** தாயும் மகனும் என்ன பேசுகிறார்கள்...?

**இடும்பி:** தாங்கள் என்னை விட்டுப்பிரியும் காலம் வந்துவிட்டது என்பதைப் பற்றி கவலையுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் போகும்போது மகனையும் கொண்டு செல்வீர்களா பிரபு?

**பீமன்:** குழந்தையை தாயே தன் வயிற்றில் சுமப்பதால் அக்குழந்தை மீதான உரிமையும் தாய்க்குத்தான் அதிகம். அவள்தானே பிரசவ வேதனையையும் தாங்குகிறாள்.

**இடும்:** ஓர் ஆணுக்கு பெண்ணின் வேதனைகளை இத்தனை தூரம் உணரமுடியுமா?

**பீமன்:** அன்னைக்கு இணையாக அகிலத்தில் எதையுமே கூறமுடியாது. சமுத்திரம் எவ்வளவு நீரைப் பெற்றாலும் நிரம்பி வழிவதில்லை. ஆண்டவனே அவதாரமெடுக்க நேர்ந்தாலும் அவனும் ஓர் அன்னையின் மூலம்தான் அவதரிக்க முடியும்! இந்த பூமாதா ஒரு மரத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாவதுபோல் ஒரு குழந்தைக்கும் அதன் தாய்தான் சகலவற்றுக்கும் அவசியம். ஆகவே, எனது வழித்தோன்றலும் சீரான வளர்ச்சிகாண உன்னிடமே இருப்பது சிறந்தது.

-காட்சி மாற்றம்-

ஏகசக்கர நகர்-பாண்டவர் நால்வருக்கும் குந்தி உணவு படைக்கும்போது பீமன் வருகிறார்.

**பீமன்:** அம்மா...!

**குந்தி:** மகனே பீமா..! வந்துவிட்டாயா....? வா..வா...!

பீமனை சகோதரர்களும் தாய் குந்தியும் வரவேற்கின்றனர். சகாதேவன் ஒரு பாத்திரத்தை எடுத்து ஏனைய சகோதரர்களின் உணவிலிருந்து சிறிதளவு சேர்க்கிறான்.

**நகுல:** வாருங்கள் அண்ணா! உங்கள் உணவு தயார்.

**குந்தி:** உணவு எங்கும் ஓடிவிடாது. பீமன் குளித்துவிட்டு வரட்டுமே!

**பீமன்:** நீங்களே உணவு தருவதனால் இப்போது நான் குளிக்க வேண்டியதில்லை...!

**குந்தி:** சரி சரி...உட்கார்.

ஐவரும் மகிழ்ச்சியாக உண்கின்றனர்.

▫▫▫

ஐவரும் குந்தியும் பிராமணர் வேடத்தில் தங்கியிருக்கும் வீட்டின் தலைவி துக்கத்துடன் காணப்படுகிறார். கணவரான தலைவர் தேற்றுகிறார். இவர்களின் உரையாடல் குந்தியின் செவியில் விழுகிறது.

**தலைவன்:** ஏன் அழுகிறாய்? நமது துன்பத்தை நம்மை நம்பி வந்துள்ள விருந்தாளிகள் அறியலாகாதல்லவா...?

**குந்தி:** அண்ணா! என்னிடம் உண்மையை மறைக்க வேண்டாம். உங்கள் விருந்தாளிகளான எங்களுக்கு உங்கள் சுகதுக்கங்களிலும் பங்குண்டல்லவா?

**தலை:** அது பெரும்பேரிடர் தங்கையே! இந்த ஊரைவிட்டு எங்காவது வேறிடம் போய் விடலாம் என்று இவளிடம் கூறினேன். இவள் கேட்கவில்லை. ஆனால் இன்று நாங்கள் எதற்காகப் பயந்தோமோ அதனை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

**குந்தி:** எந்த இடரானாலும் எங்களிடம் கூறுங்கள்.

**தலைவி:** இன்றும் அதனையே கூறுகிறேன். இது எமது மூதாதையர்கள் வாழ்ந்த பூமி... நீங்கள் போக வேண்டியதில்லை. நானே போகிறேன்.

**தலைவன்:** நீ போக வேண்டியதில்லை. இடுக்கண் நேரும் காலத்தில் உன்னை துன்பத்தில் தள்ளிவிட்டு நான் மட்டும் வாழலாம் என்ற கருத்துடன் அக்னி சாட்சியாக நான் உன்னை ஏற்கவில்லை. என்னோடு மகிழ்ச்சியாக வாழ்ந்த காலத்தின் பயனாக குழந்தைகளைப் பெற்றெடுத்தாய். அவர்களை வளமார வளர்க்க வேண்டியவள் நீயல்லவா...? அதுதான் உன் கடமை..!

**தலைவி:** அதனைத் தவிர தங்கள் பால் வேறு கடமை எனக்கில்லையா...?

**தலைவன்:** எனக்காக உன் உயிரை இழக்கலாகாது.

**குந்தி:** உயிரை இழப்பதைப்பற்றிக் கூறுகிறீர்களே! காரணம் என்னவென்று கூறுங்கள் அண்ணா....!

**மகள்:** இந்த வீட்டுப் பிரச்சனைகளில் உங்கள் இருவருக்கும்தான் உரிமையுண்டு என்று கருத வேண்டாம். எனக்கும் தம்பிக்கும்கூட உரிமையும் கடமையும் உண்டு. நானே போகப்போகிறேன்.

**தலைவி:** உன்னை ஒரு அரக்கனுக்குப் பலியிடவா இத்தனை காலம் வளர்த்தோம்...?

**மகள்:** உங்களுக்கு துன்பம் வந்தால் அதில் பங்கு கொள்ளவேண்டிய கடமை எனக்குமுண்டு. பெண்ணாகிய என்னை என்றாவது ஒருநாள், ஒருவனின் கையில் ஒப்படைக்கத்தானே போகின்றீர்கள்? ஏன் யமதர்மனிடம் என்னை இப்போதே ஒப்படைக்கத் தயங்க வேண்டும்?

**தலைவன்:** இல்லை மகளே! நீ சந்ததி விருத்திக்கு ஒரு கருவியாகப் படைக்கப்பட்டவள். உன்னைப் பலியிடுவது எதிர்காலப் பரம்பரையினையே வேரோடு பிடுங்குவதாகி விடுமல்லவா...? அது மட்டுமல்லாமல் பகாசூரன் வாரத்துக்கு ஒரு ஆளைப் புசிப்பான். நீ ஒரு தனி மனிதனல்ல. ஒரு சந்ததியின் வித்தாகிய உன்னை அவனுக்குப் பலியிட முடியாது.

**சிறுவன்:** அப்போ, நான் போய் அந்த அரக்கனை கொல்லட்டுமா...?

**குந்தி:** அண்ணா! யார் அந்தப் பகாசூரன்? உங்கள் பிரச்சனை என்ன? விபரங்களை என்னிடம் தயவு செய்து கூறுங்கள்!

**தலைவன்:** பதின்மூன்றாண்டுகளுக்கு முன் பகாசூரன் இந்த நகரைப் பிடித்தான். அரசன் வேறு நாட்டுக்கு ஓடிவிட்டான். பகாசூரன் பசி எடுக்கும்போதெல்லாம் நாட்டு மக்கள் பலரைப் பிடித்து உண்டு வந்தான். இதனால் அவனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து, வாரத்துக்கொரு தடவை ஒரு வண்டி நிறைய உணவுடன் வீட்டுக்கொருவரை அவன் இருக்கும் குகைக்கு அனுப்புவோம். உணவையும் ஆளையும் அவன் உண்டுவிடுவான். இன்று நான் போகவேண்டிய நாள்.

**தலைவி:** மன்னவனே பயந்தோடிவிட்ட பின்னர் மக்கள்தான் என்ன செய்யமுடியும்?

**தலைவன்:** உறுதியற்ற மன்னனும் கோழைகளான மக்களுமிருந்தால் நாட்டில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ முடியுமா? என் குடும்பத்தவர் எவரையும் பலியிட முடியாது. ஆகவே நானேதான் போக வேண்டும்.

**குந்தி:** எனது பிள்ளைகளையும் உங்கள் குடும்பத்துடன் சேர்த்துக்கொள்ள ஏன் தவறினீர்கள் அண்ணா...? உங்கள் இல்லத்தில் அடைக்கலம் தந்தீர்கள். ஆகவே தங்கள் இல்லத்தினைப் பாதுகாப்பதும் எமது கடன்.

**தலைவன்:** எங்கள் பிரச்சனையினை அதிதிகளான உங்களிடம் சுமத்த முடியாது.

**குந்தி:** ஆண்டவன் எனக்கு ஐந்து குமாரர்களைத் தந்திருக்கிறான். அவர்களில் ஒருவனை இழந்தாலும் பரவாயில்லை. குடும்பத் தலைவனை இழந்தால் ஏற்படும் துன்ப துயரங்களை நான் அனுபவித்தவள். ஆகவே உங்களுக்குப் பதிலாக எனது மகன் ஒருவனை அனுப்பப் போகிறேன்.

▫▫▫

**காலத்தின் குரல்:** குந்தியின் தீர்மானம் பாரதப் பண்புக்கு பெரும் அழுத்தத்தினைத் தருகிறது. ஓர் அதிதி தனக்குப் புகலிடமளிக்கும் இல்லத்துக்கோ இடத்துக்கோ நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டவன். தன்னை அணைத்து ஆதரிப்பவருக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தனது பிரச்சனையாகக் கருத வேண்டும். இருப்பினும் பலரை உறுப்பினராகக் கொண்ட ஒரு குடும்பத்தின் பங்களிப்பினைப் பற்றி ஒரே நபர் தீர்மானிக்க உரிமையில்லை. குந்தி ஐவருக்கும் தாயாக இருந்தபோதிலும் தானாக எடுத்த முடிவு ஏற்புடையது தானா என்பது விமர்சனத்துக்குரிய தொன்றாகும்.

▫▫▫

ஏகசக்கர நகர்-இரவில் யுதிஷ்டிரன் ஆழ்ந்த யோசனையிலுள்ளான்.

**குந்தி:** இந்த வீட்டில் அடைக்கலம் புகுந்த நமக்கு இந்த வீட்டினைக் காப்பதும் கடமையல்லவா? மக்கள் துயரம் களைவது சத்திரியரின் கடமை தானே மகனே?

**யுதிஷ்:** அம்மா! தங்கள் முடிவில் எந்த ஐயப்பாடும் கிடையாது. அதிதியின் கடமையும் சத்திரியரின் கடமையும் தாங்கள் கூறுவதுபோல் உண்மையானவையே. அதிதி தான் தங்கியிருக்கும் வீடு பற்றி எரியும்போது; அது தனது சொந்த வீடு அல்ல என்று வாழாவிருக்கலாகாதுதான்.

**குந்தி:** அப்போ உன் கவலைக்குக் காரணம் தான் என்னவோ...?

**யுதிஷ்:** அம்மா! இத்தகைய ஒரு நெருக்கடியில் எனக்குத்தானே முன்னுரிமை வழங்கப் பட்டிருக்க வேண்டும். மூத்தவன் நான் இருக்க இளையவனான பீமனை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?

**குந்தி:** மகனே! நீ என் மூத்த மகன் மட்டுமல்ல. அஸ்தினாபுரத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அஸ்தினாபுர மக்களின் முன் நான் தலை குனிந்து நிற்பதற்குப்பதிலாக எனது ஏனைய நாலு மைந்தர்களையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்.

**சகா:** நான் இளையவன் என்பதனால் என்னிடம் இந்தப் பொறுப்பினைத் தந்திருக்கலாமே!

**அர்ச்:** இளையவர்களான உன் தம்பி நகுலனும் நீயும் இந்த முடிவுக்கு வர அருகதையற்றவர்கள். பீமண்ணன் அல்லது நான்தான் இந்தப் பணிக்குப் பொருத்தமானவர்கள் தம்பி!

**பீமன்:** அம்மாவின் தீர்மானத்தை நீ ஏன் குழப்ப நினைக்கிறாய்? பீமன்தான் இப்பணிக்கு உரியவன் என்று அம்மா தீர்மானித்தாகிவிட்டது. இதில் எவரும் தலையிட வேண்டியதில்லை. தவிர, இக்கடமையிலீடுபட எனக்குத்தான் உரிமை அதிகம். சகோதரர்களாகிய உங்கள் அனைவருக்கும் நான் மிகவும் கடன் பட்டுள்ளேன்.

**யுதிஷ்:** கடனா...? என்ன வகையில்...?

**பீமன்:** அண்ணா! நீங்கள் அனைவரும் உட்கொள்ளும் உணவின் மொத்தத்தில் பாதியினை நான் உண்டு வந்தேன். ஆகவே உங்கள் அனைவரது பிரச்சனைகளின் மொத்தத்தில் அரைவாசியினையாவது ஏற்க வேண்டியது எனது கடமை. அது மட்டுமல்ல ஐயமாகச் சேர்த்து வரும் உணவினைக் கொண்டு என் பசியினைத் தீர்ப்பது நடக்காத காரியம். பகாசூரனுக்கு 1200 சேர் அரிசி வேக வைத்த சோறும் அதே அளவு பருப்பு முதலானவையும் உணவாக அனுப்பப்படும். இந்த உணவினை நானே உண்ணும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமல்லவா....?

**யுதிஷ்:** சரி தம்பி பீமா! நீயே போய் வெற்றியுடன் திரும்புவாயாக.....!

▫▫▫

கிராமத்தவர்கள் அனைவரும் திரண்டுள்ளனர். பீமன் தாயையும் சகோதரர்களையும் வணங்கிய பின் உணவு வண்டியுடன் பகாசூரனின் குகையினை நோக்கிச் செல்கிறான்.

பாண்டவர்கள் தங்கியிருந்த இல்லத் தலைவர் பீமனை அறிமுகப்படுத்தி வழியனுப்புகிறார்.

**பீமன்:** *(வண்டி இழுக்கும் மாடுகளிடம்)* பாரத்தைத் தாங்கி வந்த உங்களுக்கு களைப்பாக இருக்கும். நல்ல பசுமை நிறைந்த இந்த வனத்தில் நன்றாக மேயுங்கள். பகாசூரன் வந்தால் இந்த உணவில் மீதி வைக்கமாட்டான். ஆகவே நான் கொஞ்சம் தின்று பார்க்கிறேன்.

பீமன் வண்டி நிரம்ப இருந்த முழு உணவையும் உண்டு முடிக்கிறான். அப்போது குகையிலிருந்து பகாசூரன் வெளிவருகிறான்.

**பகாசூ:** என்ன...! இன்னும் என் உணவு வரவில்லைப் போலிருக்கிறதே! இன்று ஏகசக்கர நகரில் வாழும் எவரையும் விட்டு வைக்கப்போவதில்லை. *(பீமனைப் பார்த்து...)* ஏய் சிறுவனே! என்னுடைய உணவை ஏன் உண்ணுகிறாய்...?

**பீமன்:** கொஞ்சம் பொறு. இதுபோல் சுவையான உணவினை எப்போதும் நான் உண்ணவேயில்லை...!

**பகாசூ:** ஓஹோ அப்படியா...? எனக்கு உன் எலும்புகளும் நல்ல சுவையாக இருக்கும் போல் இருக்கே!

- இருவருக்கும் யுத்தம் தொடங்குகிறது. கடுமையான போராட்டத்தின் பின்னர் பகாசூரனின் கொம்புகளை பீமன் பிடுங்கி அவனை கீழே வீழ்த்திக்கொன்று விடுகிறான்.
- பாதையில் சென்ற வழிப்போக்கர்கள் பகாசூரன் இறந்து கிடப்பதைக் காண்கின்றனர்.

**ஒருவன்:** பகாசூரன் வாழும் குகை இது. இப்பக்கம் நாம் வந்திருக்கவே கூடாது.

**மற்றவன்:** அதோ...அங்கே பார்! பகாசூரன் மாண்டு விட்டான்...!

**மூன்றாமவன்:** வாருங்கள். ஏகசக்கர நகர மக்களிடம் போய்க்கூறுவோம்.

ஏகசக்கர நகர மக்களிடம் தகவல் கூறப் பட்டதும் மக்கள் குதூகலிக்கின்றனர்.

**ஒருவர்:** இந்தக் கொடியவன் அழிக்கப் பட்டமைக்கு மகாதேவனுக்கு பூசை வைக்கவேண்டும்.

**மற்றவர்:** முதலில் பகாசூரனை ஒழிக்க உதவிய குடும்பத்துக்கு நன்றி கூறவேண்டுமல்லவா...?

எல்லோரும் பிராமணரின் வீட்டுக்குப் புறப்படுகின்றனர்.

▫▫▫

பாண்டவர்கள் தங்கியிருக்கும் வீடு.

**சிறுவன்:** எனக்கு சண்டை போடக் கற்றுக் கொடுங்கள். இல்லையேல் நான் உங்களோடு சண்டை போடுவேன்.

**பீமன்:** ஒரு பிராமணப் பிள்ளையான உனக்கு சண்டை வேண்டாமப்பா...!

**குந்தி:** அவன் உன்னிடம் சண்டை போட்டால் அவன் தோற்றுப் போய்விடுவானே...! நீ பகாசூரனை விட சிறந்த வீரனல்லவா குழந்தாய்...!

**யுதிஷ்:** ஆமாம். நீயே சிறந்த வீரன். மனிதன் நாராயணனின் வடிவமல்லவா? ஆனால் உனது வலிமையினை துஷ்பிரயோகம் செய்யலாகாது.

மக்கள் ஆரவாரத்துடன் வரும் ஓசை கேட்கிறது.

**குந்தி:** பாராட்டுவதற்காக மக்கள் திரண்டு வருகிறார்கள்போல் தெரிகிறது.

**சிறுவ:** அப்பா அவர்கள் இங்குதான் வருகிறார்கள்...!

பிராமணர் தன் குடும்பத்தாருடன் மக்களைக் காணச் செல்கின்றார்.

**குந்தி:** மக்காள்! ஏகசக்கர நகரைவிட்டு நீங்கும் வேளை வந்துவிட்டது.

**யுதிஷ்:** ஆமாம் அம்மா! இங்கு தொடர்ந்து தங்கினால் நாம் யார் என்பதைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

வீட்டின் முன்புறம் கூட்டம் கூடிவிட்டது.

**நகரத்தலைவர்:** பண்டிதர் அவர்களே! மக்களின் பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**தலை:** என்னை ஏன் பாராட்ட வந்தீர்கள்...? வேறொருவருடைய செயலுக்காக என்னைப் பாராட்டுவது அழகல்லவே...! எனது வீட்டில் விருந்தாளியாக வந்துள்ள ஒருவர்தான் இந்தச் சாதனையைப் படைத்தார்.

**ஒருவர் :** யார்? அந்த அம்மாவுடன் இருக்கும் நால்வரில் ஒருவரா...?

**தலை:** இல்லை ஐவரில் ஒருவர்!

**மற்ற:** அப்போ அவர்களிடம் ஏதோ மாயவித்தை இருக்கவேண்டும்.

**அடுத்தவர்:** எங்கே அந்தப் பராக்கிரமசாலியை அழைத்து வாருங்கள் பார்க்கலாம்.

**தலைவ:** *(மனைவியிடம்)* எங்கே அந்த ஐவரையும் தாயையும் அழைத்து வா... ஏகசக்கர நகரமே அவர்களைக் காணவந்துள்ளது.

**தலைவி:** அவர்கள் போய்விட்டார்கள்.. நான் எவ்வளவோ தடுத்தேன். அவர்கள் கேட்கவில்லை. பகாசூரனைக் கொல்வது மட்டும் எங்கள் குறிக்கோளல்ல; வேறு பல காரியங்கள் உள்ளன என்று கூறிவிட்டுப் போய்விட்டனர்.

▫▫▫

கானகத்தில் குந்தியும் மைந்தர்களும்

**சகாதேவன்:** அர்ச்சுன அண்ணா! பெரிய அண்ணா ஏகசக்கர நகரைவிட்டு வெளியேறும்படி கூறாவிட்டால் நாம் அங்கேயேதான் இருப்போம்...!

**அர்ச்:** ஆமாம்..! ஏன் இந்தக் கேள்வி?

**சகா:** இல்லை...ஊர்மக்கள் பெரும் விருந்து வைத்து பீமண்ணனை நன்றாகக் கவனித்திருப்பார்கள். நமக்கு வயிறார நல்ல உணவுகிடைத்திருக்கும் அல்லவா?

**பீமன்:** ஓஹோ அப்படியா? நான் உள்ள கடும் வேலைகளைச் செய்வது...நீங்கள் சுவையாக உண்ணுவது... அப்படித் தானே...? அம்மா நீங்கள் இவனுக்கு அளவுக்கு மீறி செல்லம் கொடுத்துக் கெடுத்து விட்டீர்கள்...!

**யுதிஷ்:** அவன் இளையவன் தானே தம்பி! நீ எங்களுடன் இல்லாத வேளையிலெல்லாம் அவன்தான் உன் பிரிவினை நினைத்து அதிகமாக ஏங்குவான். நீ இல்லாமையினால் உண்ணும் உணவில் உருசியே இல்லாமற் போய்விட்டது என்பான்.

**சகா:** உண்ணும் உணவே எனக்கு சீரணிப்பதில்லை அண்ணா...!

**பீமன்:** அப்போ நீங்கள் உண்ணும் உணவு சீரணிப்பதற்கு நான்தான் மருந்தானேனா?

**குந்தி:** பீமா! ஒருவன் துன்பத்திலிருந்தால் அவன் உண்ணும் உணவு எவ்வாறு சீரணிக்கும்? நாங்கள் அனைவருமே உன் பிரிவால் வேதனை அடைந்தோம் அப்பா...!

**சகா:** நாங்கள் பீமண்ணாவை எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க அவர் அண்ணி கொடுக்கும் அறுசுவை உணவை அக மகிழ்வோடு உண்டு மகிழ்ந்து கொண்டிருந்திருக்கிறார்....!

எல்லோரும் சிரித்து மகிழ்கின்றனர்.

**பீமன்:** அம்மா! இன்னும் எத்தனை நாளைக்கு நாம் இப்படி அலைந்து திரிய வேண்டும் அம்மா?

**யுதிஷ்:** அஸ்தினாபுரத்தில் ஏற்ற சூழ்நிலை உருவாகட்டும் பார்க்கலாம்.

**அர்ச்:** சூழ்நிலை தானாக மாறப்போவதில்லை அண்ணா...! அந்த சூழ்நிலையினை நாமே மாற்றியாக வேண்டும்!

**யுதிஷ்:** முதலில் தானாக மாற்றமடைவதற்கு ஒரு சந்தர்ப்பத்தினை அளித்துப் பார்ப்போமே தம்பி...!

__பின்னணிப்பாடல்:__

**உலகம் சுழலும் வேகமதாலே**
**பகலுமிரவும் படர்வதேபோல்**
**காலக் கோலம் களி நடம் புரிவது**
**காலச் சக்கரச் சுழலாலே**

**மானிடனொருவன் மலர்ந்திடும் போது**
**மறைவயனிட்ட விதி வரிகள்**
**இறை யழித்தாலும் இறப்பதில்லை**
**குறைவதுமில்லை மறவாதே.**

(இன்னும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
4 3 6 2 3 1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

## பாரமில்லாத பாதணி

தருவது

லியோ டெ





JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4 3 3 6 8 6
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11

தடகளப் போட்டிகளில் வேகமாக ஓட வேண்டிய வீரர்கள் அணியும் உடைகள் எவ்வளவுக்கெவ்வளவு எடை குறைந்தவையாக இருக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய பாதணிகளும் எடை குறைந்தவையாக இருக்க வேண்டும். பாதணிகளில் பிரதானமாகக் கருதப்படும் அடித்தோலின் நடுப்பகுதி இப்புதிய ரகப் பாதணியில் இல்லை. மேற்புறத் தோலும் அளவில் குறைந்ததாகவே இருக்கிறது. பாதணியைக் கட்டுவதற்கு கயிறும்கிடையாது போத்தான்களும் கிடையாது. மாறாக தானாகவே காற்றை உள்ளிழுத்து பாதணியை பாதத்துடன் ஒட்ட வைக்கும் ஒருவகை அம்சம் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சாதாரண பாதணியை விட 25 சதவிகிதம் எடை குறைக்கப்பட்டுள்ளது. இப்பாதணியின் விலை 125 டொலர்தான் நம்நாட்டுக்கும் விரைவில் வரும்.

## புதிதாய் ஒரு

## ரிங் ரிங்



கம்பியில்லாத தொலைபேசிகள் நமது நாட்டில் இன்று பரவலாகப் பாவனைக்கு வந்துவிட்டன. இவற்றில் நவீன வசதிகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. தொஷிபா டெலிக்கொம் 4600 CT என்ற இந்த வகை தொலைபேசியில், உங்களுடன் பேசுபவரின் உருவத்தைப் பார்த்துக்கொண்டே பேசலாம். அண்மையில் உங்களுடன் தொலைத்தொடர்பு கொண்டவர்களின் பட்டியலைப் பார்க்கலாம்.

அதுமட்டுமல்லாமல் குறிப்பிட்ட அளவு தொலைபேசி இலக்கங்கள், அவற்றுக்குரியவர்களின் முழு விபரங்கள் போன்ற அட்டவணைகளையும் பதிந்து வைத்துக்கொள்ள முடியும். அமெரிக்க வட கரோலினா மாநிலத்தில் பாவனைக்கு வந்துள்ள இதன் விலை 256 டொலர் மட்டுமே.

# ஒண்ணாய் இருக்க கத்துக்கணும்



## இதயத்தை கவனிக்க



### இருதய நோயாளிகளுக்கு ஒரு நற்செய்தி!

இவர்களின் இருதயம் அடிக்கடி தன் பணியினைச் சரிவரச் செய்யாமல் தாமாக இயங்க ஆரம்பித்து விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் இயக்கத்தை தானாகவே நிறுத்தி விடுவதுமுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நோயாளியின் மார்பில் நாமே நம் கைகளால் அழுத்தம் கொடுத்து, இருதயத்தை இயக்கி இரத்த ஓட்டத்தை சீர்படுத்த முயற்சிக்க வேண்டும். பால்டிமோர் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் இருதய நோய் ஆய்வு மனையிலுள்ள ஆய்வாளர்கள், கணனியின் உதவியுடன் தானாகவே இருதயத்துக்கு அழுத்தம் கொடுத்து இரத்த ஓட்டத்தைத் தூண்டும் புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளனர். மருத்துவமனையிலுள்ள நோயாளியின் மார்பில் இதனைக் கட்டிவிட்டால் அவருடைய இருதயம் உரிய பணியிலீடுபட மறுத்தவுடன், இது தானாகவே காற்றை உள்ளிழுத்து வெளியேற்றி இருதயத்தை இயங்கத் தூண்டிவிடும். இக்கருவி இப்பொழுது பரிசோதனை நிலையில் இருக்கிறது. விரைவில் இருதய நோய் மருத்துவ பீடங்களின் பாவனைக்கு வரவிருக்கும் இயற்றின் விலை 5,000 டொலர் முதல் 10,000 டொலர் வரை விற்கப்படலாம் என்று தெரிகிறது.

## புதிதாய் ஒரு வலியது



ஜப்பானின் ரொயோட்டா மோட்டார் வண்டி தயாரிப்பாளர்கள் அதிக பாரமுள்ள பொதிகளைக் கொண்டு செல்லக்கூடிய வலுகொண்ட சாதனம் ஒன்றினை தங்கள் '1994-பிரேவியா' வாகனங்களில் பொருத்தியுள்ளனர். 5,000 rmp என்ற கணக்கில் வலுவினை வழங்கவல்ல இப்புதிய இணைப்பு வண்டியின் முன்புற இயந்திரத்துடன் பொருத்தப்படுகிறது. வண்டியினுள் முழு அளவிலான பாரத்துடன் பின்புறம் படகையும் இழுத்துச்செல்ல வல்லது இச்சாதனம். இதனுடன் குளிரூட்டவும் வசதியானது.

தினமுரசு
வாரமலர்



ஒட்டிப் பிறந்த இரட்டையர் வாழ்வில் சுவையும் உண்டு. சுவாரசியமும் உண்டு.

இன்று உயிருடன் வாழும் சயமிய இரட்டையர் (ஒட்டிப்பிறந்தவர்கள்)களில் ஆக வயதில் கூடியவர்கள் மச்சா மற்றும் டச்சா கிரிவோசிலியப்போவ் ஆகியவர்களே. ரஷ்ய நாட்டின் தலைநகர் மொஸ்கோவில் அங்கவீனர்களுக்கான விடுதியில் வசிக்கும் இவர்களுக்கு 44 வயதாகிறது. ஒரே இடுப்பில் ஒட்டிப்பிறந்த இந்த இரட்டையர் குண நலன்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தென்படுகின்றன. மச்சா புகைப்பழக்கமுடையவர். மதுப்பழக்கமில்லை. புகையின் மணத்தையே விரும்பாத டச்சா நன்றாகக் குடிப்பார். இதனால் ஒருவருக்குப் பிடிக்காத ஒன்றை மற்றவர் செய்யும்போது இருவரிடத்திலும் கருத்து மோதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறார்கள். சிறுவயதிலிருந்தே இருவரிடம் முரட்டு சுபாவமும் சேர்ந்து வளர்ந்திருக்கிறது. இவர்களுடைய தோற்றத்தைப் பார்த்து யாராவது கேலியோ கிண்டலோ செய்தால் அவர்களை இலகுவில் விட்டுவைக்க மாட்டார்கள். கையில் கிடைத்த எந்தப் பொருளினாலும் தாக்குவார்கள்.

மச்சாவையும் டச்சாவையும் பலதரப்பட்ட சவால்களிலிருந்து மீட்டு உயிருடன் வாழவைக்க பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருபவர் டாக்டர் அலெக்சாண்டர் ஷென்சென்கோ என்பவராகும்.

கடந்த சனிக்கிழமை (04.06.94) [illegible] தொலைக்காட்சியில் சயமிய இரட்டைக் குழந்தைகளை காண்பித்தார்கள். அது ஏற்கனவே முரசில் வந்த குழந்தைகள் தானோ பார்த்தீர்களா? பார்க்காதவர்கள் பார்த்தவர்களிடம் கேட்டறியலாம்.

## ஏறி மிதித்தாலும் உடைந்து போகாது



குளிக்கோன் என்படும் இச்சாதனம் சாலையிலுள்ள இடர்பாடுகளை வண்டிச் சாரதிகளுக்கு எடுத்துக்காட்டவல்லது. கீழே வைத்தால் தானாகவே தரையோடு ஒட்டிக்கொள்ளும். மேற்புறத்தில் மெல்லத் தொட்டு இழுத்தால் கழன்றுவிடக்கூடியது.

அதிதூரம் ஒளியை இழுக்கும் பிரதிபலிக்கக்கூடிய சக்தி கொண்ட இச்சாதனத்தினை இங்கிலாந்திலுள்ள பாதைப் பாதுகாப்பு நிறுவனம் அமைத்துள்ளது.

நமது நாட்டில் சாலைகளில் உள்ள பாதைத் தடுப்பு சாதனங்கள் வாகனங்கள் மோதினால் உடைந்து விடும். ஆனால் இது வளைந்து கொடுத்து சமாளித்துக்கொள்ளும். நம் நாட்டுக்கும் தருவித்தால் உபயோகமாக இருக்கும்.